26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN
# உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Cnaada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

Issue: 1362

Friday May 13, 2022


## Tamil Canadian Businessmen met with Trade Commissioner of Canadian High Commission in England

## இங்கிலாந்தில் கனடிய தூதரகத்தில் பணியாற்றும் உயர் அதிகாரியைச் சந்தித்த கனடிய வர்த்தகப் பிரமுகர்கள்

இங்கிலாந்தில் இயங்கிவரும் கனடிய தூதரகத்தில் பணியாற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பொறுப்பான உயர் அதிகாரியான **Mr. Jason Walsh** என்பவரை **CANADA HOUSE** என்று அழைக்கப்பெறும் உயரிய அலுவலக வளாகத்தில் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பத்தை 3 கனடிய வர்த்தகப் பிரமுகர்கள் பெற்றார்கள்.

அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழர்கள் மாநாட்டில் பங்கெடுக்கும் வகையில் இங்கிலாந்து சென்றிருந்த கனடா வாழ் நண்பர்களான கனேடியத் தமிழர் பேரவையின் தலைவர் திரு சிவன் இளங்கோ. கனடாவின் வர்த்தகப் பிரமுகர் திரு சங்கர் நல்லதம்பி அவரது பாரியார் மற்றும் கனடாவில் சூரிய ஒளி மூலம் மின்சக்தியை தயாரிக்கும் வர்த்தக நிறுவனத்தை நடத்தும் திரு நன்னி பிரதீபன் ஆகி-யோர். இங்கிலாந்தில் இயங்கிவரும் கனடிய தூதரகத்தில் பணியாற்றும் மேற்படி வுசயனந ஊழஅஅளைளழைநெச துயளழெ றுயடளா என்ற உயர் அதிகாரியைச் சந்தித்து உரையாடி கனடா-இங்கிலாந்து நாடுகளுக்கு இடையில் உள்ள வர்த்தக உறவுகள் தொடர்பாக கலந்துரையாடினார்கள்.

*செய்தி - **ARJUNE -LJI***








# தனது சேமிப்பு பணத்தை இலங்கை மக்களுக்கு வழங்க கையளித்த கீழக்கரை சிறுமி

இலங்கை செய்திகள்
Sri Lanka News

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகர் மன்ற உறுப்பினர் சஹானாஸ் ஆபிதாவின் தங்கை பையினாவின் மகள் பில்சா சாரா பள்ளி மாணவியான இவர் தனது சேமிப்பு பணமான 4400 ரூபாவை இலங்கை மக்களுக்காக கையளித்துள்ளார்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் வசிக்கும் மக்கள் உணவின்றி தவித்து வருவதோடு,பல்வேறு பொருளாதார நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை மக்களுக்காக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர் லால் குவமத்திடம் தனது சேமிப்பு பணமான 4400 ரூபாவை சனிக்கிழமை (7) கையளித்தார்.

**- மன்னார் நிருபர்**

# மகிந்தா ராஜபக்ச குடும்பத்துடன் திருகோணமலைக்கு ஹெலிகாப்டரில் தப்பியோட்டம்?

## கடற்படை தளத்தை சூழ்ந்து மக்கள் போராட்டம்



இலங்கையில் ராஜபக்சே குடும்பத்தினருக்கு எதிராக பெரிய அளவில் மக்கள் போராட்டம் நடந்து வரும் நிலையில் மஹிந்தா ராஜபக்சே மற்றும் அவரது குடும்பத்தினர் ராணுவ பாதுகாப்புடன் கொழும்பிலிருந்து புறப்பட்டு திருகோணமலை கடற்படை தளத்துக்கு ஹெலிகாப்டரில் தப்பிச் சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது. இலங்கையில் பெட்ரோல், டீசலுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரித்துள்ளது. பொருட்கள் விலை உயர்வு மேலும் அதிகரித்துள்ளதுடன் பொருளாதார சுழற்சியும் தடைபட்டுள்ளது. இதனால் இலங்கை அரசியலில் அங்கம் வகிப்பவர்கள் பதவி விலக வேண்டும், மக்கள் அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தலைநகர் கொழும்பில் நாடாளுமன்றம் செல்லும் சாலையில் ஆயிரக்கணக்கான மாணவர் போராட்டக்காரர்கள் கடந்த சில தினங்களாக முகாமிட்டு போராடி வருகின்றனர்.

இந்தநிலையில் இலங்கையில் போராட்டம் நடத்த வரும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக ராஜபக்ச ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினர். கொழும்பு அலரி மாளிகைக்கு அருகே அமைக்கப்பட்டிருந்த போராட்டக்காரர்களின் கூடாரங்களை கிழித்தெறிந்து தாக்குதல் நடத்தி அவர்கள் மீது போராட்டக்காரர்கள் பதில் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து மிகிந்தா ராஜபக்சே பதவி விலகினார். இருப்பினும் அதிபர் கோத்தபய பதவி விலகக்கோரி கொழும்பு நகரில் பல இடங்களில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வருகின்றன. சில இடங்களில் போலீஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்த மோதலில் 5 பேர் கொல்லப்பட்டனர். இதனால் இலங்கையே பற்றி எரிகிறது. ஆவேசமடைந்த மக்கள் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்சேவின் பாரம்பரிய வீட்டை நேற்று இரவு எரித்தனர். ராஜபக்சே குடும்பத்தினரின் வீடுகள், சொத்துகள் தீக்கிரையாக்கப்பட்டன. 35 வீடுகள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன.இன்று காலை மகிந்த ராஜபக்ச, தலைநகர் கொழும்புவில் உள்ள பிரதமர் மாளிகையிலிருந்து ராணுவப் பாதுகாப்புடன் வெளியேறினார். மருத்துவ சிகிச்சை என்ற பெயரில் அவர் வெளிநாடு தப்பிச் செல்லவிருப்பதாக தகவல் வெளியானது. மகிந்தா ராஜபக்சே மற்றும் அவரது குடும்பத்தினர் இன்று பலத்த பாதுகாப்புடன் கொழும்பிலிருந்து புறப்பட்டு திருகோணமலையில் உள்ள கடற்படை தளத்தில் தஞ்சமடைந்துள்ளாக தெரிகிறது. முன்னாள் பிரதமர் மற்றும் அவரது குடும்பத்தினர் ஹெலிகாப்டரில் கடற்படைத் தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கொழும்பில் இருந்து 270 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கடற்படைத் தளத்தை அவர்கள் சென்றடைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த தகவல் பரவிய நிலையில் அங்கும் ஏராளமானோர் கூடினர். கடற்படைத் தளத்திற்கு வெளியேயும் போராட்டங்கள் நடந்து வருகிறது. இதனையடுத்து அங்கும் போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கை ஜனாதிபதி இராஜினாமா செய்தால் தான் எழுச்சி கொண்டுள்ள மக்கள் புரட்சியை முடிவுக்கு கொண்டு வர முடியும்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்



மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆகியோர் காலம் கடந்து முடிவுகள் எடுப்பது தவறு.மக்கள் விரும்பவில்லை என்றால் அவர்கள் தமது பதவிகளை விட்டுச் செல்ல வேண்டும் என்பதே காலத்தின் நீதி. பிரச்சினைகளை ஏற்படுத்தி இன முறுகலை தூண்டி விட்டு இழப்புக்களை சந்தித்த பின்பு தமது பதவிகளை ராஜினாமா செய்வது என்பது முட்டால் தனம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் வைத்து புதன்கிழமை (11) அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு மிகவும் கொந்தளிப்பான நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றது. சிங்கள தேசத்தில் போராட்ட வடிவில் பல விடையங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது.மஹிந்த ராஜபக்ஷவின் ஆரம்ப பிரச்சினையே இன்று பாரிய அளவில் வெடித்துள்ளது.

பொருளாதார பிரச்சனை பின்தங்கிய நிலையிலே இவ்வாறான ஒரு சூழலை உருவாக்கி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் அவருடைய அரசாங்கம் மிக மோசமான ஒரு சூழலை உருவாக்கி உள்ளது என்பதை பார்க்கும் போது இது ஒரு கண்டனத்திற்குரிய விடையமாக உள்ளது.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். எங்களுடைய பங்களிப்பு குறித்த விடையங்களில் இருக்கின்ற போது விடுதலைப்புலிகளை காரணம் காட்டி திசை திருப்புகிற கெட்டித்தனம் இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றது.

விடுதலைப்புலிகளை காரணம் காட்டி சிங்கள மக்களை திசை திருப்புகின்ற ஒரு நிலையை அவர்கள் ஏற்படுத்துவதற்கு நாங்கள் அனுமதிக்க கூடாது.

காலச்சக்கரம் சுழன்று கொண்டு இருப்பதை பார்க்கின்ற போது இந்த மே மாதத்தில் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்தார்கள்.

உயிர் அவலம் ஏற்பட்டது.மே-18 இல் எமது மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட முடியாத நிலையில் அனாதையாக கைவிடப்பட்டது.தனது தந்தை உறவுகள் உயிரிழந்து சடலமாக கிடக்கும் போது அதனை தாண்டி வருகின்ற அவலமான சூழ்நிலை ஏற்பட்டது.

மே மாதம் என்பது எமது மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கின்றது. எங்களுடைய மக்களுக்கு எதிராக செயல் பட்டவர்களுக்கு எதிராக இந்த மே மாதத்தில் நிலமைகள் மாறி இருப்பது கவலை தருகின்ற விடையமாக இருந்தாலும், இறைவன் ஒரு நியாயமான செயல்பாட்டை மேற்கொண்டுள்ளார் என்று நாங்கள் கருத முடியும்.

சிங்கள மக்கள் மத்தியில் நாங்கள் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களுக்கும் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது.

சிங்கள மக்களால் ஆதரிக்கப்பட்ட சம்மந்தப்பட்டவர்கள் இன்று இந்த மக்களாலேயே துரத்தப்பட்டு பழிவாங்கப்படுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்கள் உள்ளிட்ட எமது மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இறைவனின் நாட்டம் எம் மக்களுடன் உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

எனவே தமிழர்களாகிய நாங்கள் முழுமையாக குறித்த போராட்டங்களில் இணைந்து கொண்டிருந்தோம் என்றால் இந்த அரசாங்கம், ஜனாதிபதி ஆகியோர் குறித்த போராட்டத்தை எமது பக்கம் திசை திருப்பி விடுதலைப்புலிகளின் மீளாக்கம் அல்லது விடுதலைப்புலிகள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்கள் என்று கூறுகின்ற ஒரு நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தி எங்களுக்கு எதிராக ஒரு வன்முறையை தூண்டி விடுகின்ற வாய்ப்புகள் இருக்கின்றது.

எனவே தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இக்காலகட்டத்தில் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில் நாடு முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அன்றாடம் உழைத்து உண்ணுகின்ற மக்கள் தற்போதைய சூழலில் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். மேலும் எரிவாயு, எரிபொருட்கள் இல்லை. இதனால் விவசாயிகள், மீனவர்கள் ஏனைய கூலி தொழிலாளர்கள் பல்வேறு துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே தலைவர்கள் நிதானமாக ஆரம்பத்தில் ஜனநாயக ரீதியில் போராட்டங்கள் இடம் பெற்ற போது அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அந்த சூழ்நிலையில் அந்த விடையத்தை அவர்கள் கையாண்டு இருந்தார்கள் என்றால் இன்று இந்த தலைவர்கள் மக்களினால் மதிக்கப்பட்டிருப்பார்கள்.

ஆனால் அவர்களின் இறுமாப்பு மற்றும் ஆயுதப்போராட்டத்தை எவ்வாறு அடக்கி விட்டோம் என்றது போல் சிங்கள மக்களின் இந்த போராட்டத்தையும் அடக்கலாம் என்று கற்பனையுடன் அவர்கள் செயற்பட்டுள்ளனர். அது இன்று வினையாக மாறியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆகியோர் காலம் கடந்து முடிவுகள் எடுப்பது தவறு.மக்கள் விரும்பவில்லை என்றால் அவர்கள் விட்டுச் செல்ல வேண்டும் என்பதே காலத்தின் நீதி.

பிரச்சினைகளை ஏற்படுத்தி இன முருகலை தூண்டி விட்டு இழப்புக்களை சந்தித்த பின்பு தமது பதவிகளை ராஜினாமா செய்வது என்பது முட்டால் தனம். மக்கள் இன்றும் பல பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.

எனவே ஜனாதிபதி இராஜினாமா செய்ய வேண்டும். அப்போது தான் நாட்டில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சியை முடிவுக்கு கொண்டு வர முடியும். என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# இலங்கை அரசியல் தலைவர்களுக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் விடுத்துள்ள வேண்டுகோள்!



இலங்கை மக்களின் கோரிக்கைகளுக்கு, அரசியல் தலைவர்கள் செவிசாய்க்க வேண்டும் என, பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

“சமீபத்திய காலங்களில், நாட்டின் சமூக மற்றும் பொருளாதார சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, தங்கள் அழுகையை ஒலிக்கும் இளைஞர்களுக்கு” எனது வாழ்த்துக்களை அனுப்புகின்றேன்.

“வன்முறைக்கு அடிபணியாமல், அமைதியான அணுகுமுறையைப் பேணுமாறு, அனைத்துத் தரப்பினரையும் வலியுறுத்துவதில், நான் மத அதிகாரிகளுடன் இணைந்து கொள்கிறேன்”.

எதிர்ப்பாளர்களின் குரல்களுக்கு செவிசாய்க்குமாறு, இலங்கையின் ஆளும் அரசியல் தலைவர்களுக்கும், அழைப்பு விடுக்கின்றேன்.

“மக்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்க்கவும், மனித உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளுக்கு, முழு மரியாதையை உறுதிப்படுத்தவும், பொறுப்புகள் உள்ள அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.” என பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

**- மன்னார் நிருபர்**

DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1362 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 13, 2022

# மக்களால் நிராகரிக்கப்பெற்ற ராஜபக்ச குடும்பத்தை காப்பாற்றவே ரணில் விக்ரமசிங்க இலங்கை பிரதமராகிறார்

## - அனுர குமார திசாநாயக்க தெரிவிப்பு



மக்களால் நிராகரிக்கப்பெற்ற ராஜபக்ச குடும்பத்தை காப்பாற்றவே ரணில் விக்ரமசிங்க மீண்டும் இலங்கை பிரதமராகிறார் என தேசிய மக்கள் சக்தி கட்சித்தலைவர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். இதற்கு அவர் கடுமையான கண்டிப்பையும் தெரிவித்துள்ளார். *(உள்ளே 7ம் பக்கத்தில் தொடர்ச்சி)*

# சுவிற்சலாந்து வாழ் பத்மா தர்மராஜாவை வரவேற்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பெற்ற விருந்துபசாரம்



யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுவிற்சலாந்து தேசத்தில் வாழ்ந்த வண்ணம் சமயப் பணி தமிழ்ப் பணி மற்றும் சமூகப் பணிகள் ஆற்றி வருபவருமாக திருமதி பத்மா தர்மராஜா தற்போது கனடா வந்துள்ளார். அவரை வரவேற்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பெற்ற இராப்போசன விருந்துபசாரம் ஒன்று கடந்த திங்கட்கிழமையன்று ஸ்காபுறோ உணவகம் ஒன்றில் இடம்பெற்றது.

கனடா இலங்கை முன்னாள் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்பர்கள் வர்த்தகப் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்ட மேற்படி விருந்துபசாரத்தில் மொன்றியால் வாழ் எழுத்தாளர் "வீணைமைந்தன்" சண்முகராஜாவும் அழைக்கப்பெற்றிருந்தார். வர்த்தகப் பிரமுகர் கென் கிருபா "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன். "உதயன்" லோகேந்திரலிங்கம் உட்பட பலர் அங்கு பாராட்டுரை வழங்கினார்கள்.

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ALL IN 1 ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
North York, Scarborough & Brampton.
gta credit
Direct Tamil Line (416) 489-2000
Visit: www.GtaCredit.Com

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

# June 2ம் திகி நடைபெறவுள்ள ஒன்ராறியோ மாகாண தேர்தலில் Markham -Thornhill தொகுதியில் எங்கள் லோகன் கணபதியை மீண்டும் தெரிவு செய்வோம்.




தொண்டர்கள், நண்பர்கள் உட்பட அனைவரும் ஒன்றாய் இணைந்து அவரது வெற்றியை உறுதி செய்வோம்.

**Campaign Office: 170 Duffield Dr, Markham, ON**

**ONTARIO PC**

Authorized by the Markham-Thornhill PC Riding Association

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### யாழ்ப்பாணம் பளையில் 134 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பளையில் (ஏ9) கண்டி வீதிக்கு அருகிலும் பஸ் நிலையத்திலிருந்து சிறிது தூரத்திலும் அமைந்துள்ள 134 பரப்பு தென்னங்காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. பளை மத்திய கல்லூரிக்கு மிக அருகில்.
ஒரு பரப்புக் காணி 10 இலட்சத்திலிருந்து 12 இலட்சம் வரை. முழுக்காணியும் ஒன்றாகவே விற்கப்படும். தென்னைப் பயிர்ச் செய்கைக்கும் கடைத் தொகுதிகள் கட்டுவதற்கும் ஏற்றது.
தொடர்புகளுக்கு கனடாவில் உள்ள உரிமையாளரோடு தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி 416 274 5532 அல்லது
மின்னஞ்சல் - sethukavalar@yahoo.com

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### உணவகத்தில் வேலை வாய்ப்பு

ரொறன்ரோ, **Downtown** ல் **College and Bathurst** சந்திப்புக்கு அருகில் நல்ல நிலையில் இயங்கிவரும் புகழ் பெற்ற **Bar** ஒன்றில் **Cook, Kitchen Helper** ஆகிய வேலை வாய்ப்புக்கள் உண்டு. அனுபவம் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு:**
**(647) 515-3693**

### Canada Summer Job Program - Job Posting

**Marketing Assistant**

Responsibilities
-Undertake daily administrative tasks to ensure the functionality and coordination of the office activities
-Support marketing manager in organizing various projects
-Update spreadsheets, databases and inventories with statistical, financial and non-financial information
-Assist in the organizing of promotional events and traditional or digital campaigns and attend them to facilitate their success
-Communicate directly with clients and build trusting relationships

Requirements and skills
-Proven experience as a marketing assistant
-Good understanding of office management & marketing principles
-Demonstrable ability to multi-task and adhere to deadlines
-Well-organized with a customer-oriented approach
-Excellent knowledge of MS Office
-Good communication and people skills
-High School diploma; or relevant work experience

**Salary :** Minimum wage according to the Government Summer Job Program
**Duration of engagement: 3months**

Please forward your application with your updated resume by email to:
**uthayannews@yahoo.com**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

**உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்**

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce
Real Estate
- residential purchase, sale & refinance transactions
Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
**Office: (416) 613 8998**
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண்/பெண்கள் இருவரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு உடன் அழைக்கவும்
**Jeya: (647) 669-2739**

### BASEMENT FOR RENT

**Stouffville** நகரத்தில் **9th and Stouffville Rd** சந்திப்பிற்கு அருகில் புதிதாக திருத்தி அமைக்கப்பெற்ற **2 Bedroom Basement in** உடனடியாக வாடகைக்கு உண்டு. அதிக வசதிகள் கொண்டது. அழகிய **3-pc** குளியல் அறை. **Separate entrance.** தனியான **Washer/dryer. Water softener**, குடிப்பதற்கு **Filtered water system** ஆகியனவும் உண்டு. வாடகை **$1800 all inclusive** எதிர்பார்க்கப்படுகின்றது.

**Please call/text 416-303-6931**

### உணவகத்தில் வேலை வாய்ப்பு

ரொறன்ரோ, **Downtown** ல் உள்ள கனடிய உணவகம் ஒன்றில் **Line Cook, Dish Washer** ஆகிய வேலை வாய்ப்புக்கள் உடனடியாக உண்டு. அனுபவம் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு:**
**647-783-3112**
**அல்லது 416-913-3361**

## உதயன் கதிரோட்டம்

# ரணிலையும் ஏற்றுக் கொள்ளாத தென்னிலங்கை மக்கள்

இலங்கையில் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாகும் வகையில் நேற்று மாலை அரங்கேறியது போன்ற ஒரு அவலமான ஆட்சிக் 'கூத்தை' அரங்கேற்றிய ஜனாதிபதி தன்னை ஒரு சிறந்த ஜனநாயகவாதியாக காட்ட முற்படுகின்றார். உலகில் எந்த நாட்டிலும் இல்லாத ஒன்றாக. , நாடாளுமன்றத்தில் ஒரேயொரு உறுப்பிரைக் கொண்ட ஒரு கட்சியின் தலைவர், அதுவும் பொதுத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டு, தேசியப் பட்டியலில் ஆறுமாத இழுப்படிப்பிற்கு பிறகு தன்னைத்தானே கட்சியின் சார்பில் நியமித்துக் கொண்டவரான ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.
மக்கள் எழுச்சியும் மங்கிப் போன பொருளாதாரமும் கொண்ட நாட்டின் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட ரணிலுக்கு 'நரி' என்ற பட்டப் பெயரும் உள்ளது.

ரணில் 'அக்கிரமசிங்கா' மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டதும், நாடு முழுதும் கொந்தளிப்பும் ஏமாற்றமும் நிறைந்தவர்களாக மக்கள் வீதிகளில் நடமாடுகின்றனர்.
நாடாளுமன்றத்தில் தான் ஒருவர் மட்டுமே உறுப்பினராக இருக்கும் நிலையில் அந்த பொறுப்பை ஏற்பது தார்மீக ரீதியாக சரியா என்பதற்கு அப்பாற்பட்டு ஏராளமான கேள்விகள் உள்ளன.
அவர் பிரதமராகப் பதவியேற்றவுடன் வந்த முதல் வாழ்த்து முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்சவிடமிருந்து. தனது டிவிட்டரில் அவர் விரைவில் நாட்டை சிக்கலிலிருந்து மீட்க புதிய பிரதமருக்கு பழைய பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார். உடனடியாக இதற்கு சமூக ஊடகங்களில் எதிர்ப்புக்கள் தோன்றின.

காலிமுகத் திடலில் ராஜபக்ச அரசிற்கு எதிராகப் போராடியவர்கள், உடனடியாக "ரணில் கோ கம" ரணில் வீட்டிற்கு போங்கள் என்ற கோசத்தை கொட்டத் தொடங்கிவிட்டனர். அவர் பிரதமராக நியமிக்கப்படவுள்ளார் என்று செய்திகள் கசிந்த நிலையில், அவரது நியமனம் முறையற்றது மற்றும் சட்டவிரோதமானது என்று இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் கர்தினால் மால்கம் ரஞ்சித் மற்றும் வண. கலாநிதி ஓமல்பே சோபித தேரர், ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில் தெரிவித்தனர். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு இல்லாத ஒருவரை எப்படி ஜனாதிபதி பிரதமராக நியமிக்கலாம் என்று அந்த இருவரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் பல அதிரடி மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும் இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளின் 'பேச்சைக் கேட்கும்' ஒருவராகவே ரணில் செயற்படப் போகின்றார் என்பதே தென்னிலங்கையில் சிந்திக்கத் தொடங்கியுள்ள மக்கள் சொல்லி வருகின்றார்கள் என்பது கவனிக்கத் தக்கது

15 அமைச்சர்களை கொண்ட மிகவும் குறுகிய அமைச்சரவை அமைக்கப்படவுள்ளது. இதன்போது ராஜாங்க அமைச்சுக்கள் தவிர்க்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. தேவை ஏற்படின் சில ராஜாங்க அமைச்சுகளும் வரலாம் என உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்த 15 அமைச்சர்களில் தமிழ், முஸ்லிம் தலைவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது. இதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கீழ் எந்தவொரு அமைச்சும் செல்லக் கூடாது என்பது தொடர்பில் ரணில் கவனம் செலுத்தி வருவதாக தெரிய வருகிறது.
அது சாத்தியமானால் மற்றுமொரு அரசியல் நெருக்கடிக்கு வித்திடும் ஆரம்ப புள்ளியாக ரணிலின் நியமனம் இருக்கப் போகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

## கனடா Jay's Professional Truck Training Centre நிறுவனம் தமிழ் இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது

கனடாவில் அதிக தட்டுப்பாடுகள் நிறைந்த கனரக வாகன சாரதிகளை **(Truck Drivers)** உருவாக்குவதில் பல வருட அனுபவம் கொண்ட **Canada's Jay's Professional Truck Training Centre** நிறுவனம் இங்குள்ள தமிழ் இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

JAY'S PROFESSIONAL TRUCK TRAINING CENTRE

ஒன்றாரியோ மாகாணத்தில் மாத்திரம் சுமார் இரண்டு இலட்சம் கனரக வாகன சாரதிகளுக்கு **Truck Drivers** - வெற்றிடம் உள்ளதாக மாகாண அரசு அறிவித்துள்ளது.
இவ்வாறான நிலையில் இங்குள்ள தமிழ் இளைஞர்களுக்கு தகுந்த பயிற்சி அளித்து அவர்களுக்கு உடனடியாகவே புகழ்பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பையும் பெற்று தர முடியும் என்று **Jay's Professional Truck Training Centre** நிறுவனத்தின் அதிபர் திரு ஜே ஜெயானந்தன் தெரிவித்துள்ளார்.
தொலைபேசியில் தொடர்பு கொள்ள 416-771-8041 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## இங்கிலாந்தின் இலண்டன் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்திய கனடா வாழ் நண்பர்கள்



அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழர்கள் மாநாட்டில் பங்கெடுக்கும் வகையில் இங்கிலாந்து சென்றிருந்த கனடா வாழ் நண்பர்களான கனேடியத் தமிழர் பேரவையின் தலைவரும்,ரொறன்ரோ தமிழ் இருக்கையின் தலைவருமான திரு சிவன் இளங்கோ. திருமதி பிரேமா இளங்கோ மற்றும் கனடாவின் வர்த்தகப் பிரமுகர்
திரு சங்கர் நல்லதம்பி அவரது பாரியார் ஆகியோர் இங்கிலாந்தின் இலண்டன் பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தி மலர் மாலை அணிவிக்கும் நிகழ்விலும் கலந்து கொண்டார்கள்.
கடந்த 4ம் திகதி புதன்கிழமை லண்டன் **SOAS** பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள வள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்த அவர்கள் அனைவரும் இங்கிலாந்து தமிழ் இருக்கையின் முக்கிய உறுப்பினர்கள் சகிதம் சென்ற போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இங்கு காணப்படுகின்றன.
இலண்டன் பல்கலைக்கழக தமிழ் இருக்கை நிர்வாகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில். லண்டன் தமிழ் இருக்கையின் முக்கிய செயற்பாட்டாளர் திருமதி சிவானந்தியும் படங்களில் காணப்படுகின்றார்.



# ராஜபக்ஷக்களே இன்று வீசுவது 'தநீர் கோப்பை சூறாவளி அல்ல'



- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்

• “கோத்தா கோ கம” கருத்தியல் வடகிழக்கு மலையக முஸ்லிம் இளைஞர் யுவதிகளின் கண்களைத் திறக்குமா?
• தமிழ் முஸ்லிம் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு திசையறியாது இருக்கும் வடக்கு கிழக்கு மலையக முஸ்லிம் இளைஞர் யுவதிகளின் கண்களை இந்த “கோத்தா கோ கம” கருத்தியல் கண் திறக்குமா?



கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இளைஞர் யுவதிகளினால் ஆரம்பிக்கப்பட்ட அகிம்சை வழிப் போராட்டமானது 8 ஆம் திகதி மே மாதத்துடன் ஒரு மாதத்தை பூர்த்தி செய்தது.

இந்தப் போராட்டம் “சலசலப்புடன் கடந்து போய்விடும்” என்பதே அரசியல்வாதிகளின் எண்ணப்பாடாக போராட்டம் ஆரம்பித்ததில் இருந்தே கருக் கொண்டிருந்தது. இதுவும் இலகுவில் கடந்துபோய்விடும் என்பதில் குறிப்பாக அத்த நம்பிக்கை கொண்டவர்களாக ராஜபக்ஷ குடும்பமும் அவர்களுடன் இணைந்த அரசியல் கூட்டாளிகளும் இருந்தனர். மே 8 ஆம் திகதிவரை “இதுவும் இலகுவில் கடந்துபோயவிடும்” என்ற நிலைப்பாட்டில் மண் விழும்
என மறுநாள் மே 9 ஆம் திகதி வரை அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. எனவேதான் மே 9இல் விஷப் பரீட்சையில் இறங்கினர்.

அலரி மாளிகையில் மஹிந்த ராஜபக்ஷ தனது ஆதரவாளர்கள் சகிதம் கூட்டங்களை நடத்துவது ஒன்றும் புதிதில்லை. இன்றைய நெருக்கடி காலகட்டத்தில் குறிப்பாக ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகுவதுடன் ராஜபக்ஷ குடும்பமே அரசியலில் இருந்து விலக வேண்டும் கொள்ளையடித்த பணத்தை திருப்பி நாட்டுக்கே வழங்க வேண்டும் என ஜனாதிபதி செயலகத்தில் இருந்து ஒலித்த குரல்கள் நாடு முழுவதும் ஒலிக்கத் தொடங்கியதை அடுத்து அடிக்கடி தனது ஆதரவாளர்களைச் சந்திக்கத் தொடங்கினார். அதன் தொடர்ச்சியாகத்தான் மே 9ஆம் திகதியும் தனது ஆதரவாளர்களைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு சற்று வித்தியாசமானதாக அமைந்தது. வழமைபோன்று பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ அவர்களை விலக வேண்டாமென கோருவது மாத்திரமல்ல கூட்ட முடிவில் அலரி மாளிகையை விட்டு
வெளியேறி பொலிசாரினதும் இராணுவத்தினதும் ஒத்துழைப்புடன் ஜனாதிபதி செயலகத்திற்கு முன் 31 நாட்களாக இயங்கிவரும் “கோத்தா கோ கமவை” துவம் செய்து துடைத்து அழித்து போராட்டத்திற்க முற்றுப் புள்ளி வைப்பது என்ற நிகழ்ச்சி நிரலும் இருந்தது. இதன் எதிரொலிதான் “கோதா கோ கம” மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களாகும்.

இந்தத் தாக்குதல்கள் பூமரங்காய் போன்று ராஜபக்ஷக்களையும் அவருடன் இணைந்த ஆளும் வர்க்கத்தினரையும் நாடு பூராவும் தாக்கத் தொடங்கியது.

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பான “கோ கோத்தா கம”” அலரி மாளிகைக்கு முன்பான “மைனா கம” மற்றும் நாடுபூராவும் உருவாகியுள்ள மேற் கூறிய கிராமங்கள் ராஜபக்ஷ குடும்பமும் அவர்கள் சார்ந்த ஆளும் வர்க்கமும் நினைப்பது போல் “இதுவும் இலகுவில் கடந்துபோய்விடும்” என்ற சாமான்ய விடயமல்ல என்பதை உணர்த்தி விட்டது.

இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின் “கோ கோத்தா கமவின்” கருத்தியல் வெறுமனே “தேநீர் கோப்பை சூறாவளி” அல்ல உண்மையான சூறாவளி என்பதை உணர்த்திவிட்டது. இந்த சூறாவளி மகிந்த ராஜபக்ஷவின் இராஜினாமாவுடன் மாத்திரமல்ல ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவுடன் வீறு கொண்டெழுவதுடன் ஊழல்வாதிகளுக்கு சாவுமணி அடிக்கும்வரை ஓயப் போவதில்லை என்பது உண்மையாகும்.

உண்மையில் “கோத்தா கோ கம” இளைஞர் யுவதிகளைப் பாராட்டியாக வேண்டும். தம்மை நோக்கி குண்டர்கள் பொல்லுகளுடன் வரும் பொழுது “திருப்பித் தாக்கமாட்டோம்” எனக் கூறி இடியென விழுந்த அடிகளை தாங்கி நின்றனர். இந்த மன உறுதியே நாட்டு மக்களை கிளர்ந்தெழ வைத்தது. இந்த மன உறுதி உள் நாட்டில் மாத்திரமல்ல வெளி உலகத்திலும் அவர்களை உயர்த்தியுள்ளது.

மக்களுக்காக மாற்றத்தை ஏற்படுத்த முயன்றவர்கள் இந்த இளைஞர் யுவதிகள்.

தென்னிலங்கையில் ஆயுதம் ஏந்திய பரம்பரை இன்று அகிம்ஷை
வழியில் தென்னிலங்கையை அரசியல் சமூக வேறுபாடுகளுக்குப்பால்
ஓரணியில் திரட்டியுள்ளனர். அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

இந்த இளைஞர்களின் பின்னால் அணி திரள தென்னிலங்கை தயாராகிவிட்டது.

ராஜபக்ஜக்களினதும் அவர்கள் சார்ந்த அடிவருடிகளினதும் ஊழல் மோசடிகள் குறித்து பொது மக்களை சிந்திக்க வைத்தது மாத்திரமல்ல பொது வெளியிலும் பேச வைத்துள்ளனர்.

இன்று மக்கள் கூடும் பொது வெளியிலும் பயணம் செய்யும் போதும் ஒருவரை ஒருவர் தனிப்பட்ட ரீதியில் சந்திக்கும் போதும் ராஜபக்ஷ குடும்பம் அவர்களுடன் இணைந்த ஊழல் மோசடி கும்பல்கள் பற்றியும் நாட்டின் எதிர் காலம் குறித்தும் இந்த இளைஞர் குழாம் பேச வைத்துள்ளது.

குறுகிய ஒரு மாத காலத்திற்குள் மக்களின் சிந்தனையில் பாரிய மாற்றத்தை “கோ கோத்தா கம” போராட்டக்கள இளைஞர்களும் யுவதிகளும் உருவாக்கியுள்ளனர் என்பதை இங்கு பதிவு செய்தாக வேண்டும்.

ராஜபக்ஷ குடும்பத்திடம் இருந்து விடுதலை பெற்ற ஒரு நல்லாட்சியை உருவாக்க நினைத்த தென்னிலங்கை மக்கள் அரசியல்வாதிகளினால் தோற்கடிக்கப்பட்டனர்.

இந்தத் தோல்வி தந்த வலியுடன் இருந்தவர்களை உயிர்த்த ஞாயிறு படுகொலையுடன் சிங்கள மக்களின் உணர்வுகளுடன் விளையாடி நாட்டைப் பாதுகாப்பதாக ராஜபக்ஷக்கள் மீண்டும் இலங்கை அரசியலில் உயிர்த்தெழுந்தனர். கடந்த இரண்டரை வருடங்களில் ராஜபக்ஷ குடும்பமும் அவர்கள் சார்ந்த ஆளும் வர்க்கமும் நடத்திய ஊழல் மோசடிகளினால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது.

ராஜபக்ஷக்கள் இல்லாத ஊழல் மோசடிகள் அற்ற நாட்டை உருவாக்கவே இளைஞர் யுவதிகள் முயல்கின்றனர்.

தென்னிலங்கை குண்டர்களும் படைத்தரப்பும் தமிழர்களின் உயிர்களைப் பறித்ததையும் உடமைகளை நூலகத்தை எரித்ததையுமே நாம் பார்த்துள்ளோம். ஆனால் இன்று இனவாதிகளின் சொத்துக்கள் எரிக்கப்படுவதை முதன் முதலாகப் பார்க்கின்றோம். இதற்குப் பிறகும் இனவாதிகளும் ஊழல் மோசடிக்காரர்களும் தலை நிமிர்ந்து தென்னிலங்கை அரசியலில் இறங்க முன்வருவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தென்னிலங்கை அரசியலில் ராஜபக்ஷ குடும்பத்தில் எஞ்சி இருப்பவர் ஜனாதிபதி கோத்தபாய மாத்திரமே. இது “கோ கோதாகம” இளைஞர் யுவதிகளுக்குக் கிடைத்த வெற்றியே.

தமிழ் முஸ்லிம் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு திசையறியாது இருக்கும் வடக்கு கிழக்கு மலையக முஸ்லிம் இளைஞர் யுவதிகளின் கண்களை இந்த “கோத்தா கோ கம” கருத்தியல் கண் திறக்குமா?

11 மே 2022




இலங்கை செய்திகள் Sri Lanka News

# வன்முறை ஏற்புடையது அல்ல — ஆனால் தமிழ் மக்கள் ரசிக்கக் கூடாது

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன்

அமைதி வழி போராட்டத்தை அரசியல் பின்புலத்துடன் அரச இயந்திரத்தின் ஒத்திசைவுடன் நசுக்க முனைவது சன நாயக படுகொலை ஆகும். இச் செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதுடன் ஆழ்ந்த கவலையடைகிறோம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

அவர் வியாழக்கிழமை (12) மாலை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அரசியல் அமைப்பின் பிரகாரம் சனநாயக உரிமை பண்பியல்புகளுக்கு மதிப்பளித்து முதன்மைப்படுத்த வேண்டியது தார்மீக பொறுப்பும் அடிப்படை உரிமையும் ஆகும்.

இந்த மரபை காக்க வேண்டியது ஆட்சியாளரின் இரகசியப் பிரமாணமும் ஆகும். அவ்விதமான நெறி முறையை அவமதிப்பது சம நீதியின்மையற்ற செயலில் ஈடுபட்டது பெரும் தேச விரோத குற்றமாகும்.

வன்முறையின் வலிகளை நன்கு உணர்ந்தவர்கள் என்ற வகையில் முன்னெச்சரிக்கையுடன் சவால்களை எதிர் கொண்டு வெற்றி கொள்ள முனைவது சிறந்த சனநாயக தலைமைத்துவ பண்பியலாகும். அவசர கால சட்டத்தை பயன்படுத்தி மக்களை ஒடுக்க முனைவதும், முப்படைக்கு சுடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுவதும், ஜனநாயக நாட்டிற்கு உகந்தவை அல்ல.

பொருளாதார நலிவடை வில் இருந்து நாட்டை மீட்சி அடைய வழி தேடுவதை விடுத்து வன்முறையை ஆயுதமாக்குவது மேலும் நாட்டின் பொருளாதார கட்டமைப்பு நலிவடையும். இதை ஆட்சியாளர்கள் புரியாமல் இருப்பது மிகுந்த மன வேதனை அளிக்கிறது.

யுத்த வெற்றியின் யுக புருசர்கள் என கொண்டாடிய இதே பௌத்த தேசியவாத இனவாதிகள் அதே மே மாதத்தில் கூட்டுக் கோபத்தை உச்சபட்சமாக வெளிப்படுத்துவது "ஆறி நின்றது அறனன்று" என்பதை புலப்படுத்துகிறது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க போவதில்லை. இந்த போராட்டக் காரர்கள் தமிழர்களின் எந்த விதமான அடிப்படை கோரிக்கையும் புரிந்து கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். போர்க்குற்றவாளிகளுக்கு இது தண்டனை ஆகாது.



நாம் எள்ளளவும் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழர்கள் துளியளவும் இதில் மகிழ்வடைய முடியாது. இது அவர்களுடைய உள்ளக அரசியல் பிரச்சினை. இதை நாம் மூன்றாம் தரப்பாகவே மிகத் தந்திரமான மதிநுட்பத்துடன் கையாள வேண்டும்.

எனவே தெற்கில் புதிய அரசியல் கலாசாரம் உருவெடுப்பது போல் தமிழ் அரசியல் வாதிகளுக்கும் தங்கள் செயல்பாட்டை மீள் பரிசீலனை செய்து கொள்ள வேண்டும்.

உருப்படாத உணர்ச்சிகரமான வார்த்தைகளை பேசி தமிழ் மக்களை உசுப்பேற்றி உண்மையின் நிழல் படாத பொய்யை உரத்துப் பேசி காலத்தை வீணாக்கியதை தவிர அவர்களின் சாதனை வெரும் பூச்சியமே என பொதுமக்கள் விசனம் அடைகின்றனர்.

தூர நோக்கு இலக்கின்றி இராஜ தந்திர இராஜீக அணுகுமுறை இன்றி வெறும் வாக்கு வணிக வாய்ச்சொல்லில் வீரர்களாகவே காணப்படுவதுடன் தமிழ் மக்களின் பொது நலன் சார்ந்து இந்த இக்கட்டான நிலையில் கூட ஐக்கியப் படாமல் ஆளுக்கு ஒரு அறிக்கை விட்டு அநாகரீக அரசியலில் ஈடுபடுகிறார்கள். ஆகவே தமிழ் மக்களும் புதிய அரசியல் கலாசாரத்தை கட்டமைக்க நகர வேண்டிய காலம் கைகூடி வருவதாக வே தோன்றுகிறது. ஆகவே தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் உணர்ச்சிவசப்படாமல் மிக மிக நிதானமாக கூர்ந்து கவனித்து மிக எச்சரிக்கையுடன் கையாள வேண்டும்.

ஏனெனில் பலமுறை இனக்கலவரம், இனப்படுகொலை என்பனவற்றில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் அந்த அனுபவத்தில் இருந்து எமது முன்னோக்கிய நகர்வு கட்டமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மன்னார் நிருபர்

# மக்களால் நிராகரிக்கப்பெற்ற ராஜபக்ச குடும்பத்தை காப்பாற்றவே ரணில் விக்ரமசிங்க இலங்கை பிரதமராகிறார்

## அனுர குமார திசாநாயக்க தெரிவிப்பு



மக்களால் நிராகரிக்கப்பெற்ற ராஜபக்ச குடும்பத்தை காப்பாற்றவே ரணில் விக்ரமசிங்க மீண்டும் இலங்கை பிரதமராகிறார் என தேசிய மக்கள் சக்தி கட்சித்தலைவர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். இதற்கு அவர் கடுமையான கண்டிப்பையும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தலைநகர் கொழும்பில் திங்கட்கிழமை ஏற்பட்ட கலவரத்தை தொடர்ந்து பிரதமர் பதவியை மகிந்த ராஜபக்ச ராஜினாமா செய்தார்.

இதனிடையே, மகிந்த ராஜபக்சவுக்கு பதிலாக ஐக்கிய தேசிய கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க இலங்கை பிரதமராக பொறுப்பேற்க உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தற்பொது ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியுள்ளார்.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் மற்ற கட்சிகள் ஆதரவுடன் "அனைத்து கட்சிகள் அடங்கிய அரசாங்கத்திற்கு" ரணில் தலைமை தாங்குவர் என கூறப்படுகிறது.

ரணில் விக்ரமசிங்க எப்போதும் ராஜபக்ச குடும்பத்தை காப்பாற்றுபவராக இருந்து வருகிறார். தமிழர் தரப்பும் இதைத் தான் செய்து வருகின்றது "வாறாயினும் கோட்டாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தை யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்ள".

இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசிய மக்கள் சக்தி கட்சித்தலைவர் அனுர குமார திசாநாயக்க.... இதற்கு அவர் கடுமையான கண்டிப்பையும் தெரிவித்துள்ளார்..


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# நரியின் கையில் நாடு

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர், லண்டன்)



"நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்குமாம்" என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதாவது நாட்டை ஆளும் சிங்கம் நரிக்கும் இடம் கொடுத்தால், அது கிடைக்கு (ஒவ்வொரு வேளை உணவிற்கும்) இரண்டு ஆடு கேட்குமாம். அது தான் இலங்கையில் வியாழன் (12) மாலை அரங்கேறியிருக்கும் அவலம் தொடர்பில் எனக்கு உடனடியாக நினைவிற்கு வந்தது.

இலங்கைத் தீவு பல அவலங்களை, அநாகரீகமான செயல்களை, அடாவடிகளை, அராஜகங்களை, அருவருக்கத்தக்க விஷயங்களை பல தசாப்தங்களாகச் சந்தித்து வந்துள்ளது. இவை எல்லாவற்றையும் அங்கு வாழும் மூவின மக்களும் பல சொல்லொணா துன்பங்களுக்கு அப்பாற்பட்டு சகித்துக் கொண்டு 74 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் இருநூறு ஆண்டு காலமாக, இந்தியாவிலிருந்து "கூலிகளாக" பஞ்சம் பிழைக்க வந்த மக்கள் இன்னும் நவகாலனித்துவ அடிமைகளாக எவ்விதமான முன்னேற்றமும் இல்லாமல், நாட்டிலேயே மிகவும் வறிய மக்களாக வாழ்ந்து வருகின்றனர். வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள மக்களோ நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து இரண்டாம்தர குடிமக்களாக உரிமைகள் பறிக்கப்பட்டு, ஆயுதம் ஏந்தி போராடும் நிலைக்கு தள்ளப்பட்டு, அந்தப் போராட்டம் பன்னாட்டு உதவியுடன் தோற்கடிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட வலிகளை இன்னும் சுமந்து கொண்டு வாழ்கின்றனர். அரச கணக்கின்படி 80,000 தமிழ்ப் பெண்கள் போரில் தமது கணவரை இழந்துள்ளனர், ஆயிரக்கணக்கானவர்கள் உடல் உறுப்புகளை இழந்து இன்றும் நடைப்பிணமாக வாழ்கின்றனர். முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் சார்புநிலை குறித்து பல கேள்விகள் இருந்தாலும், அண்மைய காலங்களில் அவர்களும் பல இடைஞ்சலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. அதேவேளை நாட்டில் சிங்கள மக்கள் மட்டும் சுகமாக வாழ்ந்துவிடவில்லை. அரசியல் பலமும் அதிகாரமும் கொண்டவர்களும் அவர்களைச் சுற்றியிருந்த சிங்கள மக்களுமே காலங்காலமாகப் பயனடைந்தனர்.




இதற்குச் சிறந்த உதாரணம், தற்போது அரசிற்கு எதிராக காலிமுகத் திடலில் போராடுபவர்கள் பெரும்பாலும் ராஜபக்சகளுக்கு வாக்களித்த சிங்கள மக்களே. யாரின் வாக்கு மூலம் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்தார்களோ, அவர்களாலேயே இன்று ஆட்சியிலிருந்து அகற்றப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால், ஜனநாயகத்தை கேலிக்கூத்தாகும் வகையில் இன்று (12) மாலை அரங்கேறியது போன்ற ஒரு அவலத்தை இதுவரை நான் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. உலகில் எங்கும் இல்லாதபடி, நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு உறுப்பிரைக் கொண்ட ஒரு கட்சியின் தலைவர், அதுவும் நேரடித் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டு, தேசியப் பட்டியலில் ஆறுமாத இழுப்படிப்பிற்கு பிறகு தன்னைத்தானே கட்சியின் சார்பில் நியமித்துக் கொண்டவர் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதாவது, அவர் நாட்டின் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இது சத்தியம் என்கிற வார்த்தைக்கே இழுக்கு போன்றது. அவர் பிரதமராக நியமிக்கப்பட்டதும், நாடாளுமன்றத்தில் தான் ஒருவர் மட்டுமே உறுப்பினராக இருக்கும் நிலையில் அந்த பொறுப்பை ஏற்பது தார்மீக ரீதியாக சரியா என்பதற்கு அப்பாற்பட்டு ஏராளமான கேள்விகள் உள்ளன.

அவர் பிரதமராகப் பதவியேற்றவுடன் வந்த முதல் வாழ்த்து முன்னாள் பிரதமர் மற்றும் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்சவிடமிருந்து. தனது டுவிட்டரில் அவர் விரைவில் நாட்டை சிக்கலிலிருந்து மீட்க புதிய பிரதமருக்கு பழைய பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார். உடனடியாக இதற்கு சமூக ஊடகங்களில் எதிர்வினையும் தோன்றியது.

காலிமுகத் திடலில் ராஜபக்ச அரசிற்கு எதிராகப் போராடியவர்கள், உடனடியாக "ரணில்கோகம" ரணில் வீட்டிற்கு போங்கள் என்ற கோஷத்தை தொடங்கிவிட்டனர். அவர் பிரதமராக நியமிக்கப்படவுள்ளார் என்று செய்திகள் கசிந்த நிலையில், அவரது நியமனம் முறையற்றது மற்றும் சட்டவிரோதமானது என்று இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் கர்தினால் மால்கம் ரஞ்சித் மற்றும் வண. கலாநிதி ஓமல்பே சோபித தேரர், ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில் தெரிவித்தனர். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு இல்லாத ஒருவரை எப்படி ஜனாதிபதி பிரதமராக நியமிக்கலாம் என்று அந்த இருவரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அந்த கேள்வியை அவர் மட்டுமல்ல, ஊடகவியலாளர்கள், சமூக ஊடகப் பயன்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினர், கல்விமான்கள், அரசு ஊழியர்கள், தொழிற்சங்கவாதிகள், காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், சட்ட வல்லுநர்கள் என பலதரப்பினரும் கேட்டுள்ளனர், அதுவும் அவர் பதவியேற்பதற்கு முன்னதாகவே!

எனினும், இவை அனைத்தையும் புறந்தள்ளிவிட்டு, பதவியேற்றவுடன் கொழும்பு பௌத்த விகாரை ஒன்றிற்கு சென்று வழிபட்டு ஆசிபெற்று திரும்பிய ஒற்றை நாடாளுமன்ற உறுப்பினர் கட்சியின் தலைவரும் ஆறாவது முறையாக பிரதமர் பதவியை ஏற்றுள்ள ரணில் விக்ரமசிங்கவிடம் செய்தியாளர்கள் அதன் நியாயத்தன்மை குறித்து கேட்டதற்கு அவர் பிரிட்டனில் பிரதமராக இருந்த சர் வின்ஸ்டன் சர்ச்சில் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இருந்த கட்சியின் தலைவராக இருந்த போது எப்படிப் பதவியேற்றாரோ அதேபோல் தான் தானும் என்று கூறியுள்ளார், அவர் இலங்கை சரித்திரத்தை மட்டுமல்ல அவர்களின் எஜமானர்களாக இருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் சரித்திரத்தையும் சரியாகப் படிக்கவில்லை என்பது தெரிகிறது.

இதனிடையே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க வண. ஓமல்பே சோபித தேரரை வியாழன் மாலை சந்தித்த பிறகு, "ரணில் எப்போதுமே ராஜபக்சகளின் இரட்சகராகவே இருந்துள்ளார், அவர் மக்களின் விருப்பத்திற்கு எதிராகவே பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்" என்று கூறியுள்ளார்.

இப்படி பலதுறையினரின் எதிர்ப்பையும் மீறி சுயலாபத்திற்காக மட்டுமே அவர் பிரதமர் பொறுப்பை ஏற்றுள்ளார் என்கிற விமர்சனம் தொடருகிறது. அதற்கான பதில் இன்னும் அவரிடமிருந்து வெளியாகவில்லை அது வெளியாகவும் செய்யாது.

சரியோ, பிழையோ அவர் இன்றளவில் நாட்டின் பிரதமர். அவர் இன்று நாடு சந்திக்கும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியிலிருந்து அதை மீட்டெடுப்பார் என்று கருதப்படுவதில் தொடர்பில், சில நியாயமான கேள்விகள் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

சீனாவிற்கு கொழும்பு துறைமுக நகரை 99 ஆண்டுக்கால குத்தகைக்குக் கொடுத்தது யார்? அதுவே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஒரு உரசலை ஏற்படுத்தியது. அந்த துறைமுக திட்டம் எப்படி இலங்கை அரசின் பொருளாதாரத்தை சீர்குலைத்தது என்பதை உலகமே அறியும். மைத்திரிபால சிறிசேனவுடன் அவர் அமைத்த கூட்டாட்சியில் இடம்பெற்ற குழப்பங்களைப் பட்டியலிட்டால் அது தொடர்கதை போல இருக்கும். மாற்று கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதியுடன் இப்போது எப்படி இணைந்து செயல்படுவார்?

(தொடர்ச்சி 13ம் பக்கம்)


## உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

தொலைபேசி எண்: 0452-2530766; நிகரி: 0452-2530799; மின்னஞ்சல்: utsmdu1@gmail.com;
வலைத்தளம்: www.utsmdu.org.

திருவள்ளுவராண்டு – 2053, பிலவ – பங்குனி'21
ந.க.எண்: 1057 /2019 நாள்:04.04.2022

**சிறந்த அயலகத் தமிழ் நூல்களுக்குப் பரிசு' 2021**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் 2018–2019ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித்துறையின் மானியக் கோரிக்கையில், "அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா மற்றும் பிற பகுதிகளிலிருந்து அறிஞர் பெருமக்களால் வெளியிடப்பெறும் நூல்களில் சிறந்தவற்றிற்கு வெளிநாட்டுப் படைப்பிலக்கியங்கள் தலைப்பில் உலகத் தமிழ்ச் சங்கம் வாயிலாகப் பரிசுத் தொகை வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இவ்வறிப்பிற்கிணங்க, ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பியா, ஆசுதிரேலியா, ஆப்பிரிக்கா ஆகிய ஐந்து கண்டங்களிலுள்ள நாடுகளில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில், கவிதை, சிறுகதை, புதினம், ஆய்வு நூல் எனத் தமிழ் இலக்கிய வகைகளில் 2020ஆம் ஆண்டு வெளிவந்த தரமான படைப்புகளில் ஒவ்வொரு வகைமையிலும் சிறந்த நூலினைத் தெரிவு செய்து நூலாசிரியருக்குப் பரிசுத் தொகையாக ரூபாய் 50,000/–மும் பதிப்பகத்திற்கு ரூபாய் 10,000/–மும் பரிசுத் தொகையாக வழங்கப்படும். 2020ஆம் ஆண்டு வெளிவந்த சிறந்த நூல்களுக்குப் பரிசுத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை உலகத் தமிழ்ச் சங்கம், மதுரையின் வலைத்தளத்தில் (www.utsmdu.org) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 31.05.2022. விண்ணப்பங்களை நூலுடன் இணைத்து அஞ்சல் வழியாக அனுப்ப வேண்டும். 2019ஆம் ஆண்டு வெளிவந்த சிறந்த நூல்களுக்குப் பரிசுத் திட்டத்திற்கான விண்ணப்பங்களும் வரவேற்கப்படுகின்றன.


விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை – 625020
தொலைபேசி எண்கள்: 0452–2530766 / 2530799
மின்னஞ்சல் முகவரி: utsmdu1@gmail.com

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# கனடா ஸ்ரீ வரசித்தி இந்துக் கல்லூரி' நிர்வாகத்தினர் வழங்கிய சிறப்பு மிகு "சிவத்தமிழ் விழா"

கனடா - ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானத்தை ஆரம்பித்து அதன் மூலம் நிறைவான ஒரு ஆலயத்தை நிர்வகித்து வரும் பிரதம குரு சிவ ஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களின் மற்றுமொரு சேவை வழங்கும் நிறுவனமே கனடா ஸ்ரீ வரசித்தி இந்துக் கல்லூரி" ஆகும்.





கடந்த பல வருடங்களாக. தமிழ் மொழியுடன் இணைந்து சைவ சமயத்தையும் ஒழுக்க நெறிகளையும் மாணவ மாணவிகளுக்கு கற்பித்து வரும் இக்கல்லூரி கடந்த 15 வருடங்களாக சிறப்பாக நடத்தி வரும் "சிவத் தமிழ் விழா" கடந்த 7ம் திகதி சனிக்கிழமை. கனடா கந்தசாமி ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

விழாவிற்கான ஏற்பாடுகளை சிவ ஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களுடன் இணைந்து அவரது துணைவியார் மற்றும் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகள் ஆகியோர் செய்திருந்தனர்.

விழாவின் பிரதம விருந்தினர்களாக கலாநிதி நா. சுப்பிரமணியன் ஐயா அவர்களும் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ சோமஸ்க் கந்தக் குருக்கள் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர்.

ஏனைய பலர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரையும் விழாக்குழுவினர் சிறந்த முறையில். வரவேற்று ஆசனங்களை வழங்கி அமரச் செய்து விழாவிற்கு எந்த இடையூறும் வராமல் கவனித்தும் தங்கள் பொறுப்புக்களை சிறப்புடன் கவனித்தனர்.

அங்கு இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள். பாடல்கள் மற்றும் தேவாரங்கள் ஆகியவற்றை ஒப்புவித்தல் போன்றவை மாணவர்களால் அற்புதமான முறையில் மேடையில் இடம்பெற்றன.

குறிப்பாக நாடக வடிவில் சபையோருக்காக படைக்கப்பெற்ற கலை வடிவங்கள் ஒவ்வொரு விடயத்தையும் உன்னிப்பாகக் கவனித்து தயாரிக்கப்பெற்றிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.





தொழில் நுட்ப ரீதியிலும் இந்த கலைப் படைப்புக்கள் சிறப்பாக இடம்பெற்றன என்பதும் குறிப்பிட வேண்டிய அமசங்க்ள் ஆகும்.

இந்த அற்புதமான படைப்புக்ளை தங்கள் மாணவ மாணவிகளைக் கொண்டு பயிற்சிகளை வழங்கிய மேடையேற்றி வெற்றிகளை ஈட்டிய கல்லூரியின் ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுக்குரியவர்கள்.

வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டிய கருப்பொருளைக் கொண்டும் சமய வழியிலான தத்துவங்களை விளக்கும் காட்சிகளை மேடையேற்றியும் கல்லூரி நிர்வாகத்தினர் இவ்வருடத்தின் "சிவத் தமிழ் விழாவை" அனைவராலும் பேசப்படும் பெருவிழாவாக படைத்தார்கள் என்றால் இது வெறும் புகழ்ச்சிக்கான வார்த்தைகள் அலல என்றே கூறலாம்.

**- சத்தியன்**











A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா

6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்

2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை



றொறன்ரோவில் இருந்து புரப்பட்டு, இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.

Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick

ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்.

- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...



a1actour.com@gmail.com

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே

3 to 4 Star Hotel or Motel

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.

சொகுசு பேருந்து தங்குமிட வசதி காலை உணவு பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலை செலுத்தக்கூடிய மாலுமி யார்? ரணிலா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



13 ஆண்டுகளுக்கு முன்பு ராஜபக்சக்கள் எந்த நாட்டை சிங்கள மக்களுக்கு வென்று கொடுத்தார்களோ, அந்த நாட்டிலேயே அவர்களுடைய சொந்த தேர்தல் தொகுதியிலேயே, அவர்கள் பிறந்து வளர்ந்த வீட்டிலேயே, அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது.

தென்னிலங்கை குழம்பும் போதெல்லாம் அரசியல் செயற்பாட்டாளர்கள் குறிப்பாக, வடக்கின் நண்பர்களாக உள்ள சிங்கள செயற்பாட்டாளர்கள் வடக்கில் தஞ்சம் புகுவதுண்டு. அப்படித்தான் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுகளின் இறுதியில் தொழிற்சங்கவாதியான எச்.என். பெர்னாண்டோ யாழ்ப்பாணத்தில் தஞ்சம் புகுந்தார். இப்பொழுது மகிந்த கிழக்கில் தஞ்சம் புகுந்திருக்கிறார்.

இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் இதற்கு முன் நடந்திராதவை எல்லாம் இப்பொழுது நடக்கின்றன. ஆளும் கட்சி உறுப்பினர்களின் வீடுகளை மக்கள் தாக்குகிறார்கள், எரிக்கிறார்கள். அவர்களுடைய சொத்துக்களை அழிக்கிறார்கள். ஆளுங்கட்சி பிரமுகர்கள் சொந்த தொகுதியில் தங்க முடியாத ஒரு நிலை. அது மட்டுமல்ல அவர்கள் தப்பிச் செல்லக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் விமான நிலையத்தை நோக்கிச் செல்லும் வழிகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மறிக்கிறார்கள். அங்கு வரும் வாகனங்களைச் சோதனை செய்கிறார்கள். உலகிலேயே பொலிசாரின் வாகனங்களை மறித்து பொதுமக்கள் சோதனை செய்யும் காட்சியெல்லாம் இப்பொழுது இலங்கைத் தீவில் நடைபெறுகிறது.

சிங்கள மக்கள் அதிகாரத்தை கைகளில் எடுத்துக் கொண்டு விட்டார்கள். ஆனால் இதை நேர்மறையான அர்த்தத்தில் மக்கள் அதிகாரம் என்று கூறி சந்தோஷப்பட முடியாது. ஏனெனில் நிலைமை சிங்கள மக்களின் கூட்டு கோபத்துக்கும் ஒருவித அராஜக நிலைக்கும் இடையே காணப்படுகிறது. இது ஆபத்தானது. தமிழ் பகுதிகளில் அவ்வாறான வன்முறைகள் நடக்கவில்லை என்பது ஆறுதலான விடயம். அதைத் தூண்டும் விதத்தில் சில அரசியல்வாதிகள் சமூக வலைத்தளங்களில் குறிப்புகளை போட்டார்கள். ஆனாலும் அவர்கள் நினைத்தபடி பெரிய அளவில் வன்முறைகளை தூண்ட முடியவில்லை. கிழக்கில் ஏறாவூரில் ஒரு அரசியல்வாதியின் காரியாலயம் தாக்கப்பட்ட பொழுது அருகில் இருந்த தனது வீடும் தாக்கப்பட்டது குறித்து ஒரு நண்பர் முகநூலில் ஒரு பதிவைப் போட்டிருந்தார். அதில் கூறப்பட்ட தகவல்களின்படி அந்த வீடு குறிப்பிட்ட அரசியல்வாதியின் சொந்த வீடு இல்லை. அது வாடகைக்கு எடுக்கப்பட்ட வீடு. அந்த வீட்டின் உரிமையாளர் ஆர்ப்பாட்டக் காரர்களை தடுத்திருக்கிறார். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. அந்த வீட்டை சூறையாடி பொருட்களை கவர்ந்தபின் வீட்டுக்கு தீ மூட்டியிருக்கிறார்கள். இதனால் பக்கத்து வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற சம்பவங்கள், நிலைமை அராஜகத்தை நெருங்கி வருவதை காட்டுகின்றன. பொருத்தமான சித்தாந்த அடித்தளத்தின் மீது நிறுவன மயப்படுத்தப்படாத எல்லா மக்கள் எழுச்சிகளும் அவ்வாறு அராஜகம் எனும் விகார வளர்ச்சியை அடையும் ஆபத்து உண்டு. ஒரு மக்கள் திரளின் கூட்டுக் கோபம் வெறும் கோபமாக, வன்மமாக, பழிவாங்கலாக மாறும் பொழுது அது ஆக்க சக்தியை இழக்கின்றது. அதன் புரட்சிகரப்பண்பையும் இழக்கின்றது. கும்பலுக்கு புத்தியிருப்பதில்லை. அது இறுதியிலும் இறுதியாக எதிர்ப்புரட்சிகர சக்திகளின் கைகளில் சிக்கி விடுகிறது. இலங்கைதீவில் இப்பொழுது நடப்பவை அவ்வாறான வளர்ச்சிகளை நோக்கிப் போகாமல் இருப்பதனை யார் உறுதிப்படுத்துவது?

மக்களுடைய கூட்டு கோபத்துக்கு தலைமை தாங்கும் அமைப்போ தலைவர்களோ இல்லை என்றால் நிலைமை விபரீதமாக கூடிய வாய்ப்புக்கள் உண்டு. அது அரசாங்கத்துக்கே சாதகமாக அமையும். இப்பொழுது அரசாங்கம் என்ற ஒன்று இல்லைத்தான். ஆனால் பொலிஸாரும் படைக் கட்டமைப்பும் அப்படியே இருக்கின்றன. அரசாங்கம் படைக் கட்டமைப்பை ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக பெரியளவில் பயன்படுத்தவில்லை.

கடந்த 30 நாட்களுக்கு மேலாக இலங்கைத் தீவில் நடக்கும் தன்னெழுச்சியான போராட்டங்களில் இரண்டு தரப்புக்கள் விலகி சாட்சிகளாக நிற்கின்றன. ஒன்று தமிழ் தரப்பு. மற்றது படைத்தரப்பு.

தமிழ் தரப்பு சாட்சியாக நிற்பதற்கு வேறு விளக்கங்கள் உண்டு. படைத் தரப்பு சாட்சியாக நிற்பதற்கு வேறு விளக்கங்கள் உண்டு. போராட்டம் தொடங்கிய ஆரம்ப நாட்களில் படைத்தரப்பு சில இடையூறுகளை செய்திருந்தாலும் அரசாங்கம் படைத் தரப்பை ஆர்ப்பாட்டக்காரர்களோடு மோத விடுவதில்லை என்ற முடிவோடு காணப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களும் படைத்தரப்பை பகைக்க விரும்பவில்லை. போராட்ட கிராமங்களில் ரணவிரு படைவீரர்கள் காணப்பட்டார்கள். தவிர போராட்டக்காரர்களின் கோஷங்கள் சுலோகங்கள் அனைத்தும் ஒரு நாட்டை ஒரு குடும்பம் திருடியதற்கு எதிராகவே அமைந்திருந்தன. அவர்கள் ராஜபக்ச குடும்பத்தின் மீது திருட்டு குற்றச்சாட்டைத்தான் சுமத்தினார்கள். தமிழ் மக்கள் சுமத்துவது போல போர்க் குற்றச்சாட்டை அல்ல. அவ்வாறு ஒரு குற்றச்சாட்டை சுமத்தும் இரு விதிவிலக்கான சுலோக அட்டைகள் காணப்பட்டன. ஆனால் அவை பொதுப் போக்கு அல்ல. ராஜபக்சக்களின் மீது போர்க் குற்றச் சாட்டை சுமத்தினால் அது அதன் தர்க்கபூர்வ விளைவாக படைத் தரப்பையும் குற்றவாளியாகக் காட்டும். எனவே அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் சிங்கள மக்கள் படைத் தரப்பை விமர்சித்து அல்லது படை தரப்புக்கு எதிராக எந்தக் கோஷத்தையும் எழுப்பவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இந்த அடிப்படையில் படைத்தரப்பு நிலைமைகளை அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கிறது.

மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை நடத்தியதன் விளைவாக நாடு முழுவதும் தீப் பிடித்தது. அதற்கு ஒரு அடிப்படையான காரணம் உண்டு. 30 நாட்களுக்கும் மேலாக அறவழியில் போராடிய ஒரு தரப்பின் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தும் பொழுது அது சமூகத்தின் மனச்சாட்சியை உலுப்பும். நிராயுதபாணிகளான போராட்டக்காரர்கள் குண்டர்களால் தாக்கப்படுவதை சமூக வலைத்தளங்களில் பார்த்த பொதுஜனங்கள் கோபத்தோடு தெருக்களில் இறங்கினார்கள். இதில் முன்னணி சோஷலிசக் கட்சி, ஜேவிபியின் மாணவர் அமைப்பு போன்றவற்றின் மறை கரங்களும் இருப்பதாக ஒரு சந்தேகம் உண்டு. ஆனாலும் பொதுமக்களின் கோபம் இயல்பானது. தக்க பூர்வமானது. அறவழிப் போராட்டத்தின் பலமே அதுதான். அதை காந்தி அற்புதமாக நிரூபித்திருக்கிறார். அறவழிப் போராட்டம் எனப்படுவது தன்னைத்தானே வருத்துவது. அதன்மூலம் எதிர்த் தரப்பின் மனச்சாட்சியை உலுப்புவது. பொதுமக்களின் மனச்சாட்சியை உலுப்புவது. அதைத்தான் காந்தி செய்தார். காலிமுகத்திடலில் திரண்டிருந்த போராட்டக்காரர்கள் அடி வாங்கும்போது அது சிங்களக் கூட்டு உளவியலை கோபமடையச் செய்தது. அதன் விளைவாகத்தான் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு அவர்களுடைய சொந்த தேர்தல் தொகுதிகளில் பாதுகாப்பற்ற நிலை தோன்றியது.

பொதுமக்களின் கூட்டுக் கோபத்தை அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற வேண்டும் அதற்கு சித்தாந்தத் தெளிவு மிக்க தலைமைகளும் அமைப்பும் தேவை. இல்லையென்றால், அந்தக்கூட்டுக் கோ-பம் அராஜகமாக மாறும் ஆபத்தும் உண்டு. அது இறுதியிலும் இறுதியாக அரசாங்கத்துக்கு சாதகமாக முடிந்து விடும். ஏற்கனவே இலங்கை தீவு மூன்று தடவைகள் தன் சொந்த மக்களின் ரத்தத்தில் குளித்திருக்கிறது. இன்னும் ஒரு தடவை அது நடக்காது என்று கூறுவதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை.

மேலும் மஹிந்தவின் ஆதரவாளர்களை பொதுமக்களும் ஆர்ப்பாட்டக்காரர்களும் திருப்பி தாக்கிய பொழுது அங்கேயும் அகிம்சை இருக்கவிலலை. மஹிந்தவின் ஆதரவாளர்கள் நிர்வாணமாக்கப்பட்டார்கள். அது ரசிக்கத்தக்க ஒரு வெற்றி அல்ல. இந்த நாடு தன்னை தேரவாத பௌத்தத்தின் பாதுகாப்பிடம் என்று கூறுகிறது. ஆனால் எதிரிகளின் நிர்வாணத்தைப் பார்த்து இன்புறுகின்றது. 1971ஆம் ஆண்டு ஜெ.வி. பி யின் முதலாவது ஆயுதப் போராட்டத்தின் போது கதிர்காமத்து அழகியான மனம்பெரியை நிர்வாணமாக்கிய ஒரு நாடு. அதன்பின் 1983ல் தமிழ் மக்களின் நிர்வாணத்தை வெற்றியாகக் கொண்டாடிய ஒரு நாடு. அதன்பின் 2009இல் இசைப்பிரியாவின் நிர்வாணத்தை ரசித்த ஒரு நாடு.போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த தமிழ் மக்களின் நிர்வாணத்தை ரசித்த ஒரு நாடு.அலறி மா-ளிகையில் இருந்து வந்தவவர்களாக இருந்தாலும், நரகத்தில் இருந்து வந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய நிர்வாணத்தை ரசிக்கும் அந்த மனோநிலை நாகரீகமானது அல்ல, அறவழியும் அல்ல.

பொதுமக்களின் கோபம் தர்கபூர்வமானது. ஆனால் அது நெறிப்படுத்தப்பட வேண்டும். அரசியல் ஆக்க சக்தியாக மாற்றப்பட வேண்டும். யார் அதைச் செய்வது?

மஹிந்த தனது தம்பியை பலவீனப்படுத்தும் நோக்கத்தோடு ஒரு சதிச் செயலாக அவ்வாறு தனது ஆதரவாளர்களை தூண்டிவிட்டார் என்ற ஒரு விளக்கம் தென்னிலங்கையில் உண்டு. அல்லது இருவருமே சேர்ந்து திட்டமிட்டு விட்டு தங்களுக்கிடையே முரண்பாடுகள் இருப்பது போல காட்டிக் கொள்கிறார்கள் என்ற ஒரு விளக்கமும் உண்டு. எதுவாயினும் இப்போதுள்ள நிலைமைகளின்படி அரசாங்கம் போராட்டங்களுக்கு பணிய வேண்டியிருக்கிறது. ஏனெனில், மஹிந்த ராஜினாமா செய்ததன் மூலம் கோட்டாவும் ராஜினாமா செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் மகா சங்கமும் சட்டத்தரணிகள் சங்கமும் கேட்டுக்கொண்டபடி ஒரு இடைக்கால ஏற்பாட்டுக்கு போக வேண்டியிருக்கும். ஆனால் அங்கேயும் பிரச்சினை உண்டு.

நாடு இப்பொழுது மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு கப்பலை போன்றது. இதிலிருந்து தப்பியோடும் எந்த ஒரு எலியும் கப்பலுக்கு தலைமை தாங்க முன்வராது. குறிப்பாக தனது அரசியல் எதிர்காலத்தைப் பாதுகாக்க விரும்பும் எந்த ஒரு சுண்டெலியும் இந்த பிரச்சினையை பொறுப்பெடுத்து தோல்வியுற முன்வராது. இப்போதிருக்கும் பொருளாதார நெருக்கடியை புத்த பகவானே பிரதமராக வந்தாலும் உடனடியாகத் தீர்க்க முடியாது. எனவே தனது எதிர்காலத்தை குறித்து அச்சப்படும் எந்த ஒரு அரசியல்வாதியும் மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலுக்கு மாலுமியாக விரும்பமாட்டார். இந்நிலையில் ஒன்றில் ஓய்வுபெற்ற அரசியல்வாதிகளை முன்னே கொண்டுவர வேண்டும். அல்லது தேர்தல் அபிலாசைகள் இல்லாத அறிஞர்களை அல்லது சிவில் சமூகத்தவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். அதன் மூலம்தான் இடைக்கால ஏற்பாடாக ஒரு அரசாங்கத்தை உருவாக்கலாம். அதன் மூலம்தான் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தலாம். அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டால்தான் பொருளாதாரத்தை திட்டமிடலாம். புதிதாக நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் ஆளுநர் அதைத் தெளிவாக கூறிவிட்டார். அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த தவறினால் தான் பதவி விலகப்போவதாக அவர் அண்மையில் எச்சரித்திருக்கிறார். எனவே ஏதாவது ஒரு அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இப்பொழுது நாடாளுமன்றத்தின் கைகளில் மட்டுமல்ல மகாசங்கம் சிவில் சமூகம் போன்ற எல்லாருடைய கைகளிலும் உண்டு.

## வீணாவின் கவிக்கணை

அங்கு
எட்டடுக்கு மாளிகை உயரத்தில் ஒரு கோபுரம்,
இங்கு
குடிசை வீட்டிலோ கூரைக்கே பஞ்சம்,
ஆடம்பர மின் விளக்கின் வெளிச்சத்தால், வீதி
எங்கும் பரவசம், அதை படிக்க
பயன்படுத்தும் சாலை ஓரக்குழந்தைகள்,
பசிக்கு உணவல்ல அங்கு ருசிக்கே விருந்து,
சிலர் ருசிக்கல்ல இங்கு பசிக்கும் இல்லை உணவு,
அங்கு ஆடை ஆபரணங்களுக்கு இல்லை பஞ்சம்,
இங்கு கந்தல் அடையை தவிர வேறென்ன மிஞ்சும்
வாழ்வதற்க்குத்தான் வாழ்க்கை வீழ்வதற்கல்ல.
நீ வாழ்ந்த மிச்சத்தின் சொச்சத்தில் உனக்குக்கீழ்
இருப்பவனுக்கு பகிர்ந்து கொடு,
புண்ணியம் என்பதை எண்ணாதே,
நீ மனிதம் உள்ள மனிதன் என்பதை மட்டும்
உணர்ந்திடு, நீயும் வாழ்ந்து,
அடுத்தவரையும் வாழ வைப்பாய் மனிதனாய்.

# தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்கக் கோரி பிரதமர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்



நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதி, உச்ச நீதிமன்ற கிளையை சென்னையில் அமைக்க வேண்டும், தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, பிரதமர் மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிப்பதில் சமூக நீதியைப் பின்பற்றிட வேண்டுமென்றும், உச்ச நீதிமன்றத்தின் நிரந்தரக் கிளைகளை புதுடெல்லி, சென்னை, கொல்கத்தா மற்றும் மும்பை ஆகிய இடங்களில் நிறுவிட வேண்டுமென்றும், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை அலுவல் மொழியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி. ரமணா ஆகியோருக்கு இன்று (மே 12) கடிதம் எழுதியுள்ளார்.

நீதித்துறை தொடர்பான சில முக்கிய விஷயங்களை இந்தியப் பிரதமர் மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும், அவை விரைவில் கவனிக்கப்பட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.கூட்டாட்சிக் கட்டமைப்பே இந்திய அரசியலமைப்பின் அடித்தளம் என்றும், ஜனநாயகத்தின் மூன்று தூண்களான சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை ஆகியவை இந்த கூட்டாட்சிக் கட்டமைப்பிற்குள் நிறுவப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ள முதல்வர் மாநிலங்களில் பல்வேறு நிலைகளில் நீதிமன்றங்கள் இருப்பினும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளை இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும், அலுவலர்களும் பின்பற்றும் வகையில் நீதித் துறையின் அமைப்பு உள்ளதைச் சுட்டிக்காட்டி, மற்ற அம்சங்களில், நீதித்துறையும் நமது அரசியலமைப்பில் பொதிந்துள்ள கூட்டாட்சித் தத்துவத்தின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் அமைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தப்பின்னணியில், உச்சநீதிமன்றமும், உயர் நீதிமன்றங்களும் நமது நாட்டின் பன்முகத்தன்மையோடு அமைய வேண்டுமென்ற கருத்து முக்கியத்துவம் பெறுகிறது என்று முதல்வர் தெரிவித்துள்ளார். நாட்டின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் நீதிபதிகள் நியமிக்கப்படும்போதுதான், பன்முகத் தன்மையும், ஒட்டுமொத்த சமூகத்தின் கண்ணோட்டங்களும், உணர்வுகளும் பிரதிபலிக்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துள்ள முதல்வர் அந்த வகையில், உச்ச நீதிமன்ற அமர்வில் அனைத்து மாநிலங்களுக்கும் விகிதாச்சார பிரதிநிதித்துவம் அமைய வேண்டுமென்று தான் கருதுவதாகத் தெரிவித்துள்ளார். எனவே, உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில் சமூகப் பன்முகத்தன்மையையும், சமூக நீதியையும் பேணும் வகையில், நீதிபதிகளை நியமிப்பதற்கான நடைமுறைக் குறிப்பில் அதற்கேற்ப உரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்று இந்தியப் பிரதமர் மற்றும் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரை முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அடுத்து, நாட்டின் கூட்டாட்சித்தன்மை நீதித்துறையில் பிரதிபலிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அதற்கு உச்ச நீதிமன்றத்தின் நிரந்தரக் கிளைகளை பல்வேறு மாநிலங்களில் நிறுவ வேண்டியதன் தேவையையும் தனது கடிதத்தில் முதல்வர் எடுத்துரைத்துள்ளார். நாட்டிலுள்ள அனைத்துக் குடிமக்களும் நீதிமன்றத்தை நேரடியாக அணுக வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசமைப்புச் சட்டத்தை வகுத்தளித்தவர்கள் 32வது பிரிவை இயற்றியுள்ளனர் என்றும், ஆனால், உச்ச நீதிமன்றத்திற்கு அருகில் இருக்கும் மாநிலங்களைச் சார்ந்தகுடிமக்களுக்கு மட்டுமே இதுசாத்தியமாகும்நிலை உள்ளது என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.மேலும், நாடு முழுவதும் பல்வேறு உயர் நீதிமன்றங்கள் இருந்தாலும், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளின் எண்ணிக்கை அதனைச் சுற்றியுள்ள மாநிலங்களிலிருந்து அதிகம் என்பதை தரவுகளிலிருந்து அறிய முடிகிறது என்று தெரிவித்துள்ள முதல்வர் அரசியல் நிர்ணய சபையில் இது தொடர்பாக நடைபெற்றுள்ள விவாதங்களும், பாராளுமன்ற நிலைக்குழுக்களின் பரிந்துரைகளும், பல்வேறு சட்ட ஆணையங்களின் அறிக்கைகளும் உச்ச நீதிமன்றத்தின் கிளைகளை மாநிலங்களில் அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதாக தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, புதுடெல்லி, சென்னை, கொல்கத்தா மற்றும் மும்பை ஆகிய இடங்களில் உச்ச நீதிமன்றத்தின் நிரந்தரக் கிளைகளை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.அடுத்து, கூட்டாட்சித் தத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் மற்றொரு விஷயமான உயர் நீதிமன்றங்களின் அலுவல் மொழி குறித்து இந்தியப் பிரதமர் மற்றும் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள முதல்வர் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் பிஹார் ஆகிய நான்கு உயர் நீதிமன்றங்களில், ஆங்கிலத்துடன் இந்தி மொழியும் அலுவல் மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை ஆக்குவதற்கு ஏதுவாக, தமிழ் மொழியில் தரமான சட்ட நூல்களை வெளியிடுவதற்கு மாநில அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும், செம்மொழியாகவும், அதே சமயம் நவீன மொழியாகவும் உள்ள தமிழ் மொழியினை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக பயன்படுத்துவது முற்றிலும் பொருத்தமானதாக இருக்கும் என்றும் முதல்வர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.சட்டத்தையும், நீதியையும் சாமானிய மக்களுக்குப் புரியவைப்பது நீதி வழங்கல் அமைப்பின் இன்றியமையாத கடமை என்றும், அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ள முதல்வர் மாநிலத்தின் அலுவல் மொழியை உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக ஆக்குவதில் உள்ள சிரமங்களை நவீன தொழில்நுட்பத்தின்மூலம் எளிதில் சரிசெய்திட முடியும் என்று தெரிவித்துள்ளார்.

எனவே, தமிழக அரசின் அலுவல் மொழியான தமிழை, ஆங்கிலத்துடன் சேர்த்து, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளையின் அலுவல் மொழியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதல்வர் தனது கடிதத்தில் கோரியுள்ளார்.உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி முன்னிலையில் கடந்த 2022 ஏப்.23 அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில், இந்த மூன்று கோரிக்கைகளையும் தான் முன்வைத்ததாகவும், இவை எதிர்காலத்தில் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் முதல்வர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி. ரமணா ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# ராஜபக்சே சகோதரர்களுக்கு இந்தியாவின் எந்த மூலையிலும் அடைக்கலம் அளிக்கக் கூடாது: சீமான்

ராஜபக்சே சகோதரர்கள் இந்தியாவிற்கு அடைக்கலம் தேடி வரப்போவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன, இரண்டு லட்சம் தமிழர்களைத் துள்ள துடிக்கப் படுகொலை செய்த அக்கொடுங்கோலர்களுக்கு மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பாஜக அரசு எக்காரணம் கொண்டும் இந்தியாவின் எந்த மூலையிலும் அரசியல் அடைக்கலம் அளிக்க முன்வரக்கூடாது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் புரட்சி வெடித்துள்ளதை அடுத்து இனப்படுகொலையாளர்களான ராஜபக்சே சகோதரர்கள் உள்ளிட்ட அந்நாட்டின் ஆட்சியாளர்கள் மக்களால் ஓட ஓட விரட்டப்பட்டு அவர்களது வீடுகள் உள்ளிட்ட உடைமைகள் தீவைத்து எரிக்கப்படும் காட்சிகள் நாள்தோறும் வெளியாகி வருகின்றன.சிங்கள இனவாதமும், பௌத்த மதவாதமும் இணைந்து தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை மறுத்து, அதன் விடுதலையைத் தகர்த்து, அதற்காகப் போராடிய மக்களை இனப்படுகொலை செய்து அழித்தொழித்தது.



மக்கள் நலனில் அக்கறை செலுத்தாமல் மத, இன வெறியை மக்களுக்கு ஊட்டி, தமிழர்கள் மீதான வன்மத்தை வளர்த்து, அதன் மூலம் மாறி மாறி அரசாண்ட சிங்கள கொடுங்கோன்மை ஆட்சியாளர்களே இன்று இலங்கையில் நடக்கும் அத்தனை துயரங்களுக்கும் மூல காரணம். அதற்குத் துணைபோன அப்பாவி சிங்கள மக்கள் ஐம்பதாண்டுகளாகத் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளை, பொருளாதார நெருக்கடிகளை இன்றைக்கு அனுபவித்து வருகின்றனர்.ஒரு நாட்டில் உண்ண உணவும், குடிக்க நல்ல நீரும் கிடைக்காத போது அங்குப் புரட்சி ஏற்படுவதை ஒருபோதும் தடுக்க முடியாது என்பதற்கு நிகழ்காலச் சாட்சியாக இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் அமைந்துள்ளன.

இன்று இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நிலை நாளை இந்தியாவிற்கும் ஏற்படலாம். எனவே இனியேனும் இந்திய பெருநாட்டை ஆளும் மோடி அரசாங்கம் மதத்தின் மூலம் மக்களைத் தூண்டி பிரித்தாளும் சூழ்ச்சியையும், தேசிய இனங்களின் உரிமைகளைப் பறித்து அவர்களின் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றைச் சிதைத்து இந்தியாவை ஒற்றையாட்சியின் கீழ் கொண்டுவரும் கொடுங்கோன்மையை இனியாவது கைவிட வேண்டும்.

இல்லையென்றால் ஒற்றையாட்சியை நடைமுறைப்படுத்திய இலங்கையில் ஏற்பட்ட மக்கள் புரட்சி நாளை இந்தியாவிலும் ஏற்படும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பதை இந்திய ஆட்சியாளர்கள் உணர வேண்டும். மேலும், தற்போது சொந்த நாட்டு மக்களாலேயே விரட்டப்படும் நிலைக்கு ஆளாகியுள்ள ராஜபக்சே சகோதரர்கள் இந்தியாவிற்கு அடைக்கலம் தேடி வரப்போவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இரண்டு லட்சம் தமிழர்களைத் துள்ள துடிக்கப் படுகொலை செய்த அக்கொடுங்கோலர்களுக்கு மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பாஜக அரசு எக்காரணம் கொண்டும் இந்தியாவின் எந்த மூலையிலும் அரசியல் அடைக்கலம் அளிக்க முன்வரக்கூடாது. அதுமட்டுமின்றி இந்தியாவின் மூலம் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லவும் அனுமதிக்கக் கூடாது எனவும் மத்திய அரசை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன், என்று அவர் கூறியுள்ளார்.

# இன்றைய சூழ்நிலையில் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச பதவி விலகுவதே அவருக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது!

- கனடா நக்கீரன்

*ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற பேருஞ் சதமல்ல, பெண்டீர் சதமல்ல, பிள்ளைகளும் சீருஞ் சதமல்ல, செல்வஞ் சதமல்ல,தேசத்திலே யாருஞ் சதமல்ல, நின்தாள் சதங் கச்சியேகம்பனே*
(பட்டினத்தார் - கச்சி திருஏகம்பமாலை)

ஒரு மனிதனுக்கு அவன் பிறந்த ஊரோ, உற்றார் உறவினரோ, அவன் சம்பாதித்த பணமோ, பெயரோ, புகழோ, மனைவியோ, மக்களோ வேறு யாருமோ உதவிக்கு வரப் போவதில்லை. அதனால், காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் ஏகாம்பரேஸ்வரர் திருவடியே நமக்கு உற்ற துணை என்பது பாடலின் பொருள்.

"எங்களை யாராலும் வீழ்த்த முடியாது, எங்களிடம் இரத கஜ துரக பதாதிகள் இருக்கின்றன, கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருவதற்கு அமைச்சர் பட்டாளம் இருக்கிறது. எனக்கு நாடாளுமன்றத்தில் அறிதிப் பெரும்பான்மை இருக்கிறது. நான் பிரதமர் பதவியிருந்து விலக மாட்டேன். சனாதிபதி என்னைப் பதவி விலகுமாறு கேட்கவும் மாட்டார்" என மார்தட்டிய மகிந்த இராசபச்ச இன்று பிரதமர் பதவியைத் துறந்து விட்டார். அதுமட்டுமல்ல உயிருக்குப் பயந்து திருகோணமலை கடற்படைத் தளத்தில் தஞ்சம் புகுந்துள்ளார்.

பிரதமர் தனது பதவியை வேளை காலத்தோடு துறந்து மரியாதையோடு ஒதுங்கியிருக்கலாம். அதனை அவர் செய்யத் தவறிவிட்டார். அதனால் அவரால் வெளியில் தலைகாட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வாரம் மகிந்த இராசபக்ச சிறிலங்கா பொதுசன பெரமுனையில் இருக்கும் ஆயிரத்துக்கும் அதிகமான தனது ஆதரவாளர்களை பல பேருந்துகள் மூலம் அம்பாந்தோட்டையில் இருந்து கொழும்புக்கு அழைத்திருந்தார். அவர்களில் சிறைச்சாலைக் கைதிகளும் அடங்கும். அவர்களை வைத்து அலரிமாளிகையில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார். அதில் நா.உறுப்பினர் யோன்ஸ்ரன் பெர்னாந்து மற்றும் சிலரும் மகிந்த இராசபச்சாவை ஆதரித்துப் பேசினார்கள்.அவர் பதவி விலகக் கூடாது என ஆவேசமாகப் பேசினார்கள். அங்கு வி.புலிகளுக்கு எதிரான போரில் இடம்பெற்ற ஒளிப்படங்கள் ஒளிபரப்பப்பட்டன. தமிழ் விடுதலைப் புலிகள் பிரபாகரன் எப்படி அரச படைகளால் கொல்லப்பட்டார் போன்ற சிங்கள - பவுத்த பேரினவாதத்தின் போர் "வெற்றி" யைக் கொண்டாடும் வீடியோக்களும் காட்டப்பட்டு அவர்கள் உசுப்பேற்றப்பட்டனர்.

கூட்டம் முடிந்த பின்னர் வந்தவர்களுக்கு உணவும் மதுவும் பணமும் வழங்கப்பட்டன. இவர்களே பிரதமர் மகிந்த வசிக்கும் அலரி மாளிகைக்கு முன் முகாமிட்டு மகிந்த இராசபக்சா வீட்டுக்குப் போகுமாறு முழக்கம் எழுப்பிக் கொண்டிருந்த போராட்டக்காரர்கள் மீது கொடூரமான தாக்குதலை மேற்கொண்டார்கள். அதில் 50 க்கும் மேலானோர் காயப்பட்டார்கள். அதன் பின் அருகிலுள்ள காலிமுகத் திடத்தில் கூடாரமிட்டிருந்த போராட்டக்காரர்களின் கூடாரங்களை கிழித்தெறிந்து தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கு கட்டியிருந்த பதாதைகள், கொடிகள் கிழித்தெறியப்பட்டன. காவல்துறையினர் இராசபக்சாவின் "சண்டியர்களை" கட்டப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளாது வேடிக்கை பார்த்தனர்.

இதனைத் தொலைக்காட்சியில் கண்ட மக்கள் காலிமுகத்திடலுக்கு படையெடுத்து வந்து மகிந்த இராசபக்சவின் ஆதரவாளர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தினார்கள். அதுவரை முற்றிலும் அமைதியாக நடந்து வந்து பாலிமுகத் திடல் போர்க்களமானது. மகிந்தாவின் ஆதரவாளர்கள் பலரைப் பிடித்து கட்டிவைத்து மக்கள் அடித்தார்கள். அப்போதுதான் தாங்கள் தலைக்கு ரூபா 2,000 கொடுத்து சொகுசு பேருந்துகளில் கொண்டு வரப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த சொகுசு பேருந்துகளில் பல எரியூட்டப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இராபக்ச குடும்பத்துக்குச் சொந்தமான வீடுகள், உணவகங்கள் ஆவேசம் கொண்ட பொதுமக்களால் ஒரே இரவில் எரியூட்டப்பட்டன. மேலும் இராசபக்சா குடும்பத்துக்கு நெருக்கமானவர்கள் எனக் கருதப்பட்ட அமைச்சர்கள், ஆதரவாளர்களின் வீடுகள், விற்பனை நிலையங்கள் தாக்கி அழிக்கப்பட்டன. பதுக்கி வைத்திருந்த யூரியா மூட்டைகள், சமயல் எரிவாயு சிலிண்டர்கள், நெல் மூட்டைகள் மக்களால் சூறையாடப்பட்டன.

மகிந்த இராசபக்சவை வீட்டுக்குப் போகுமாறு போராட்டக்காரர்கள் வீதியில் இறங்கிப் போராடியபோது அதனை அவர் அலட்சியம் செய்தார். "எனக்கு 50 ஆண்டுக்கு மேலான அரசியல் அனுபவமுண்டு. இதைப்போல் எனக்கு எதிரான பல போராட்டங்களை பார்த்தவன் நான். இந்தப் பூச்சாண்டிகளுக்கு எல்லாம் நான் அடிபணிய மாட்டேன். நான் ஒரு தெருச் சண்டியன் **(street fighter)** எனக்கு எதிராகப் போராடுபவர்கள் எப்போதும் எனக்கு எதிரானவர்கள்" என வீராப்போடு சொன்னார்.

ஐம்பது ஆண்டு காலம் அரசியலில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர் தனக்கும் தனது குடும்பத்துக்கும் எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்து நடத்தும் போராட்டத்தின் பரிமாணத்தை சரியாக எடைபோடத் தவறிவிட்டார். அது ஒரு வெகுமக்கள் போராட்டம் என்ற யதார்த்தத்தை புரிய மறுத்து விட்டார்.

இதனால் அமைதிப் போராட்டம் வன்முறைப் போராட்டமாக வெடித்தது. விளைவு இராசபக்சக்களுக்குச் சொந்தமான வீடுகள் எரிக்கப்பட்டன. அவரது சொந்த ஊரில் நிறுவப்பட்டிருந்த அவரது தந்தையார் டி.ஏ. இராசபக்சவின் ஆளுயுர நிறுவப் பட்ட உருவச் சிலையை மக்கள் கயிறு போட்டு இழுத்து விழுத்தினார்கள். இந்தக் காட்சி 2003 இல் இராக்கின் சர்வாதிகாரி சதாம் குசேனின் உருவச் சிலையை இராக் நாட்டின் மக்கள் இழுத்து விழுத்திய காட்சியை நினைவுக்குக் கொண்டுவருகிறது. மக்கள் இத்தோடு நின்றுவிடவில்லை. மகிந்த இராசபக்ச மற்றும் கோட்டாபய இராசபக்ச குடும்பம் அதே டி.ஏ. இராசபக்சவுக்கு அம்பாந்தோட்டையில் கட்டிய அருங்காட்சியகம் எரியூட்டப்பட்டது.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது முன்னாள் பிரதமர் இரணில் விக்கிரமசிங்க மீண்டும் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவர்களால் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. இது எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கிடுத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தார் என்ற பழமொழியை ஞாபகப்படுத்துகிறது. இரணில் பிரதமராக நியமிக்கப்படுவது இரு ஆறாவது தடவையாகும். ஆனால் ஒருமுறையாவது ஐந்து ஆண்டுகளை அவர் நிறைவு செய்யவில்லை. இராசியில்லாத பிரதமர்!

பிரதமர் பதவிக்குப் பலர் ஆசைப்பட்டார்கள். ஆனால் மாலை எதிர்பாராத விதமாக விக்கிரமசிங்கவின் கழுத்தில் விழுந்துள்ளது. கோட்டாபய சனாதிபதியாக இருக்கும்வரை பிரதமர் பதவியை ஏற்க மாட்டேன் எனச் சூளுரைத்த சஜித் பிரேமதாச கடைசி நேரத்தில் தான் பிரதமர் பதவியை ஏற்கத் தயார் என அறிவித்தார். ஆனால் அவருக்காக மூன்று நாட்கள் காத்திருந்த சனாதிபதி கோட்டாபய இராசபக்ச, தனிமரமாக நாடாளுமன்றத்தில் நிற்கும் இரணில் விக்கிரமசிங்கவுக்கு முடிசூட்டி விட்டார்.

இரணில் விக்கிரமசிங்காவின் நியமனத்துக்கு இரண்டு முக்கிய மதத் தலைவர்கள் சிவப்புக் கொடி காட்டிவிட்டார்கள். இரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவிக்கு நியமித்ததை ஏற்றுக்கொள்ள முடியாது என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவையின் பிரதமராக ரணில் விக்ரமசிங்கவை நியமிப்பதற்கு சனாதிபதி கோட்டாபய இராசபக்ச எடுத்ததாக கூறப்படும் முடிவு குறித்து பேராயர் இன்று கொழும்பில் செய்தியாளர்களிடம் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

"இரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் ஒரு பிரதிநிதி மட்டுமே. அவருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை. அரசியலில் தோற்கடிக்கப்பட்ட மற்றும் மக்களால் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்ட ஒருவரை பிரதமராக நியமிப்பது சட்டபூர்வமானது அல்ல" என்கிறார் பேராயர். அவரது பதவியேற்பு விழாவை இரத்துச் செய்ய வேண்டும் என்கிறார். மேலும் அனைத்து மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஒரு நபரை மக்கள் விரும்புகிறார்கள் என்றும் பேராயர் தெரிவித்துள்ளார்.

வணக்கத்திற்குரிய ஓமல்பே சோபித தேரர், பிரதம சங்கநாயக்க (தட்சண லங்காவ), அவர்களும் இரணில் விக்கிரமசிங்கவின் நியமனத்துக்கு எதிரான கருத்தை வெளியிட்டுள்ளார். **"**மகாநாயக்க தேரர்கள் கட்சி சார்பற்ற நபரை பரிந்துரைக்கின்றனர். தற்போதைய நெருக்கடியிலிருந்து எதிர்காலத்தில் நம்பிக்கையுடன் முன்னேறுவது அவசியம் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம், அரசியல் அமைப்பில் முழுமையான மாற்றம் தேவை. அது தற்போதைய நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்கள் மூலம் நடக்க முடியாது. இந்த நாட்டின் அனைத்து குடிமக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய ஒரு பக்கச் சார்பற்ற ஒருவரால் மட்டுமே முடியும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

"மக்கள் ஆணையை இழந்துவிட்ட ஜனாதிபதியால் மக்கள் ஆணையயே பெறாதவர் பிரதமராக நியமனம் செய்யப்பட்டது முற்று முழுதாக சனநாயக விரோதச் செயல்" என ததேகூ இன் பேச்சாளரும் நா.உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் காட்டமாகக் கூறியுள்ளார்.

இரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் ஊழல்வாதியல்ல என்பது சரியே. அவர் ஒரு கனவான் என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியலே ஆனால் அவர் ஒரு திறமைசாலி எனக் கூறமுடியயாது. இவர் பிரதமராக இருந்த போதுதான் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 1.1 பில்லியன் டொலர் கடனுக்கு ஈடாக 99 ஆண்டுகள் சீனாவுக்கு எழுதிக் கொடுத்தவர். அப்போது இலங்கையின் வெளிநாட்டு நாணய இருப்பு அ.டொலர் 7.5 பில்லியானக இருந்தது. அவரது காலத்தில்தான் நா.உறுப்பினர்களுக்கு பல இலட்சம் டொலர் செலவில் 240 சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டது. இவரது ஆட்சியில்தான் (2018) 4,400 ஆக இருந்த உள்ளூராட்சி உறுப்பினர்களின் தொகை 8708 ஆக உயர்த்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி 27 பெப்ரவரி, 2015 இல் நடத்திய பிணைமுறிவு விற்பனையில் அ.டொலர் 11 மில்லியன் இழப்பு ஏற்பட்டது. அதனை மூடி மறைக்க இரணில் விக்கிரமசிங்க மெத்தப் பாடுபட்டார்.

எனவே பாதாளத்துக்குள் போய்விட்ட இலங்கையின் பொருளாதாரத்தை, குறிப்பாக வெளிநாட்டு நாணய இருப்பை, புதிய பிரதமர் இரணில் விக்கிரமசிங்க தூக்கி நிறுத்த அவரிடம் மந்திரக் கோல் இருப்பதாக நம்புவது கடினமாக இருக்கிறது. மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியா அவரது நியமனத்தை வரவேற்றுள்ளன. ஆனால் ஒண்டாண்டியாகிவிட்ட இலங்கையைக் காப்பாற்ற அந்த நாடுகள் முன்வர விரும்புவார்களா என்பது கேள்விக் குறியே.

இந்தச் சூழ்நிலையில் மத்தியின் வங்கி ஆளுநர் நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு அ.டொலர் 50 மில்லியனாக வரண்டுவிட்டது என முறைப்படுகிறார். அரசியல் உறுதித்தன்மையை சனாதிபதி கோட்டாபய உறுதிப்படுத்தா விட்டால் தனது பதவியைத் துறக்கப் போவதாக மிரட்டியுள்ளார்.

சனாதிபதி மாளிகைக்கு முன்னர் நடைபெறும் "கோட்டாபய வீட்டுக்குப் போ" என்ற போராட்டம் தொடரலாம் எனப் புதிய பிரதமர் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். இது நல்ல முடிவு. ஆனால் இப்படி மழையிலும் வெய்யிலிலும் ஒரு மாதத்துக்கும் மேலாகப் போராடும் இளைஞர்கள் யார், யார்? அவர்களது பின்புலம் என்ன?

இந்த இளைஞர்கள் சோசலீச முன்னணிக் கட்சியின் **(Frontline Socialist Party)** கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக் கழக மாணவ அமைப்பினர் **(IUSF)** எனச் சொல்லப்படுகிறது. தொடர்ச்சியாக இரவு பகல் 24 மணி நேரமும் போராட்டம் கட்டுப்பாட்டோடு நடைபெறுவது அதனை உறுதிப்படுத்துகிறது. போராடும் இளைஞர்களின் முக்கிய கோரிக்கையான "கோட்டாபய வீட்டுக்குப் போ" என்ற கோரிக்கை நிறைவேறவில்லை. தனது அண்ணனைப் பலிக்கிடாவாக கொடுத்துவிட்டு சனதிபதி கோட்டாபய இராசபக்ச தப்பித்துள்ளார். ஆனால் நிறைவேற்று அதிகாரம் படைத்த கோட்டாபய இராசபக்சாவை சனாதிபதி பதவியில் இருந்து அகற்றாவிட்டால் காத்திரமான எந்த மாற்றமும் இடம்பெறப் போவதில்லை.

வருகிற மே 17 இல் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவர்களுக்கு எதிராக ஒரு தீர்மானம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்பட இருக்கிறது. ஆனால் அந்தத் தீர்மானம் நிறைவேறினாலும் அதற்குச் சட்டவலு இல்ல என்கிறார்கள். சட்ட திருத்தம் 20 நீக்கப்பட்டாலோ சட்ட வலுவுள்ள இன்னொரு சட்ட திருத்தத்தை நிறைவேற்றலாம்.

நான் சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தது போல இராசபக்ச குடும்பம் உலக வரலாற்றில் இருந்து பாடம் படிக்க மறுக்கிறது. இலங்கையில் வாழும் அனைத்துத் தரப்பினரும் - மருத்துவர்கள், ஆசிரியர்கள், மாணாக்கர்கள், மலையகத் தொழிலாளர்கள் - ஒரே குரலில் இராசபக்ச குடும்பம் வீட்டுக்குப் போகுமாறு போராடி வருகிறார்கள். இந்த யதார்த்தத்தை மகிந்த இராசபக்ச நேரத்தோடு புரிந்து கொள்ளாத காரணத்தினாலேயே தனது பிரதமர் பதவியை இழந்து அவமானப்பட நேர்ந்தது.

இன்றைய சூழ்நிலையில் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச வெட்கத்தைக் கைவிட்டு பதவி விலகுவதே அவருக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது. அவர் பதவி விலகினால் தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வரும். காலிமுகத் திடலில் இரவு பகல் பாராது போராடும் மாணவர்களும் வீட்டுக்குப் போவார்கள். இயல்பு நிலை திரும்பும்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

# நரியின் கையில் நாடு

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர், லண்டன்)**

அவரை பதவியிலிருந்து விலக்கி மஹிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா இப்போது என்ன செய்யப் போகிறார்? ரணில் அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பை ஆதரிப்பாரா? அல்லது ரணில் மைத்திரியிடம் தன்னை ஆதரிக்கும்படி கோரி நிற்பாரா?




நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டுவந்தது இவரது அரசியல் ஆசான் மற்றும் மாமாவான ஜெ ஆர் ஜெயவர்தன என்பதை இலங்கை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அப்படியான கட்சிக்குத் தலைமையேற்று அதன் சார்பில் தான் ஒருவர் மட்டுமே நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியல் உறுப்பினராக இருக்கும் ஒருவரால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க முடியுமா? அதுவும் தன்னை பிரதமராக்கிய கோத்தாபய ராஜபக்சவிற்கு எதிராக அவரது அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் 19 ஆவது சட்டத் திருத்தத்தை மீண்டும் கொண்டுவர இதய சுத்தியுடன் நடவடிக்கை எடுப்பாரா?

எல்லா அரசியல்வாதிகளைப் போன்று அவருக்கும் கறைபடிந்த ஒரு பின்புலம் உள்ளது. தமிழ் மக்களின் போராட்டத்தின் போது இடம்பெற்ற படுகொலைகள், கடத்தல், காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கக்ணகான சம்பவங்களில் ஆட்சியிலிருந்த அனைவருக்கும் தொடர்பும் பொறுப்பும் உள்ளது. அதை யாரும் மறுக்க முடியாது.

1998 ஆம் ஆண்டின் ஜனாதிபதி ஆணைக் குழுவொன்று பதலந்த (Batalanda) வீட்டுவசதி திட்டத்தின் வீடுகளில் சட்டவிரோதமாக ஆட்களைத் தடுத்துவைத்து சித்திரவதை செய்யும் மையங்களை ரணில் நிர்வகித்து வந்தார் என்று கண்டறிந்தது. இது தொடர்பில் அவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட படங்களை சமூக ஊடக செயல்பாட்டாளர்கள் தேடி எடுத்து தூசிதட்டி பதிவிட்டுள்ளனர்.

"ரணில் ஆரம்பம் முதலே இந்த நாடாளுமன்றத்தில் நியாயத்தன்மை இல்லாமலேயே இருந்தார், அவர் தனது சொந்த தொகுதியில் கூட வெல்லவில்லை, அதேவேளை ஜனாதிபதியும் முற்றாக தான் பதவியில் இருப்பதற்கான நியாயத்தன்மையை இழந்துவிட்டார், மக்கள் அவர் வீட்டிற்கு போக வேண்டும் என்று விரும்புகின்றனர், விரைவில் அது தொடர்பான தீர்மானம் நாடாளுமன்றம் வாக்களிக்கவுள்ளது" என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளரும் சட்டத்தரணியுமான சுமந்திரன் டிவிட்டரில் தெரிவித்துள்ளார். இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவரை ஆதரிக்கப் போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது. அதே போன்று முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடும் இதுவரை வெளியாகவில்லை. ஆனால் அவர்கள் பதவிக்காக எந்த பக்கமும் சாய்வார்கள் என்பதும் காலத்தின் கண்ணாடியாகவுள்ளது.

தற்போது பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணிலுக்கு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் கட்சி தாவல் தடைச் சட்டம் இல்லாத நிலையில், நாடாளுமன்ற வாக்கெடுப்பில் யார் எந்தப் பக்கம் நிற்பார்கள் என்பதும், ரணில் உறுதியாக நாடாளுமன்ற வாக்கெடுப்பில் வெற்றி பெறுவாரா என்பதை ஊகிக்க முடியாமல் உள்ளது.


அவர் உறுதி கூறியுள்ளபடி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மீதான நம்பிக்கையிலா தீர்மானம் கொண்டு வரப்படும் போது, மக்கள் பிரதிநிதிகள் எந்தப்பக்கம் நிற்கிறார் என்பது தெளிவாகிவிடும். அது இம்மாதம்17 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்துவரும் நாட்களில் அவர் தமிழ் மக்கள் தொடர்பில் எப்படியான நிலைப்பாட்டை எடுப்பார் என்பது தெரியவரும். விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்டப் போரில் உயிரிழந்தவர்களின் நினைவை அனுசரிக்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு, அவரது தலைமையிலான அரசு அனுமதியளிக்குமா அல்லது அவரைப் பிரதமராக்கிய கோத்தாபயவின் கடும்போக்கு நிலைப்பாட்டின் பக்கம் அவர் நிற்பாரா?



காணாமல் போனவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆகியோரின் குடும்பத்தாருக்கு அவர் என்ன பதில் சொல்லப் போகிறார்? அடுத்த சில மாதங்களில் ஐ நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான வாக்கெடுப்பும் நடைபெறவுள்ள நிலையில், அதை எப்படிக் கையாள்வார் ஒரு உறுப்பினர் கட்சியின் தலைவராக இருந்து பிரதமராகியுள்ள ரணில் விக்ரமசிங்க.

அனைத்திலும் முக்கியமாக காலிமுகத் திடலில் போராட்டத்தை தொடர்பவர்களின் முக்கிய கோரிக்கையான ராஜபக்சக்கள் மீதான விசாரணைகளை ரணில் முன்னெடுப்பரா, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுனன் மகேந்திரன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா இப்படி ஓராயிரம் கேள்விகள் அவர் முன்னே உள்ளன.




இப்போது நடந்துள்ளது என்னவென்றால் 72 வயதான ஜனாதிபதி, 76 வயதான பிரதமர் பதவி விலகியுள்ளதை அடுத்து 73 வயதான ஒருவரைப் பிரதமராக நியமித்துள்ளது மட்டுமே.

2018 இல் மக்களின் விருப்பத்திற்கு எதிராக ரணில் விக்ரமசிங் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார், ஆனால் 2022 இல் அதே ரணில் விக்ரமசிங்க மக்களின் விருப்பத்திற்கு எதிரான பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். காலம் கொடியது!




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# ஆர்மேனியர்களுக்கு ஹரிஸ்ஸா, யூதர்களுக்கு மற்சூ, ஈழத்தமிழர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிப்பு

தமிழினப்படுகொலையினை நினைவேந்தும் மே-18 தமிழீழத் தேசிய துக்க நாளை மையப்படுத்தி, முள்ளிவாய்க்கால் கஞ்சியுடன் நினைவேந்தல் வாரத்தினை தொடங்குவோம் என அறைகூவல் விடுத்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இந்த விடுதலைப் பண்பாட்டை அடுத்த தலைமுறையின் கைகளுக்கு கடத்துவோம் என தெரிவித்துள்ளது.

மே 12ம் நாள் வியாழக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் உணர்வுபூர்வமாக உலகத் தமிழர்களால் தொடங்குகின்றது.

2009ம் ஆண்டு தமிழர்கள் மீதான சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இனஅழிப்பு போர்க்காலம். கடும்யுத்த களம், உணவுத்தடை, மருந்துக்களுக்கு தடை, போர் தவிர்ப்பு வலயம் என்ற பெயரில் மக்களை கொத்துக் கொத்தாக தனது கொடிய ஆயுதங்களால் இனப்படுக்கொலை செய்து கொண்டிருந்தது. இந்த நெருக்கடியான பெருந்துயரான காலத்தில் மக்களின் வயிற்றுப் பசியினை நம்பிக்கையோடு கஞ்சி தீர்த்திருந்தது.

போராளிகள் தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த அரிசியினை மக்களின் பசிபோக்க கஞ்சியாக சமைத்து வழங்கியிருந்தனர்.

இதுவே "முள்ளிவாய்கால் கஞ்சியாக" மக்களின் அப்பெருந்துயரை நினைவேந்திக் கொள்ளப்படுகின்றது.

இரத்தம் தோய்ந்த தமது வரலாற்றின் வலிகளை அடுத்தடுத்த தலைமுறைகளிடம் கடந்தும் பண்பாடாக 20ம் நூற்றாண்டின் மிகப்பெரிய இனப்படுகொலைக்கு உள்ளான அ10ர்மேனியர்கள் "ஹரிஸ்ஸா" உணவையும், யூதர்கள் "மற்சூ" உணவையும் கொண்டிருப்பது போல், ஈழத்தமிழர்கள் நாமும், "முள்ளிவாய்க்கால் கஞ்சி"யினை எமது அடுத்த தலைமுறையிடம் கடத்தும் ஓர் விடுதலைப் பண்பாடாக இதனை முன்னெடுப்போம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.


## தமிழ்ப்பூங்காவின்
## பாடுங்குயில் – 2022

தமிழ்பூங்காவின் பாடுங்குயில் 2022 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
வயது 4 முதல் 12 வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவு திகதி:
**May (வைகாசி) 31, 2022**
விபரங்களுக்கு:
**(647) 706-6123**
**3001 Markham Road #21**
**Scarborough, ONM1X 1L6**








மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை

**ஜாதகம் பார்க்கப்படும்**

கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில். பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.

குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்
திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்

**கோ. காசிலிங்கம்**

1320 Pharmacy Ave, Scarborough ON, M1R 2T3 (Main Intersection Pharmacy and Ellesmere Rd)
Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164




# 26th YEAR IN PUBLISHING, NEWS, VIEWS AND TAMIL LITERATURE

## கனடா உதயன் 'இலங்கைச் சிறப்பிதழ் வெளியீடும் பிரதம ஆசிரியரின் 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடகப் பயண விழாவும்

காலம்: **Sunday. May 29th, 2022**
**மாலை 5:30**

இடம்: **Metropolitan Centre**
**3840 Finch Avenue East**
**Scarborough, ON MIT 3TA**

வரவேற்புபசாரம்... உரைகள்... இசை மற்றும் நடனம்...







விழா பற்றிய விபரங்களுக்கு:

கதிர்: (416) 893-0399
சோதி: (647) 409-8966
வீணைமைந்தன்: (514) 684-3604
சங்கர்: (416) 270-4343
ஸ்ரீ: (416) 720-6811
மரியராசா: (416) 669-6437
சங்கர் சிவா: (647) 891-7725

(குறித்த நேரத்திற்கு விழா ஆரம்பமாகும்)

# மீண்டும் தேர்வு செய்யுங்கள்

# விஜய் தணிகாசலம்

## ஸ்காபரோ றூஜ் பார்க் MPP வேட்பாளர்

- ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு அதிகூடிய சம்பளம் தரக்கூடிய புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
- தொழிலாளர்கள் நலன் பேண தொழிற்பயிற்சிகளை ஊக்குவிப்பதுடன் வினைத்திறன் மிக்கோருக்கான வேலைவாய்ப்பையும் ஊதியத்தையும் உயர்த்துவதுடன் அதற்கான கல்வியையும் அமைத்துக் கொடுத்தல்
- நெடுஞ்சாலைகளையும் ஏனைய போக்குவரத்து கட்டமைப்பையும் விரிவுபடுத்துவதற்கு நிலக்கீழ் தொடருந்து, புதிய 413 நெடுஞ்சாலை மற்றும் 401 நெடுஞ்சாலை கிழக்குப் பகுதி அபிவிருத்திக்கான நிதியொதுக்கீடு.
- அதிகரித்துள்ள வாழ்க்கைச்செலவீனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எரிபொருள் வரிக்குறைப்புடன், வாகன இலக்கத்தகடு புதுப்பிப்பு கட்டணம் நீக்கம்.
- கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பின்னர் ஒன்ராறியோ மாநிலத்தை மீண்டும் இயங்குநிலைக்குக் கொண்டுவந்து நோய்ப்பரம்பலைத் தடுப்பதற்கு தடுப்பூசிகளையும் தனிநபர் பாதுகாப்பு கருவிகளையும் விநியோகித்தல், மருத்துவத் தாதியரின் எண்ணிக்கையை அதிகரித்தல், முதியவர்களை அவர்களின் வீட்டிலேயே தங்கியிருப்பதற்கான வசதிகளை அமைத்துக் கொடுத்தல்.



ONTARIO PC

விஜயின் அணியில் இணைந்து ஆதரிக்க அழையுங்கள்

vijaythani.ca info@vijaythani.ca 647-946-7761

Authorized by the CFO for the Scarborough-Rouge Park PC Riding Association

# இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் கெடுபிடிகளைக் காட்டிய இலங்கை கடற்படை

ஏற்றுக்கொள்ளப்பட்ட இராஜதந்திர நடைமுறைகளுக்கு மாறாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரக அதிகாரிகள் இலங்கை அரசின் கடும் கெடுபிடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அரசியல் நெருக்கடிகளில் சிக்கியுள்ள இலங்கைக்கு தொடர்ச்சியாக உதவிகளைச் செய்துவரும் இந்திய அரசின் உயரதிகாரிகள் வடக்கே குடாநாட்டிலுள்ள தீவுகளுக்கு பயணிக்க முற்பட்ட போது, அவர்கள் பாதுகாப்பு அமைச்சகத்தின் அனுமதியைக் கோரி பெற்ற பிறகே அங்கு பயணிக்க முடியும் என்று கடற்படை கூறியது இராஜதந்திர முறுகலுக்கு இட்டுச் செல்லும் என்று கூறப்படுகிறது.

இந்த விஷயம் கொழும்பு மூலம் இந்தியத் தலைமையகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக டில்லியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கைக்கான இந்தியத் தூதர் மூலம் இது இலங்கை ஆட்சியாளர்கள் நேரடி பார்வைக்கு எடுத்துச் சென்ற பிறகே அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டிலுள்ள நைனாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய 3 தீவுகளிலும் மின் உற்பத்தி நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டு அந்த திட்டம் கடந்த ஆண்டு சீனாவிடம் கையளிக்கப்பட்டது. எனினும், சீனாவிடம் அந்த திட்டம் கையளிக்கப்பட்டால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் எனச் சுட்டிக்காட்டிய இந்தியா அந்த திட்டங்கள் சீனாவிடம் அளிக்கப்படுவதை கடுமையாக எதிர்த்தது.

இதனையடுத்து எழுந்த அரசியல் அழுத்தம் காரணமாக தீவுகப் பகுதிக்கான மின் உற்பத்தி நிலைய அமைப்புத் திட்டம் தற்போது இந்தியாவிடம் கையளிக்கப்பட்தையடுத்து யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் மற்றும் வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர்கள் நேரில் சென்று திட்டம் அமையவுள்ள இடங்களைப் பார்வையிட திட்டமிட்டனர்.

யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் அதிகாரிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட 3 தீவுகளிற்குச் செல்வதற்காக முறைப்படி இலங்கை கடற்பணையினரிடம் விண்ணப்பித்திருந்தனர்.

ஆனால், எவ்விதமான கேள்விகளுமின்றி, சீன அதிகாரிகளை ஏற்றிச் செல்லும் இலங்கை கடற்படை இந்திய அதிகாரிகளிடம் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறுமாறு வலியுறுத்தியது.

அந்த தீவுகளிற்கான பயண ஏற்பாடுகளை மேற்கொள்வதாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றுவருமாறு யாழ்ப்பாணம் மாவட்ட கடற்படைத் தளபதி இந்திய துணைத்தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். இதன் பின்பு பாதுகாப்பு அமைச்சிற்கு விண்ணப்பித்து அங்கிருந்து கிடைத்த அனுமதியை கடற்படையினரிடம் சமர்ப்பித்தே யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் அந்த மூன்று தீவுகளிற்கும் பயணித்துள்ளார்.

இது தொடர்பில் யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் தமது அதிருப்பியினையும் இலங்கை பாதுகாப்பு அமைச்சிற்கு தெரிவித்ததோடு சாதாரண சுற்றுலாப் பயணிகளே சென்றுவரும் இடத்திற்கு எம்மிடம் பாதுகாப்பு அமைச்சு அனுமதி கோரியிருக்க கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியத் துணைத் தூதுவர் தெரிவித்த அதிருப்தி தொடர்பில் பதிலளித்துள்ள கடற்படையினர் சாதாரண சுற்றுலாப் பயணிகள் சாதாரண பயணிகள் படகில் சென்று வருகின்றனர் இருந்தபோதும் இந்திய அதிகாரிகள் இலங்கை கடற்படையினரின் படகில் சென்று வருவதற்கே பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கோரப்படுகின்றது என பதிலளித்துள்ளனர்.

அவ்வாறான அனுமதியைப் பெற்ற பிறகு இந்திய துணைத்தூதர் ராகேஷ் நடராஜன், தமது அதிகாரிகளுடன் நைனாதீவு, அனலைதீவு, நெடுநீவு ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். அவருடன் அந்தப் பகுதிக்கான பிரதேச செயலாளர்கள் உட்பட இலங்கை அரசின் உயரதிகாரிகளும் உடன் சென்றனர். இந்திய அரசு குடாநாட்டு மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அங்கு சூரிய சக்தி மற்றும் காற்றாலை மூலம் மின் நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

"மூன்றாம் தரப்பு ஒன்று" பாதுகாப்பு குறித்து கவலைகளை எழுப்பியதை அடுத்து, இந்த திட்டங்களை தாங்கள் கைவிடுவதாக கடந்த ஆண்டு சீனா அறிவித்தது.

சீனாவிடம் கையளிக்கப்பட்ட திட்டங்களை ரத்து செய்து, அதை இந்திய அரசு செய்ய இலங்கையை ஒப்புக்கொள்ளச் செய்தது, இந்தியாவிற்கு கேந்திர ரீதியான ராஜதந்திர வெற்றி என்று, இந்த ஒப்பந்தம் கையெழுத்தான சமயத்தில் பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இந்திய அரசின் உதவியுடன் அமையவுள்ள இந்த மூன்று தீவுகளும் பூகோள ரீதியாக இந்தியாவிற்கு அருகிலுள்ளது. மேலும் நீண்டகால அடிப்படையில் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அந்த தீவுகள் ஒரு தளமாக அமையக்கூடும் என்று பாதுகாப்பு ஆய்வாளர் கூறுகின்றனர்.





ஓம் முருகா

# கனடா ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவில்

## Canada Sri Shanmuganatha Swamy Temple



08/05/2022
ஞாயிற்றுக்கிழமை
தொடக்கம்

23/05/2022
திங்கட்கிழமை
வரை

# 2022

# மகோற்சவப் பெருவிழா

**சண்முகப்பெருமான் அடியார்களே!**

சகல செல்வங்களும் ஒருங்கே அமைந்த கனடாத் திருநாட்டிலே, சைவமும் தமிழும் நறுமணம் வீசும் ஒன்ராரியோ மாநிலத்தின் கண் அமைந்துள்ள ரொறன்ரோ மாநகரிலே திருக்கோயில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை வாரி வழங்கிக்கொண்டிருக்கும் வள்ளி தேவசேனா சமேத சண்முகப்பெருமானுக்கு நிகழும் மங்கள கரமான சுபகிருது வருடம் சித்திரை 25 ஆம் நாள் ( 08/05/2022 ) ஞாயிற்றுக்கிழமை தெய்வேந்திர முகூர்த்த நேரமான நண்பகல் 12:00 மணிக்கு துவஜாரோகணம்(கொடியேற்றம்) நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் பகல்–இரவு மகோற்சவம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் தினமும் காலையும் மாலையும் ஆசாரசீலர்களாக வருகை தந்து ஆறுமுகப் பெருமானின் திருவருளைப் பரிபூரணமாகப் பெற்றேகுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

08/05/2022
கொடியேற்றம்
ஞாயிற்றுக்கிழமை

21/05/2022
தேர்த்திருவிழா
சனிக்கிழமை

22/05/2022
தீர்த்தத் திருவிழா
ஞாயிற்றுக்கிழமை

23/05/2022
திருக்கல்யாணம்
திங்கட்கிழமை

மகோற்சவக் குருக்கள்
சிவஸ்ரீ. குமார் குருக்கள்
ஆலய குருமார்கள்
வி.கே.சதீஸ் குருக்கள் (பட்டர்)
மற்றும் கனடாவிலுள்ள குருமார்களும்
கலந்து சிறப்பிப்பார்கள்.

சர்வ சாதகம்
'சாதகச் சுடர்' ப்ரம்மஸ்ரீ.
கெங்காதர. வெங்கடரமணசர்மா

ஆலய நிர்மாணம்
ஸ்தபதியர் திலகம்'சிற்பகலை அரசன்' 'விஸ்வப்பிரமஸ்ரீ'
'சித்திரத்தேர் சக்கரவர்த்தி'
திரு. சரவணமுத்து ஜெயராஜா

அனைவரும் வருக! ஆறுமுகன் அருள் பெறுக!

சண்முக சேவையில்,
சண்முகப் பித்தன்,
(ஆலய தர்மகர்த்தா)



33 Melford Drive, Unit 8, Scarborough, ON M1B 2G6
416-613-1883
https://www.facebook.com/shanmuganathaswamy.hindutemple
www.omshanmuga.org

# MORTGAGES & REFINANCES

## WE WILL GET THE MORTGAGE FOR

- LOW INCOME
- BAD CREDIT
- CONSUMER PROPOSAL



அனைத்துவிதமான
மோட்கேஜ்
தேவைகளுக்கும்,
ஆலோசனைகளுக்கும்
அழையுங்கள்!

## PRIVATE FIRST AND 2ND MORTGAGES WITHIN 24 HOURS



WE ARE CONFIDENT THAT WE CAN HELP YOU

## Shan Thayaparan

Mortgage Architect M08009140

MORTGAGE ARCHITECTS

416-826-7426

shan@shan123.com

# ஸ்ரீலங்காவில் பேயாட்சியும், பிணந்தின்னும் சட்டங்களும்

**இலங்கையில் கடந்த மே மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலவரங்களின் தொகுப்பு.**

- திருமலை நவம்

-----

அலரிமாளிகையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட கலவரத்தால் பல மரணங்கள் படுகொலைகள், தற்கொலைகள், நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம். தீக்கிரையாக்கப்பட்ட வீடுகள் சொத்துக்கள், கொழுத்தப்பட்ட வாகானங்கள் கோடிக்கணக்கான பெறுமதியுள்ள சொத்துக்கள், பரிநாசம் ஆக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகைக்கு முன்னாலும் காலி முகத்திடலிலும் போராட்டத்தில் ஈடுபடடிருந்த பெண்கள் மற்றும் பாதிரிமார்மீது கண் மூடித்தனமாக தாக்கப்பட்டமையின் பின்னணியில் யார்? இருக்கிறார்கள்.

முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் மந்திரிகள் பாரளுமன்ற உறுப்பினர்கள் பிரதேச தலைவர்கள் நகர மேயர்கள் பொதுஜனபெரமுன ஆதரவாளர்கள் ஆகியோரின் வீடுகள், வாசல்கள், வாகனங்கள், உடமைகள் எரியூட்டப்பட்டு, அழிக்கப்பட்ட அனர்த்தம். உயிருக்குப்பயந்து பிரமுகர்கள் தலைமறைவு. நாடு யுத்தபூமியாக கலவரக்காடாக மாறிவிட்ட அகோரம்.

அவசரகால சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டம் பிறப்பித்ததன் காரணமாக மக்கள் அனைவரும் மயான பூமிக்குள் வாழ்வதைப்போன்ற அச்சம். உண்ண உணவில்லை உலைவைக்க எரிபெருள் இல்லை. பால்மா கிடைக்காமல் தாய்மார் பறந்து திரியும் அவலம். பட்டினி சாவை எதிர் நோக்கும் பரிதாபம் நாட்டின் அமைதிக்காக பிரார்த்திக்கும் ஆலய குருமார், பாதிரிமார், பிக்குமார் ஆட்சி மாற்றத்தை நோக்கி மக்களின் படையெடுப்பு. இதுதான் இன்றைய ஸ்ரீலங்கா.

**போராட்ட ஆரம்பத்துக்கான மூலவரலாறு.**

கடந்த மே 9 ஆம் திகதி அலரி மாளிகையில் (9.5.2022) தொடக்கிவைக்கப்பட்ட அடாவடிக்குழப்பத்தின் காரணமாக நாடே அல்லகோலப்பட்டது மாத்திரமல்ல. கலவரங்களும் காடைத்தனங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டதன் காரணமாக வரலாறு காணாத கொந்தளிப்பை நாடு கண்டுகொண்டிருக்கிறது. இதை கலவரம் என்று கூறுவதா ஆர்ப்பாட்டம் என்று அடையாளப்படுத்துவதா.? அல்லது புரட்சி என்று கூறுவதா போராட்டம் என்று சொல்ல முடியுமா? என்று அடையாளப்படுத்த முடியாமல் மக்கள் திணறுகிறார்கள்.

நாட்டில் ஏற்பட்ட பொருளதார நெருக்கடிகள் காரணமாக மக்களின் வாழ்வாதாரம் மிமோசமான நிலயில் பாதிக்கப்பட்ட காரணத்தின் நிமித்தம் அரசாங்கத்தின் ஆற்றல் இன்மையையும் தலைவர்களின் ஆளுமைக்குறைவையும் கண்டித்து “ஜனாதிபதி கோத்தபாய பதவி விலகவேண்டும் மஹிந்த தலைமையிலான அரசாங்கம் கலைக்கப்படவேண்டும்” என்ற கோஷங்களை முன்வைத்து ஜனாதிபதி காரியாலயத்துக்கு அருகில் காலி முகத்திடலில் கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் (9.5.2022) மக்களால் தன் முனைப்பான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இப்போராட்டம் எந்த சக்தியின் துண்டுதலாலும் ஆரம்பிக்கப்பட்டதல்ல. மக்களின் தன் முனைப்பான போராட்டமாக பரிணமித்தது. வன்முறையற்ற ஜனநாயக அறவழிப் போராட்டமாக இது ஆரம்பிக்கப்பட்டது. காலி முகத்திடலில் கோத்தா ஹோ கம என்ற கிராமத்தை உண்டாக்கி மாற்று ஆட்சியை மையப்படுத்தி கூடாரம் அடித்து மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தேசியக் கொடிகளைப் பறக்கவிட்டு இளைஞர்கள் யுவதிகள் பல்கலை மாணவர்கள் பொது மக்கள் தொண்டர் அமைப்புக்கள் என்ற வகையில் இப்போராட்டக்காரர்கள் ஒன்று கூடினார்கள். இவர்களுக்கு சட்டத்தரணிகள் ஆசிரியர்கள் அதிகாரிகள் பல்கலைக்கழக மாணவர்கள் என பல தரப்பினரின் ஆதரவின்பேரில் வலுப்பெற்ற நிலையில் அடுத்தகட்டமாக அலரி மாளிக்கு முன் மைனா ஹோ கம என்ற பாசறை அமைத்து பலவாரங்களாக அமைதிப்போராட்டத்தை நிகழ்த்தி வந்தார்கள்.

இப்போராட்டம் நகர்ந்து கொண்டிருந்த நிலையில் ஏப்ரல் 28 ஆம் திகதி ஜனாதிபதியின் நுஹேகொட இல்லத்துக்கு அருகில் மக்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். அந்த ஆர்ப்பாட்டம் கலவரமாக மாறியது. இந்த ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலீசார் கண்ணீர்புகை பிரயோகமும் தண்ணீர் தாரை வீச்சும் மக்கள் மீது நடத்தப்பட்டது. இதனால் கொழும்பு மாவட்டம் முழுவதும் பொலீஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இதேபோன்று கடந்த 6 ஆம் திகதி (6.5.2022) ஜனாதிபதி கோத்தா மற்றும் ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலக கோரி நாடாளவிய ரீதியில் ஹர்த்தாலுடன் பாரிய போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகவேண்டும் என்ற போராட்டம் உக்கிரம் அடைந்து கொண்டது. ஹர்த்தால் காரணமாக நாடு முற்றாக முடங்கிப்போன நிலையில் அன்றைய தினம் இரவு ஜனாதிபதியால் அவசர கால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. போராட்டக்காரர்களை பணிய வைக்கும் நோக்கிலும் மயமுறுத்தும் நோக்கத்துடனும் அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதற்கு உள்நாட்டவர்களாலும் வெளிநாட்டு ராஜதந்திரிகளாலும் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் கடந்த் 9 ஆம் திகதி (9.5.2022) காலை பிரதமர் மஹிந்தராஜபக்ஷ அலரி மாளிகையில் ஒரு கூட்டத்தை கூட்டியிருந்தார்.தனது ஆதரவாளர்களான முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்,
மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினாகள் என 1000 கணக்கானோர் இதில் கலந்து கொண்டிருந்தார்கள். பிரதமர் பதவி விலக கூடாது என்பதை வலியுறுத்தவே இக்கூட்டம் கூட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதான பங்கெடுத்துக் கொண்ட முன்னாள் அமைச்சர் ஜோன்சன் பெர்னான்டோ உரையாற்றும்போது காலி முகத்திடல் கோத்தா கமவை துப்பரவு செய்யவேண்டிய நேரம் வந்துள்ளது. எல்லோரும் போருக்கு தயாராகுங்கள்” என ஆவேசமாக உரையாற்றியதுடன் அலரி மாளிகைக்கு முன் கூடாரம் அடித்திருந்த மைனா ஹோ கம வுக்குள் புகுந்து ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திக்கொண்டிருந்தவர்கள் மீது அடாவடித்தனம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. பொல்லு தடி கொண்டு தாக்கியது மாத்திரமல்ல அப்பாவிகளான ஆர்ப்பாட்டக்காரர்களை கண் மூடித்தனமாக காயப்படுத்தினார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க இராணுவமும் துணைக்கு வரவழைக்கப்பட்டது. பெண்கள் பொது மக்கள் என பாராமல் ஈவிரக்கமின்றி ஆர்ப்பாட்டக்காரரர்கள் தாக்கப்பட்டார்கள். மைனா ஹோ கம அழிக்கப்பட்டது.

இந்த தாக்குதல் சம்பவத்துக்காக காலி வட்டரெக்க சிறையிலிருந்து 200 புனர் வாழ்வளிக்கப்பட்ட கைதிகள் கொண்டுவரப் பட்டதாகம் இவர்களை சிறை அதிகாரி ராமநாயக்க அழைத்து வந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கும்பல் அடுத்தகட்ட நடவடிக்கையாக காலிமுகத்திடலுள்ள கோத்தா ஹோ கமவுக்குள் புகுந்து கூடாரங்களை தரை மட்டமாக்கி ஆர்ப்பாட்டக்காரர்களை மூர்க்கத்தனமாக தாக்கியதில் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். பலர் மயங்கி விழுந்தனர்.

சம்பவத்தை கேள்வியுற்றும் தொலைக்காட்சியில் பார்த்தும தொலை பேசி வாயிலாக அறிந்தும் ஆயிரக்கணக்கான போதுமக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் ஆதரவாளர்கள் சம்பவ இடத்துக்கு ஓடிவந்து மஹிந்தவின் ஆதரவாளர்களான குண்டர்களை அடித்து விரட்டினார்கள்.

கோத்தா ஹோ கம போராட்டகாரரர்களுக்கு உதவ கொழும்பு மற்றும் புறநகர் பகுதியிலிருந்து ஏராளமான ஆதரவாளர்கள் பெருகியதன் காரணமாக போராட்டம் பெரியளவு வெடித்தது காலி முகத்திடல் கலவர பூமியாக முறியது. இது நாடு தருவிய போராட்டமாக மாறிக்கொண்டதன் விளைவவாக பாரிய தாக்குதல்களும் ஆர்ப்பாட்டங்களும் அழிவுகளும் இடம் பெற்றுக்கொண்டன.

**ஆர்ப்பாட்டத்தின் அழிவுகள். மரணங்கள்**

கடந்த திங்கட்கிழமை காலி முகத்திடல் மற்றும் நாடு தழுவிய கலவரங்கள் காரணமாக 8 நபர்கள் மரணமடைந்ததுடன் 250 மேற்பட்டவர்கள் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலயிலும் நாட்டின் பிரதேச வைத்திய சாலைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுஜனபெரமுனவின் பொலநறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினாகிய அமரகீர்த்தி அத்துக்கொரள நிட்டம்புவவிற்கு சென்ற வேளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளார். சுட்டதன்காரணமாக மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். அதில் ஒருவர் தலத்திலையே மரணமாகியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் அவரை வாகனத்துக்குள் வைத்து தாக்க முற்பட்டனர். அவர் வெளியே இறங்கி கட்டிடம் ஒன்றில் தஞ்சம் அடைந்தபோதும் கட்டிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுற்றிவளைக்கப்பட்டது. மக்களின் சுற்றி வபைப்பிலிருந்து தப்ப முடியாத சூழ் நிலையில் தன்னைத் தானேதுப்பாக்கியால் சுட்டுக் கொண்டதுடன் அவரது மெய்க்காவலரும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பிந்தி கிடைத்த தகவலின்படி ஆர்ப்பாட்ட காரர்களின் தாக்குதலால்தான் அவர் உயிர் இழந்ததாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கியதன் காரணமாக இமதுவ பிரதேச சபைத்தலைவர் ஏ.வி சரத்குமார மரணித்துள்ளார். இரவு அவர் வீட்டில் இருந்த வேளை போராட்டக்காரர்களின் தாக்குதலுக்கு ஆளாகி படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் மரணமடைந்துள்ளார்.

காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுகொண்டிருந்த பொதுமகன் ஒருவர் மாரடைப்பு காரணமாக இறந்துள்ளார்.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 57
***** ***** ***** *****

கவிஞர் தியாரூ


வீசு எறியப் படும்போது
வித்தாய் விழுந்து எழுந்துவிடு!
தூசு உன்னைத் தொடும்போது
தட்டி விட்டு நகர்ந்துவிடு!

பட்டுப் பூச்சி மடிந்தாலும்
பட்டுத் துகிலாய் பிறந்துவிடும்!
கட்டுக் கரும்பைப் பிழிந்தாலும்
கற்கண் டாகச் சிறந்துவிடும்!

நெருப்பில் விழுந்தால் தங்கம்நீ;
நிமிர்ந்து நடந்தால் சிங்கம்நீ!
நெருஞ்சு முள்ளும் மெத்தைதான்;
வாழ்வே ஞான வித்தைதான்!

உன்றன் வேகம் கண்டாலே
ஒளியின் வேகம் பின்னாலே!
உன்றன் பேரைச் சொன்னாலே
விதியும் ஒதுங்கும் தன்னாலே!

ஒன்றை எண்ணு லட்சியமாய்;
ஒன்றே வாழ்க்கை சத்தியமாய்!
உன்றன் வாழ்வே புத்தகமாய்
உலகில் வாழும் நித்தியமாய்!




பைரவி நுண்கலைக்கூடமும் ஈழத்தாய் தொலைக்காட்சியும்
இணைந்து நடாத்தும்
இசைச்சாரல்-3
Junior
GREENFLAME ONTARIO ன்
இசைச்சாரல்-3
குரலிசை போட்டி
eet TV
Bhairavi Music Academy
Grand Finale
June 11, 2022 @ 2:30pm
THAMIL ISAI KALAAMANRAM 1120 TAPSCOTT RD #3, TORONTO, ON M1X 1E8
ARABI PRODUCTION
RAGEEF SUBRAMANIAM
416-509-4450
KT Media Solutions
Stage Program Events
Commercials
Live Streaming on Social Media
Brampton & Toronto
416.617.3924
sathiy@yahoo.com
www.kannatech.com
SAI ACCESSORIES
SAI ACCESSORIES
HAND BAGS
BACK PACKS
WALLETS
KIDS HAIR BANDS
SANDALS
BATAS AND MORE
HARAN THANGAVADIVEL
416.880.4829
BRIGHTON CAR RENTAL
Kingston & Morningside
4600 Kingston Road
Scarborough, ON M1E 2P4
416-284-4600 - 647-852-9110
PRIMERICA
Esha Candappu
Representative
Earn What You're Worth! Keep your full-time job and start part-time with Primerica. We'll show you how to build you business
For more information, Call
CALL MANO SAVE THE TIME AND MONEY
416.843.0646
manogaran85@hotmail.com
www.manohomes.com
FREE LEGAL FEES &
FREE HOME STAGING
Certified Negotiation Expert
Over Decade Of Experience
3rd Top Producer-2020
Super Elite Club Member 2018-2021
MANOGARAN SUBRAMANIAM
GME FACILITY CLEANING SERVICE
GME
24/7 Service Available
GREENFLAME
HEATING & COOLING
Call us for a FREE CONSULTATION
416 827 4111
VIBRANT HOSPITALITY GROUP
WINSMART PROFESSIONAL CLEANING COMPANY
Ragu President
10 Milner Business Court, #300, Scarborough ON M1B 3C6
416.821.7870
info@winsmart.ca
www.winsmart.ca
RAMANAN
SANTHIRASEGARAMOORTHY, MBA
416.290.6000
www.getnewhomes.com
TAMIL HERITAGE MONTH COUNCIL
SIGARAM learning
PixelImage
SL
SKY LIMIT MACHINING INC


ஓம் சக்தி துணை
ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்
சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்
585 MIDDLEFIELD RD, UNIT 1 & 2, TORONTO (MIDDLEFIELD & FINCH) TEL: 416 535-6560
பிரம்மோத்ஸவ (துவஜாரோஹணம்) விஞ்ஞாபனம்
சிவன் பிரம்மோற்சவ பெருவிழா 2022
சிவன் திருவிழா
(27.05.2022 வெள்ளி முதல் 07.06.2022 செவ்வாய் வரை)
திருவிழா நிகழ்ச்சி நிரல்
27.05.2022 கொடியேற்றம் - வெள்ளி நண்பகல் 11மணிக்கு
02.06.2022 வேட்டை திருவிழா - மாலை 6 மணிக்கு
03.06.2022 சப்பரத் திருவிழா - வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு
04.06.2022 தேர் திருவிழா - சனிக்கிழமை காலை 11:00
05.06.2022 தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு
06.06.2022 திருக்கல்யாணம் - பூங்காவனத் திருவிழா திங்கள் இரவு 7:00 மணிக்கு
07.06.2022 மாலை வயிரவர் மடை - செவ்வாய் மாலை 7 மணிக்கு
என்றும் இறைபணியில்
ஆலய தர்ம கர்த்தா
தேர்த்திருவிழா
சனி காலை 11:00 மணி
06.08.2022
அனைவரும் வருக - அன்னையின் அருள் பெருக


காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்
FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS
LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND
IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct 416.918.9771
Business 416.321.2500
MDRT
Member of Million Dollar Round Table
Life100
INSURANCE & INVESTMENTS INC.
- digi Media -
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
La Capitale
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
BMO Insurance
Are you getting Million Dollar advice?

இந்தியா செய்திகள் India News

# கர்நாடக பாஜக எம்எல்ஏ திறந்து வைத்த மிதவைப்பாலம் மூன்றே நாளில் உடைந்தது



கர்நாடகத்தில் பாஜக அரசு கட்டிய மிதவைப் பாலம் மூன்றே நாட்களில் உடைந்ததை மிகப்பெரிய ஊழல் நடந்திருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

பாஜக 40 விழுக்காடு கமிஷன் பெற்றுக் கொண்டு பாலம் கட்டியிருப்பதாக ரன்தீப் சிங் சுர்ஜிவாலா குற்றம் சாட்டியுள்ளார்.

கர்நாடக மாநிலம் மால்பே கடற்கரையில் ரூ.80 லட்சம் செலவில் மிதவைப்பாலம் அமைக்கப்பட்டது. இந்த பாலத்தை உடுப்பி சட்டமன்ற உறுப்பினர் ரகுபதி கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். 100 மீட்டர் நீளம், 3 மீட்டர் அகலத்தில் ஒரே நேரத்தில் 100 பேரை தாங்கும் வகையில் அமைக்கப்பட்ட இந்த பாலத்தின் மையப்பகுதி கடல் கொந்தளிப்பு காரணமாக சேவை தொடங்கப்பட்ட 3வது நாளே உடைந்தது.

மிதவைப் பாலம் மக்கள் பயன்பாட்டிற்கு வந்த 3வது நாளே உடைந்திருப்பது அதன் கட்டுமானம் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. மிதவைப் பாலம் கட்டுமானத்தில் மிகப்பெரிய ஊழல் நடந்திருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

பசவராஜ் தலைமையிலான கர்நாடக பாஜக அரசு 40 விழுக்காடு கமிஷன் பெற்றுக் கொண்டு மிதவை பாலம் கட்டியதே உடைந்து விழ காரணம் என காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜிவாலா டிவிட்டரில் குற்றம் சாட்டியுள்ளார்.



# இனப்படுகொலையாளிகளான ராஜபக்சே சகோதரர்களுக்கு இந்தியா எக்காரணம்கொண்டும் அரசியல் அடைக்கலம் அளிக்கக்கூடாது!

## - சீமான் வலியுறுத்தல் | நாம் தமிழர் கட்சி

சீமான் அறிக்கை

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் புரட்சி வெடித்துள்ளதை அடுத்து இனப்படுகொலையாவார்களான ராஜபக்சே சகோதரர்கள் உள்ளிட்ட அந்நாட்டின் ஆட்சியாளர்கள் மக்களால் ஓட ஓட விரட்டப்பட்டு அவர்களது வீடுகள் உள்ளிட்ட உடைமைகள் தீவைத்து எரிக்கப்படும் காட்சிகள் நாள்தோறும் வெளியாகி வருகின்றன.

சிங்கள இனவாதமும், பௌத்த மதவாதமும் இணைந்து தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை மறுத்து, அதன் விடுதலையைத் தகர்த்து, அதற்காகப் போராடிய மக்களை இனப்படுகொலை செய்து அழித்தொழித்தது. மக்கள் நலனில் அக்கறை செலுத்தாமல் மத, இன வெறியை மக்களுக்கு ஊட்டி, தமிழர்கள் மீதான வன்மத்தை வளர்த்து, அதன் மூலம் மாறி மாறி அரசாண்ட சிங்கள கொடுங்கோன்மை ஆட்சியாளர்களே இன்று இலங்கையில் நடக்கும் அத்தனை துயரங்களுக்கும் மூல காரணம். அதற்குத் துணைபோன அப்பாவி சிங்கள மக்கள் ஐம்பதாண்டுகளாகத் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளை, பொருளாதார நெருக்கடிகளை இன்றைக்கு அனுபவித்து வருகின்றனர்.

ஒரு நாட்டில் உண்ண உணவும், குடிக்க நல்ல நீரும் கிடைக்காத போது அங்குப் புரட்சி ஏற்படுவதை ஒருபோதும் தடுக்க முடியாது என்பதற்கு நிகழ்காலச் சாட்சியாக இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் அமைந்துள்ளன. இன்று இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நிலை நாளை இந்தியாவிற்கும் ஏற்படலாம். எனவே இனியேனும் இந்திய பெருநாட்டை ஆளும் மோடி அரசாங்கம் மதத்தின் மூலம் மக்களைத் தூண்டி பிரித்தாளும் சூழ்ச்சியையும், தேசிய இனங்களின் உரிமைகளைப் பறித்து அவர்களின் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றைச் சிதைத்து இந்தியாவை ஒற்றையாட்சியின் கீழ் கொண்டுவரும் கொடுங்கோன்மையை இனியாவது கைவிட வேண்டும்.

இல்லையென்றால் ஒற்றையாட்சியை நடைமுறைப்படுத்திய இலங்கையில் ஏற்பட்ட மக்கள் புரட்சி நாளை இந்தியாவிலும் ஏற்படும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பதை இந்திய ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

மேலும், தற்போது சொந்த நாட்டு மக்களாலேயே விரட்டப்படும் நிலைக்கு ஆளாகியுள்ள ராஜபக்சே சகோதரர்கள் இந்தியாவிற்கு அடைக்கலம் தேடி வரப்போவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இரண்டு இலட்சம் தமிழர்களைத் துள்ள துடிக்கப் படுகொலை செய்த அக்கொடுங்கோலர்களுக்கு ஒன்றியத்தை ஆளும் மோடி தலைமையிலான பாஜக அரசு எக்காரணம் கொண்டும் இந்தியாவின் எந்த மூலையிலும் அரசியல் அடைக்கலம் அளிக்க முன்வரக்கூடாது. அதுமட்டுமின்றி இந்தியாவின் மூலம் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லவும் அனுமதிக்கக் கூடாது எனவும் ஒன்றிய அரசை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சினிமா


# அன்னையர் தினத்தில் உணர்ச்சிவசப்பட்ட நடிகை காஜல்

தென்னிந்திய மொழிகளில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் காஜல் அகர்வால். இவர் கடந்த 2020ஆம் ஆண்டு தொழிலதிபரான கவுதம் கிச்சலு என்பவரை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு கடந்த மாதம் ஆண் குழந்தை பிறந்தான். அவனின் புகைப்படம் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி இருந்தது.

இந்நிலையில், அன்னையர் தினமான இன்று நடிகை காஜல் அகர்வால் முதன் முறையாக தன் குழந்தையுடன் இருக்கும் புகைப்படத்தை சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளார். அந்த புகைப்படத்துடன் அவர், "எனது மகனே நீ என்னுடைய வாழ்வில் எவ்வளவு பொக்கிஷம் என்பதை உணர்ந்துகொண்டேன். நான் உன்னை கைகளில் வாங்கி உன் சிறிய கையை பிடித்தபோது, உன் சுவாசத்தை உணர்ந்தேன். உன் அழகான கண்களைப் பார்த்தபோது அன்பு என்பதை உணர்ந்தேன். நீதான் என் முதல் குழந்தை, எல்லாமே நீதான் முதலில் உனக்கு தாயாக பல்வேறு வி'யங்களை சொல்லி கொடுப்பேன்.



எல்லையில்லாத, அளவிட முடியாத அன்பையும், வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பல்வேறு விஷயங்களையும் எனக்கு கற்று கொடுத்தவன் நீ மட்டுமே. உடலை தாண்டி எனது உயிரை உணர வைத்த எனது மகனே, உனக்கு அன்னை ஆனதில் நான் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்" என்று உருக்கமாக பதிவிட்டுள்ளார். காஜலின் பதிவைப் பார்த்த ரசிகர்கள் தங்களது வாழ்த்துகளை தெரிவித்துவருகின்றனர்.



# சென்ற இடமெல்லாம் முத்திரை பதிக்கும் சமுத்திரக்கனி

தற்போது தமிழ் சினிமாவின் இயக்குனர், பின்னணி குரல் கொடுப்பவர், நடிகர் என சமுத்திரகனி எல்லா கதாபாத்திரத்திலும் பட்டையை கிளப்ப கூடிய ஒரு நடிப்பு பல்கலை கழகம். ஆரம்பத்தில் சீரியலில் இருந்து சினிமாவிற்கு வந்தவர் சென்ற இடமெல்லாம் இவருக்கு நல்ல பெயர் தான். இயக்குனர் பாலசந்தர் உதவி இயக்குனராக பணியாற்றிய இவர், பல தொலைக்காட்சி சீரியல்களில் பணியாற்றியவர். ரமணி VS ரமணி: சின்னத்திரை ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்ற இந்த நகைச்சுவை சீரியல், கடந்த 1998ஆம் ஆண்டு ராஜ் டிவியில் துவங்கப்பட்ட முதல் சீசன் நல்ல வரவேற்பு கிடைத்ததால் அதைத் தொடர்ந்து இரண்டாம் சீசன் 2001-ம் ஆண்டும் ஒளிபரப்பப்பட்டது. இந்த சீரியலின் இரண்டாம் சீசனில் சிறு சிறு வேடங்களில் சமுத்திரகனி தன்னுடைய அட்டகாசமான நடிப்பை வெளிக் காட்டி இருப்பார்.

இவருடன் ராம்ஜி, வாசுகி ஆனந்த், தேவதர்ஷினி, பிரித்விராஜ் ஆகியோரும் நடித்திருப்பார்கள். ஒரு கதவு திறக்கிறது: கடந்த 2001ஆம் ஆண்டு கவிதாலயா தயாரிப்பில் ராஜ் டிவியின் ஒளிபரப்பான பிரபல சீரியல் ஆன "ஒரு கதவு திறக்கிறது" என்ற இந்த நெடும் தொடரிலும் சமுத்திரகனி குணச்சித்திர கதாபாத்திரத்தில் தோன்றி தன்னுடைய ஆரம்பகால சினிமா பயணத்தை தொடங்கினார். இவர் முதல் முதலாக 2003ஆம் ஆண்டு உன்னை சரணடைந்தேன் என்ற படத்தை இயக்கி இயக்குனராக அறிமுகமாகி, அதன் பிறகு நெறஞ்ச மனசு என்ற படத்தை இயக்கி படு தோல்வியை சந்தித்ததால், மீண்டும் சீரியல் பக்கம் திரும்பினார்.

அப்பொழுதுதான் 2007ஆம் ஆண்டு ராதிகா நடிப்பில் சன் டிவியில் ஒளிபரப்பான அரசி என்ற நெடும் தொடரை இயக்கும் வாய்ப்பைப் பெற்று சின்னத்திரையில் இயக்குனராக சமுத்திரகனி அறிமுகமானார். அதன்பின் தங்கவேட்டை என்ற விளையாட்டு ஷோவையும் இயக்கினார். அதைத்தொடர்ந்து அண்ணி என்ற மெகா தொடரையும் சமுத்திரகனி இயக்கினார். ஏழாம் வகுப்பு "C" பிரிவு (7c): கடந்த 2012 ஆம் ஆண்டு விஜய் டிவியின் துவங்கப்பட்ட இந்த சீரியல் சுமார் 352 எபிசோடுகளை கடந்த சூப்பர் ஹிட் சீரியல் ஆகும். கிராமத்து பள்ளிக்கூடத்தில் மாணவ மாணவிகளை வைத்து எடுக்கப்பட்ட இந்த சீரியலில் சமுத்திரகனி கௌரவ வேடத்தில் நடித்து அசத்தியிருப்பார். இப்படி சினிமாவில் படிப்படியாக முன்னேறிய சமுத்திரக்கனி தன்னுடைய அசுர வளர்ச்சியால் அடுத்த கட்டத்திற்கு கொண்டு போய் சேர்க்கும் விதத்தில் தெலுங்கு படங்களிலும் புக் ஆகி வருகிறார். அதுமட்டுமின்றி தெலுங்கு பிரம்மாண்ட இயக்குனரான ராஜமௌலியே இவரை தொடர்பு கொண்டு அவருடைய ஆர்ஆர்ஆர் படத்தில் நடிக்கவும் வைத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்களை அடைத்து வைத்து சித்ரவதை.. போலீசில் வசமாக சிக்கிய நடிகை மும்தாஜ்

தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமாகி பின்னர் கவர்ச்சி நாயகியாக ரசிகர்களை கவர்ந்தவர் நடிகை மும்தாஜ். கவர்ச்சியாக பல திரைப் படங்களில் நடித்திருக்கும் இவர் விஜய் உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடனும் இணைந்து நடனம் ஆடியிருக்கிறார். அந்த வகையில் மிகவும் பிரபலமாக இருந்த இவருக்கு புது புது நடிகைகளின் வரவால் சினிமா வாய்ப்புகள் குறைய ஆரம்பித்தது. அந்த சமயத்தில் விஜய் டிவியில் ஒளிபரப்பான பிக்பாஸ் நிகழ்ச்சியில் இவர் கலந்து கொண்டார். அங்கு அவருடைய முரட்டுத்தனமான நடவடிக்கை ரசிகர்களுக்கு சிறு எரிச்சலை ஏற்படுத்தியது. அந்த நிகழ்ச்சிக்கு பிறகு அவருக்கு எதிர்பார்த்த அளவுக்கு படவாய்ப்புகள் ஏதும் கிடைக்கவில்லை. அதனால் அவர் தற்போது தன் சகோதரியுடன் அண்ணா நகரில் வசித்து வருகிறார்.

இந்நிலையில் அவரது வீட்டில் வேலை செய்த இரண்டு சிறுமிகள் அவர் மீது போலீசில் புகார் அளித்துள்ளனர். அதில் அவர்கள் கடந்த 6 வருடமாக மும்தாஜின் வீட்டில் வேலை செய்து வருவதாக தெரிவித்துள்ளனர். மேலும் மும்தாஜ் தங்களை கொடுமைப்படுத்துவதாகவும், சொந்த ஊருக்கு செல்ல வேண்டும் என்று கேட்டால் அனுப்ப மறுப்பதாகவும் அவர்கள் அங்கு இருந்தபடியே போலீசாருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்துள்ளனர். அவர்களின் புகாரை ஏற்ற போலீஸார் உடனே மும்தாஜின் வீட்டிற்கு விரைந்து சென்று சிறுமிகளை மீட்டுள்ளனர். தற்போது சிறுமிகள் இருவரும் ஒரு காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு மன ரீதியாக ஏதும் பாதிப்பு இருக்கிறதா அல்லது உடல் ரீதியாக பாதிப்பு ஏற்பட்டதா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இதையடுத்து நடிகை மும்தாஜிடமும் போலீசார் விசாரணை மேற்கொள்ள இருக்கின்றனர்.



மேலும் மும்தாஜ் குறித்து பல விமர்சனங்கள் சோஷியல் மீடியாவில் பரவி வருகிறது. மைனர் பெண்களை வேலைக்கு வைப்பது தவறு என்று உங்களுக்கு தெரியாதா என மும்தாஜுக்கு எதிராக தற்போது ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

(20ம் பக்கத் தொடர்ச்சி)

# ஸ்ரீலங்காவில் பேயாட்சியும், பிணந்தின்னும் சட்டங்களும்

அதே போன்றே அலரி மாளிகைக்கு முன்பாக இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது கலகமடக்க நின்ற பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயம்பட்டு உயிர் இழந்த சம்பவமும், கலகமடக்க கண்ணீர் புகைக் குண்டை வீசும் ஆயுதத்தை பயன்படுத்திக்கொண்டிருக்கும்போது அந்த ஆயுதம் வெடித்து உப பொலீஸ்பரிசோதகர் ஒருவர் தலத்திலையே மரணித்த சம்பவம் ஆகியவற்றுடன் வீரக்கெட்டிய பிரதேச சபைத்தலைவரின் இல்லத்துக்கு அருகில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது துப்பாக்கி பிரயோகத்தின் காரணமாக இருவரும் என பாராளுமன்ற உறுப்பினர் 1. பிரதேச சபை தவிசாளர் 1. பொலீஸ் அதிகாரி 2. பொது மக்கள் 4 பேர் என 8 பேர் இறந்ததாக பொலீஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மந்நிரிகள் பாராளுமன்ற உறுப்பினாகள் மற்றும் ஆதரவாளர்கள் வீடுகள் தீக்கிரை

இக்கலவரத்தின் காரணமாக முன்னாள் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் மற்றும் பிரதேச சபை மாகாணசபை உறுப்பிாகள் ஆகியோரின் வீடுகள் சொத்துக்கள் வாகனங்கள் மற்றும் உடமைகள் கட்சி அலுவலகங்கள் தொழிச்சலைகள் நாசமாக்கப்பட்ட சம்பவம் நாட்டின்பலபகுதிகளிலும் இடம் பெற்றுள்ளது. கடந்த செவ்வாயக்கிழமை இக்கட்டுரை பதியப்படும் வரை 48 நபர்களின் வீடுகள் எரித்தும் உடைத்தும் சேதமாக்கியும் அழிக்கபட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

அவ்வகையில் மஹிந்த ராஜபக்ஷவின் ஹம்பாந்தோட்டை மெதமுல்லையிலுள்ள பூர்வீகவீடும் குருநாகலில் உள்ள வீடும் காரியாலயமும் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. அதேபோன்றே கோடிக்கணகட்கான பெறுமதி வாய்ந்த கம்பகா மாவட்ட மல்வானையிலுள்ள முன்னாள் நிதியமைச்சர் பஷில்ராஜபக்ஷின் வீடு முற்றாக எரிக்கப்பட்டு துவாம்ஷம் செய்யப்பட்டுள்ளது. இந்த வீடு வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானதென்றும் பஷில் ஆட்சியிலிருக்கும்போது பலாத்காரமாக பறித்து எடுக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து வழக்கொன்று நீதி மன்றில் நிலுவையிலுள்ளதாக சமூக ஊடகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு மிகவும் வாலாயமான சோதிடம் கூறிவரும் ஞானா அக்கா என்று அழைக்கப்படுகிற அனுராதபுரத்தை சேர்ந்த சோதிடரின் வீடும் அவரது ஹொட்டலும் ஆர்ப்பாட்ட காரர்களால் எரியூட்டப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச விமலவீர திஸநாயக்க ஹெகலிய ரம்புக்வெல பந்துலகுணவர்த்தன சமல்ராஜபக்ஷ நிதி, நீதி அமைச்சர் அலி சப்ரி புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ஆகியோரின் வீடுகள் சொத்துக்கள் மொரட்டுவ நகரசபைத்தலைவர், குருநாகல் மேயர் மற்றும் குருநாகல் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் களுத்துறை இல்லம், அலுவலகம் பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சர் நிமல்லான்சாவின் நீர் கொழும்பில் அமைந்துள்ளவீடு கேகாலையின் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட அரசியல்வாதியான மஹிபாலஹேரத் திருகோணமலை மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கொரள பொதுஜனபெரமுனவின் தேசியப்படடியல் பாராளுமன்ற உறுப்பினராகிய பேராசிரியர் குணபாலரத்தின சேகர, அம்பலாங்கொடை நகரவபைத்தலைவர் குரநாகல் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மாத்தறை காஞ்சனவீரசேகரா தம்புள்ள யாபாஹம பிரதேசத்திலுள்ள முன்னாள் அமைச்சர் ஜனகபண்டார அம்பாறை தமன பிரதேச தவசாளர், கிழக்குமாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புள்ளாவின் காத்தான்குடி வீடு மற்றும் சுதந்திரக்கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் யாழ் சண்டிலிப்பாயிலுள்ள அலுவலகமும் போராட்டக்காரர்களால் தீவைத்து அழிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் முஸ்லீம் காங்கிரஸ் உபதலைவருமான ஹாபீஸ் நஸீர் அகமட் பொதுஜன பெரமுன கட்சிக்கு அண்மையில்தாவி ராஜாங்க அமைச்சர் பதவியை எடுத்துக்கொண்டவரின் ஏறாவூர் விடு காரியாலயம் என சுமார் 48 பேருக்கு மேற்பட்ட பிரமுகர்களின் வீடுகள், சொத்துக்கள், வாகனங்கள், அலுவலகங்கள் அவர்களுக்கு சொந்தமான தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுப்போன சம்பவங்கள் கடந்த திங்கள் செவ்வாய் ஆகிய இரு நாட்களுக்குள்ளும் நடந்தேறியுள்ளது. இன்னும் கவலை தருகின்ற விடயம் ஜனாதிபதி கோத்தபாயவின் வெற்றிக்கு அரும்பாடு பட்டு உழைத்த சிங்களப்பாடகர் ராஜ் வீரரட்னவின் வீடு தாக்கப்பட்டு நிர்மூலம் ஆக்கப்பட்டுள்ளது.

இவை மட்டுமன்றி இராணுவ அதிகாரிகளின் வீடுகள் ஆதரவாளர்களின் வீடுகள் தாக்கப்பட்டதுடன் மேல்மாகாண சிரேஷ்ட பொலீஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆர்ப்பாட்டக்காரார்களால் கடுமையாக தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மஹிந்த மற்றும் ஜனாதிபதியின் பெற்றோர்களான டி.ஏ ராஜபக்ஷவுக்கும் தாயார் கோதனா சந்தினா ராஜபக்ஷவுக்கு ஹம்பாந்தோட்டை வெதமுல்லையில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் துாபிகள் அடித்து நொருக்கப்பட்டிருப்பதுடன் தங்காலையிலுள்ள ராஜபக்ஷவின் உருவ சிலை ஆர்ப்பாட்டக்காரர்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இதேவேளை குறித்த 9 ஆம் திகதி மஹிந்தவின் ஆதரவாளர்கள் என்ற வகையில் வெளி மாவட்டங்களிலிருந்து அழைத் துவருவதற்குப்பயன்படுத்தப்பட்ட பேருந்துகள், வாகனங்கள் ஆகியவை நகர மண்டபம் பன்னிப்பிட்டிய அத்துக்கிரிய பஞ்சிகாவத்தை போன்ற இடங்களில் வைத்து எரிக்கப்பட்டிருப்பதுடன் எரிகளில் தள்ளி சேதமாக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

ஊடகம் ஒன்றின் கணக்கெடுப்பின்படி சேதம் ஆக்கப்பட்ட எரியுட்டப்பட்ட வாகனங்கள் வீடுகள் சொத்துக்கள் விபரங்கள் இவ்வாறு கணக்கெடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் தீக்கிரை ஆக்கப்பட்ட வாகனங்கள் 29 ஆகவும் அடித்து நொருக்கப்பட்ட வாகனங்கள் 15 ஆகவும் தீக்கிை ரயாக்கப்பட்ட வீடுகள் 8 ஆகவும் சேதமாக்கப்பட்டவை 23 வீடுகளாகவும் தென்மாகாணத்தில் சேதமாக்கப்பட்ட வாகனங்கள் 5 தீக்கிரையாக்கப்பட்ட வீடுகள் 7 அடித்து நொருக்கப்பட்ட வீடுகள் 9 எனவும் மத்திய மாகாணத்தில் தீக்கிரையாக்கப்பட்ட வாகனங்கள் 4 தீக்கிரையாக்கப்பட்ட வீடுகள் 6 அடித்து நொருக்கப்பட்ட வீடுகள் 5 சப்ரகமுவ மாகாணத்தில் தீக்கிரையாக்கப்பட்ட வாகனங்கள் 9 தீக்கிரையாக்கப்பட்ட வீடுகள் 8 அடீத்து நொருக்கப்பட் வீடுகள் 7 வடமத்திய மாகாணத்தில் 3 வாகனங்கள் தீக்கிரை 4 வீடுகள் சேதம். வடமேல் மாகாணத்தில் தீக்கிரை ஆக்கப்பட்ட வாகனங்கள் 5 சேதம் ஆக்கப்பட்ட வாகனங்கள் 13 தீக்கிரை ஆக்கப்பட்ட வீடுகள் 9 சேதமாக்கப்பட்ட வீடுகள் 15 கிழுக்கு மாகாணத்தில் சேதம் ஆக்கப்பட்ட வாகனங்கள் 3 ஊவாவில் 2 வீடுகள் சேதம் ஆக்கப்பட்டுள்ளன என தகவல்கள் பதிவாகியுள்ளது.

இக்கலவரத்தில் பெறுமதி மிக்க கார் என்று எண்ணப்படுகிற லம்போர்கினி என்ற கார் நீர்கொழும்பிலுள்ள அவன்ரா கார்டின் ஹொட்டலில் வைத்து பல வாகனங்களுடன் தீக்கிரை ஆக்கப்பட்டுள்ளது.

அமைதியாகவும் அடக்கமாகவும் ஜனநாயக வழியில் இடம் பெற்ற அறவழிப்போராட்டக்காரர்கள்மீது தனது ஆதரவாளர்களை ஏவிவிட்டு கலவரமாக மாத்திய முன்னாள் பிரதமர் மஹிந்த கைது செய்யப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும் என நாடுதழுவிய சட்டத்தரணிகள் சங்கமும் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் அலரி மாளிகையிலிருந்து அவரும் அவரது குடும்பத்தாரும் தப்பி சென்றுள்ளனர். என்று சமூக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. இதே நேரம் நாட்டின் முக்கியஸ்தர்கள் நாட்டை விட்டு தப்பி சென்றுவிடக்கூடாது என்ற எச்சரிக்கை நோக்கத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்களால் ரத்மலான மற்றும் கட்:டு நாயக்கா விமான நிலையம் சுற்றி வளைக்கப்பட்டு வருகிறது. இந்திய இராணுவம் இறங்கவிருக்கிறது என்ற வதந்தியை இந்திய உயர் ஸ்தானிகர் ஆலயம் கடுமையாக மறுத்துவருகிறது.

இதன்நடுவில் பொது சொத்துக்கு பங்கம் விளைவிப்போரை கண்ட இடத்தில் சுடும்படி பாது காப்பு அமைச்சு சட்டம் பிறப்பித்துள்ளநிலையில் கடந்த 10 ஆம் திகதி முல்லேரிய சந்தியில் பொலீசார் நடத்திய துப்பாக்கி சூட்டின் காரணமாகவும் கட்கமுகவில் இடம் பெற்ற சம்பவத்திலும் பலர் காயமடைந்துள்ளனர்.

நடந்த அசம்பாவிதங்களின் சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு நீதியின் முன் கொண்டுவாருங்கள் என சட்டமா அதிபர் பொலீஸ்மா அதிபருக்கு ஆணைபிறப்பித்துள்ளார். பாது காப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரட்ன பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்காதீர்கள் என கோரிக்கை விட்டிருக்கிறார். நாட்டின் சட்டம் ஒழுங்கு நீதி மற்றும் பாதுகாப்பு அனைத்தும் தலை சாய்ந்து காணப்படுகிறது.

சுதந்திரத்துக்கு பின்னும் முன்னும் சிறுபான்மை சமூகத்துக்கு எதிராக வன் முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட காலங்களை மீண்டும் திரும்பிப்பார்ப்பின்

1870 மருதானை சிஙகள் முஸ்லீம் இனக்கலவரம்
1883 கொட்டாஞ்சேனை மதக்கலவரம்.
1915 கப்பளை முஸ்லீம் சிங்கள கலவரம்
1939 நாவலப்பிட்டி கலவரம்
1956 கல்லோயாக்கலவரம்
1958 தமிழருக்கு எதிரான இனக்கலவரம்
1974 தழிழாராட்சி கலவரம்.
1977 தமிழருக்க எதிரான ஆவணிக்கலவரம்
1981 யாழ் கலவரம்
1983 தமிழருக்கு எதரான இனக்கலவரம்
2017 தப்புள்ள பள்ளிவாசல் கலவரம்
2018 அம்பாறை முஸ்லீம் மக்களுக்கு எதிரான கலவரம்
2018 தெல்தெனிய திகன முஸ்லீம் மக்களுக்கு எதிரான கலவரம்
2019 குருநாகல் புத்தளம் கம்பஹா கலவரம்

என ஏராளமான கலவரங்களை சந்தித்த நாடாக இலங்கை காணப்படும் நிலையில் இன்றைய கலவரம் நாட்டை இன நிலைக்கு தள்ளாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது யார் கடமை.


சுவாமி விபுலாநந்தர் தமிழ் ஆய்வு மையம் கனடா



அறுபதாம் ஆண்டு பாராட்டு விழாவும் நூல்வெளியீடும்

திரு. சின்னையா சிவநேசன் .B.Sc.,B.Ed,OCT ,ESL .

(மேனாள் கல்வி ஆலோசகர் ,தொறொன்ரோக் கல்விச்சபை ) இந்நாள் சிரேஷ்ட விரிவுரையாளர் (ஆங்கிலம்)
அண்ணாமலை கனடா

மதிப்புக்குரிய திரு. சின்னையா சிவநேசன் அவர்களின் 60 ஆண்டுகால கல்வி, சமூகம், சமயம், ஊடகம் ஆகிய துறைகளில் ஆற்றிய பணிகளைப் பாராட்டும் வைபவமும் நூல் வெழியீடும்

இடம்: ஸ்காபரோ நகர மண்டபம் (Scarborough Civic Centre 150 Borough Dr, Scarborough, ON M1P 4N7

காலம்: மே 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி

வெளியிடப்படும் நூல்கள்:
1. நினைவில் நிற்பவை (சுய வரலாறு)
2 காலத்தால் அழியா ஆங்கிலக் கவிதைகள் (தமிழ் வடிவம்)
3. நரி மாப்பிள்ளை ( திருந்திய பதிப்பு ) ஒரு குறு நாடகம்

நூல் விமர்சனம்
திரு. சின்னத்தம்பி சண்முகராஜா M.A
பேராசிரியர் வண. அ. ஜோ சந்திரகாந்தன்
ஆசிரியர். வி. திவ்யராஜன்

மேற்படி விழாவுக்கு நமது மைய உறுப்பினர்கள் ,அண்ணாமலை கனடா வளாகத்தின் விரிவுரையாளர்கள் மாணவர்கள், ஊடக நண்பர்கள், பல்வேறு தொழில்சார் நிபுணர்கள், வர்த்தக அன்பர்கள், பல்வேறு சங்க உறுப்பினர்கள், பல்வேறு முதியோர் சங்க உறுப்பினர்கள் அவரது நண்பர்கள், உறவினர்கள் நலன்விரும்பிகள் யாவரையும் வருகை தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

முக்கிய குறிப்பு : விழா சரியாக 3 மணிக்கு ஆரம்பமாகும் அன்பர்கள் யாவரும் கோவிட் தொற்று அறிவுறுத்தலுக்கு ஏற்ப முகக் கவசம் அணியுமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்
தலைவர் 416 267 5255

க. குமரகுரு .M.A.
செயலாளர் 647 224 8871

மலேசிய மடல்

# ஈப்போ நகரில் உலகத் தமிழிசை மாநாடு



நக்கீரன்

**கோ**லாலம்பூர், மே 12:

இயற்கையோடு இயைந்த தமிழர்தம் வாழ்வில் தாலாட்டு, கும்மி, ஒப்பாரி, வயல் வெளியில் ஏற்றமிறைக்கும் பாட்டு, நாற்று நடவும் களையெடுக்கவும் பாட்டு, காதலுக்கும் சண்டைக்கும் சாடைமொழிப் பாட்டு என வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் தமிழிசை அலங்கரித்த காலம் ஒன்றிருந்தது.

இந்த நிலை களப்பிரர் காலத்தில் மங்கத் தொடங்கியது ஆனாலும், சைவம் செழித்த காலத்தில் மீண்டும் தமிழும் தமிழிசையும் தமிழர் நிலத்தில் செழித்தன.

தொடர்ந்து, விஜய நகரப் பேரரசு, மராட்டியர்கள், முகலாயர்கள், ஆங்கிலேயர்கள் என அடுத்தடுத்து மற்றவர்களே தமிழர் நிலத்தை தொடர்ந்து ஆண்டபொழுது தமிழ் மொழியுடன் தமிழிசையும் மொத்தமாக பின்னடைவை சந்தித்தன.

இதனால், கர்நாடக இசையும் தெலுங்கு கீர்த்தனையுமே தமிழிசை என்றாகி, தமிழர்தம் இசை மேடைகளை முழுதாக ஆக்கிரமித்துக் கொண்டன. இந்த நிலை, அண்மைக் காலமாக மெல்ல மெல்ல மாறி வருகிறது. ஆனாலும், தமிழிசைதான் தமிழரின் இசை என்னும் நிலை இன்னும் முழுதாக தோன்றவில்லை தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இந்த நிலைதான் தொடர்கிறது.





இந்தச் சூழலில், மலேசியாவில் பேரா மாநிலம், ஈப்போ மாநகரில் உலகத் தமிழ் இசை மாநாடு இவ்வாண்டு நவம்பர் 20-இல் நடைபெற இருக்கிறது.

பழைமைச் சிறப்பும் தொன்மை நாகரிகமும் மிக்க தமிழ் இனத்தின் இசை மரபும் பாரம்பரியப் பெருமை உடையது அனைத்து உயிர்களையும் வயப்படுத்துவது என்னும் பொருளில் இசை என்று பெயரிட்ட தமிழரின் நுண்ணறிவைப் பாராட்ட வேண்டும். தமிழ் இசை இலக்கண நூல்கள் பலவும் அழிந்துவிட்டன.

மலேசியாவில், தமிழறிஞர் தமிழ்த்திரு. திருமாவளவன் போன்றோரின் முயற்சியால் தமிழ் இசை மீண்டும் உயிர்ப்பெற்று வருகிறது. இசைக் கலை, தமிழ் மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்து இருந்ததை தொல்காப்பியமும் சங்க நூல்களும் காட்டுகின்றன. யாழினையும் பறையையும் பற்றி தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர் காலத்திலேயே இசையையும் கூத்தையும் துணையாகக் கொண்டு வாழ்வு நடத்திய கலைத்துறையினர் தனிப் பிரிவாக இயங்கினர் என்பதனை ஆற்றுப்படை இலக்கணத்தின்வழி காணலாம். சங்க இலக்கியங்களில் இசைக்கருவிகள், பண்ணிசை முறை, இசைவாணர்கள் பற்றிய எண்ணற்ற செய்திகள் இடம் பெறுகின்றன. பாணர் என்னும் தரப்பினர், தங்களின் வாழ்வை இதற்காகவே அர்ப்பணித்தவர்கள்.

மலைச்சாரல் சார்ந்த தினைப்புனத்தில் தினையென்னும் தானியத்தை உண்ண முனைந்த ஒரு யானை, குறவர் குலப் பெண் பாடிய குறிஞ்சிப் பண்ணைக் கேட்டு உண்பதை மறந்து நின்ற தகவலை யெல்லாம் பழந்தமிழ் இலக்கியப் படைப்புகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

இத்தகைய சிறப்புக்குரிய இசைக் கலையை வளரும் தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் விதமாக ஈப்போ முத்தமிழ்ப் பாவலர் மன்றம், உலகெங்கும் உள்ள தமிழ் இசை வல்லுநர்களை ஒன்றிணைத்து உலகத் தமிழ் இசை மாநாட்டை வருகின்ற நவம்பர் 20-ஆம் நாளில் நடத்த முனைந்து வருகிறது.

ஈப்போ முத்தமிழ்ப் பாவலர் மன்றத்தை 20 ஆண்டுகளுக்கும் மேலாக கவிஞர் டாக்டர் அருள் ஆறுமுகம் கண்ணன் தலைவராக இருந்து வழிநடத்தி வருகிறார்.

தமிழ் மக்களின் கலாச்சார பண்பாட்டுக் கூறுகள் பிரதிபலிக்கும் வகையில் நடைபெறவுள்ள இந்த உலகத் தமிழ் இசை மாநாட்டில் தமிழர்தம் பாரம்பரிய இசைக் கருவிகளின் கண்காட்சியும் தமிழிசை தொடர்பான ஆவண குறும்பட வெளியீடும் இடம்பெற உள்ளன.

இந்த இம்மாநாடு தொடர்பில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு தமிழ் இசை தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகளை worldtamilmusiccon2022@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். உலகத் தமிழ் இசை மாநாடு குறித்த தகவலை மேலும் தெரிந்துகொள்ள மாநாட்டுத் தலைவர் கவிஞர் டாக்டர் அருள் ஆறுமுகம் கண்ணனுடன் (+6 012 500 6161) தொடர்புக் கொள்ளலாம்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24




# ஜீவன் முக்தி 582

*(சென்ற வார தொடர்ச்சி...)*

## தியான சிகிச்சை ஒரு விஞ்ஞானப்பூர்வமான சேவை

மக்களின் துன்பத்திற்குக் குணமளிக்கும் தியான சிகிச்சை செய்வது என்பது ஒரு மிகப்பெரிய சேவை.

யார் வேண்டுமானாலும் உணவு, உடை, வெளிப்பொருட்களைத் தர இயலும். ஆனால், எல்லோராலும் மற்றவர்களைக் குணப்படுத்த இயலுமா? முடியாது.

இந்த வார்த்தைகள் எல்லாம் உண்மையைத் தவிர வேறெதுவும் கிடையாது.

மின்சார சக்திக்குத் தனியாக எந்தவொரு அறிவாற்றலும் கிடையாது.

ஆனால், நீங்கள் அதில் பல்பை இணைத்தவுடன் வெளிச்சம் தரும். நீங்கள் அதில் கையை வைத்தால், கையை வைத்தவுடன் மின்சார தாக்குதலையும் தரும்.

அதுபோல், இந்தத் தியான சிகிச்சையானது, நோயாளிக்குள் ஆரோக்கியத்தையும், கையை வைத்து தியான சிகிச்சையைச் செய்பவருக்குள் ஜீவன் முக்த தாக்குதலையும்ஏற்படுத்தும் ஒரு விஞ்ஞானபூர்வமான சேவை.

## தன்னிச்சையாக இயங்கும் சக்தி

சக்தியை நாம் எப்பொழுதும் மின்சார சக்தியோடு ஒப்பிடுகிறோம். ஆனால், இந்தக் குணமளிக்கும் சக்தி அப்படியல்ல. இந்தச் சக்தி என்றுமே தவறு செய்யாது. ஏனென்றால், அந்தச் சக்திக்கு அதனுடைய சொந்த செயலாற்றும் அறிவாற்றல் உண்டு.

அதிக இரத்த அழுத்தமோ,

குறைந்த இரத்த அழுத்தமோ

இரண்டுக்குமே ஒரேவிதமான குணமளிக்கும் சக்திதான் பொங்குகிறது.

உடலைக் குணப்படுத்த உதவி செய்கிற இந்தச் சக்தி, தன்னிச்சையாக இயங்கும் ஆற்றல் படைத்த ஆன்ம சக்தி. அது ஒரு ஞான சக்தி.

### தியான சிகிச்சையை ரகசியமாய் வைத்திருக்க நான் விரும்பவில்லை

மக்கள் என்னிடம் சொல்வதுண்டு. '*உங்களைச் சந்தித்தபின் நாங்கள் முழுமையாகக் குணமளிக்கப்பட்டோமா, எங்கள் தொழில், வர்த்தகம் நல்ல நிலையில் உள்ளதா என்பது பற்றியெல்லாம் நாங்கள் பெரியதாக நினைப்பதேயில்லை. உங்களைச் சந்தித்தபின், நாங்கள் மிக மகிழ்ச்சியாய் இருக்கிறோம்! அது உண்மை,' என்று சொல்கிறார்கள்.

நான் 100 சதவிகித மக்களுக்கும் உலகியல் பொருள் வசதிகளைத் தருவதில் வேண்டுமானால் வெற்றி பெறாமல் இருக்கலாம். முழு உடல்நலம் தரும் விதத்திலும் வெற்றி பெறாமல் இருக்கலாம்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். நான் எந்த ஒரு தனி மனிதருக்கும் மகிழ்ச்சியைத் தர தவறவில்லை, ஆனந்தத்தை அவர்களுக்குத் தர தவறவில்லை.

"எல்லோருக்கும் தியானம் கற்றுக் கொடுங்கள். ஆனால், அவர்களுக்கு ஆன்மீக குணமளிக்கும் தீக்ஷை தர வேண்டாம். மக்கள் உங்களிடமே சிகிச்சை பெற வரட்டும்," என்று ஒருவர் என்னிடம் சொன்னார்.

அவர் சொன்னதன் நோக்கம், அவ்வாறு செய்தால் ஆசிரமம்.

பொருளாதார ரீதியில் வளரும் என்ற மறைமுக எண்ணத்தில் ஆகும். ஆனால், நான் பவ்யமாக மறுத்து தலையாட்டிவிட்டு, திரும்பி வந்தேன்.

நான் உடலைவிட்டுப் போனபிறகு, இந்தக் குணமளிக்கும் சேவை, பூமியிலிருந்து காணாமல் போய்விடக் கூடாது.

நான் இந்தப் பூமி கிரகத்திலிருந்து போனபிறகு, இந்தக் குணமளிக்கும் சேவை, என்னுடன் மறைந்து போக நான் விரும்பவில்லை.

அது நன்றாக வேரூன்றியதாக இருக்கட்டும். பலகாலமாக நாம் இதனை ரகசியமாகவே வைத்திருக்கிறோம்.

சித்தர்களுடைய விஞ்ஞானம் எங்கே போயிற்று?

வேதகாலத்தில் திறந்த இதய சிகிச்சை நடந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?

மூளை அறுவை சிகிச்சைகளும், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைகளும் அப்போதே நடந்திருக்கின்றன என்பதற்கான சான்றுகள் இருக்கின்றன.

ரம்பைக்கும், மேனகைக்கும் (சுவர்க்க லோக அழகிகள்) பிளாஸ்டிக் சர்ஜரி நடந்திருக்கலாம். எப்படியோ, அந்த விஞ்ஞானம் எல்லாம் எங்கே போயிற்று?

அவை அனைத்தையும் ரகசியமாகவே வைத்திருந்ததால்தான், மறைந்து விட்டது.

நான் அதே தவற்றை மறுபடியும் செய்ய விரும்பவில்லை. நான் இந்தச் சத்தியத்தை, ஞானத்தை என்னிடமே வைத்துக் கொண்டால் எனக்குப் பெயரும், புகழும் கிடைக்கும்.



ஆனால், மக்களுக்குச் சேவை கிடைக்காது. இதை நானே வைத்துக் கொண்டால், அது ஒரு இடத்தில் நிலையாக்கப்பட்டு, உலகம் முழுவதிலிருந்தும் மக்கள் என்னைத்தேடி வருவார்கள். பணமும் குவியும். மேலும், நமக்கு ஒரு பெரிய தியான மண்டபம் அமையும். ஆனால், மக்களுக்கு செய்யும் உண்மையான சேவை செய்ய இயலாது.

நான் மட்டும் இந்தக் குணமளிக்கும் சேவையைச் செய்தால், கொஞ்சம் பேரைத்தான் சென்றடைய முடியும்.

இதுவே என்னுடைய எல்லாத் தியான சிகிச்சையாளர்களும் தியான சிகிச்சை செய்தால், எவ்வளவு கோடிக்கணக்கான மக்கள் குணமளிக்கப்படுவார்கள்!

அதனால்தான், நாங்கள் இரவு பகலாக, ஓயாமல் உலகம் முழுவதும் சென்று, மக்களுக்குப் பயிற்றுவித்து 20,000 தியான சிகிச்சையாளர்களை இதுவரை உருவாக்கியிருக்கிறோம்.

இந்த 20,000 பேருமே இந்தத் தியான சிகிச்சையை அதாவது Nithya spiritual healing எனும் இந்தத் தியான சிகிச்சையை முற்றிலும் இலவசமாகவே தருகிறார்கள்.

இதற்கென்று பயிற்சி பெற்ற சேவையாளர்கள் பல இடங்களுக்கு, பல கிராமங்களுக்கு இந்தத் தியான சிகிச்சையைத் தருவதற்காக, தங்களின் செலவில் சென்று, தினம் மக்களுக்குத் தியான சிகிச்சை தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆனந்தத்தோடு இங்குப் பகிர்ந்து கொள்கிறோம்.

ஆயிரம் மக்களுக்கு, ஒரு தியான சிகிச்சையாளர் தோன்ற வேண்டும் என்று விரும்புகிறோம். ஒவ்வொரு ஊருக்கும் 1000 சிகிச்சையாளர் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

தியான சிகிச்சையும் தியான மருத்துவத்தையும் எல்லோரும் எளிதில் பெற்றுக் கொள்ளும் வகையில், ஒரு பல்கலைக்கழகம் இவற்றை ஒரு பட்டயப் படிப்பாகவும் வழங்கிக்கொண்டிருக்கிறது.

தியான பீடம் ஆரம்பித்து ஆறேழு வருடங்கள் தாண்டிய நிலையில், பல வேலைகளுக்கு நடுவில், இவ்வளவு துரிதமாக இந்தத் தியான சிகிச்சையை பட்டயப் படிப்பாக (Diploma) மாற்றியது, என்னுடைய தனிப்பட்ட சாதனை என்று எப்போதும் சொல்ல மாட்டேன்.

நாம் எழுந்து நிற்கும்போது, நமக்காக ஓடிவந்து உதவும் இறைசக்தியின் அச காய சாதனைகள்தான் இவை என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

FIMT (Formal Membership in Medical Therapy) என்றழைக்கப்படும்.



தியான மருத்துவத்திற்கான இந்தப் பட்டப்படிப்பானது, ஆர்வமுடைய பட்டதாரிகள் கலந்து கொண்டு பயன்பெறும் படிப்பு.

அனைத்து தரப்பட்ட மக்களும் இந்தத் தியான சிகிச்சை பெற வேண்டும் என்பதற்காக, 12 ஆயிரம் தியான சிகிச்சையாளர்களின் மூலமாக உலகம் முழுவதும் எங்களால் முடிந்த இடங்களிலெல்லாம், இந்தத் தியான சிகிச்சையை இலவசமாக வழங்கும் தியான சிகிச்சை மையங்களை உருவாக்கி சேவை செய்து கொண்டிருக்கிறோம்.

புள்ளி விவரப்படி ஒரு நாளைக்கு குறைந்தது, 25,000 மக்கள் உலகம் முழுவதும் இந்தத் தியான சிகிச்சையை இலவசமாகவே பெறுகிறார்கள்.

### தியானம் ஒரு மருந்தாக

நமது உடலுக்குள்ளே ஐந்து அடுக்குகள் இருக்கின்றன. அந்த ஐந்து அடுக்குகளை ஐந்து கோசங்கள் என்று சொல்லுவார்கள்

| ஐந்து அடுக்குகள் | ஐந்து கோசங்கள் | ஐந்து பெட்டகங்கள் |
|---|---|---|
| முதல் அடுக்கு | அன்னமய கோசம் | திடப் பெட்டகம் |
| இரண்டாம் அடுக்கு | பிராணமய கோசம் | சக்திப் பெட்டகம் |
| மூன்றாம் அடுக்கு | மனோமய கோசம் | குழப்பப் பெட்டகம் |
| நான்காம் அடுக்கு | விஞ்ஞானமய கோசம் | புதிர்ப் பெட்டகம் |
| ஐந்தாம் அடுக்கு | ஆனந்தமய கோசம் | ஆனந்தப் பெட்டகம் |

## கோசம் என்றால் அடுக்கு.

நம் உடலின் ஐந்தடுக்குகளை அடுக்கடுக்காக விளக்கி, ஒவ்வொரு அடுக்கின் சிறந்த மருத்துவ முறைகளையும் சுட்டிக்காட்டி நோய்க்கான காரணம் மற்றும் மருத்துவம் பற்றிய ரகசியங்களை இந்தப் பகுதி விளக்குகிறது.

Mind - Body - Medicine என்றழைக்கப்படும் மருந்தில்லா மாற்று மருத்துவ முறைக்கான ஆராய்ச்சிகள் யந்திரகதியில் நாடுகளில் கூட நடந்து கொண்டிருக்கின்றன.

திட உடலையும் தாண்டி, நமக்குத் தெரிந்த மனத்தையும் தாண்டி, நம் உள்ளே ஏதோ ஒரு ஆச்சரியம் இருக்கிறது என்று தேட ஆரம்பித்திருக்கிறார்கள்.

உடல், மனம் தாண்டி நம்முள் இருக்கும் இறை சக்தியைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

மருத்துவர்கள் மத்தியில் மிகச் சிறந்த வாசகம் ஒன்று உண்டு.

## Doctor Stitches; God Heals.

அதாவது, மருத்துவர் தைக்கிறார் கடவுள் குணமாக்குகிறார். மருத்துவரால் அதிகபட்சம் அறுக்க முடியும் தைக்க முடியும். ஆனால், குணமாக்குவது என்பது, இயற்கை சக்தியால், கடவுளால் மட்டும்தான் முடியும்.

கடவுள் என்பது என்ன?

எங்கும் நிறைந்திருக்கும் தூய சக்திதான் கடவுள். கடவுள், நாம் நினைப்பது போல் ஒரு தனி ஆளோ, தனி அம்சமோ மட்டும் அல்ல.


இந்தக் கடவுள் சக்தி, இறைசக்தி, பராசக்தி என்பது அடுக்கடுக்காக நம் உடலுக்குள் இருக்கிறது. அது ஒவ்வொரு அடுக்கிலும் வடிகட்டி, வடிகட்டி வெளியில் வருகிறது. உள்ளே ஆழமான மையத்தில் இருக்கிற ஆனந்தமய கோசத்தில் ஏராளமாக அந்த இறைசக்தி ஊற்றுப்போல பொங்கி வழிந்து கொண்டிருக்கும். அடுத்து விஞ்ஞானமய கோசத்திற்கு வரும் பொழுது கொஞ்சம் குறையும். அப்படி ஒவ்வொரு அடுக்கிலும் கொஞ்சம் கொஞ்சம் குறைந்து கொண்டே வரும். அதைத்தான் சக்தி பெட்டகங்கள் என்று சொல்கிறோம். அந்தப் பெட்டகங்களில் குறிப்பிட்ட கோசங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு குறிப்பிட்ட மருத்துவ முறைகள் உண்டு.

1. அன்னமய கோசத்துக்கான மருத்துவ முறை அலோபதி:
2. பிராணமய கோசத்துக்கான மருத்துவ முறை யோகாசனம் பிராணாயாமம்.
3. மனோமய கோசத்துக்கான மருத்துவ முறை ஹோமியோபதி
4. விஞ்ஞானமய கோசத்துக்கான மருத்துவ முறை ஆயுர்வேதம்
5. ஆனந்தமய கோசத்திற்கான மருத்துவமுறை ஆனந்த ஹீலிங் அதாவது தியான சிகிச்சை.

## (The Healing touch of Guru, or the Healing Energy of Divine through meditation)

ஒவ்வொரு மருத்துவத் துறைக்கும் ஒரு கோசத்தில் மிக ஆழமாக ஆழ்ந்து வேலை செய்யும் சக்தியுண்டு. சரியாக தேர்வு செய்து மருத்துவம் அளிக்கப்படும்பொழுது, சிறந்த பலன்களை மனித குலத்திற்குத் தரமுடியும்.

இவற்றை ஆழமாக ஆராய்ந்ததின் விளைவாக பிறந்ததே தியான சிகிச்சை.



# ஈழத்துத் திருக்கோவில்கள் 997



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயில் மட்டக்களப்பு

*“உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்*
*பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்*
*கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்*
*வேலப்பா செந்திவாழ் வே”*

சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயிலில் வழங்கப்படும் தட்சணை, அரிச்சனை, திருவிழாக்கால அரிச்சனை என்பவற்றின்மூலம் கிடைக்கும் பணம் குருக்களுக்குரியது. அத்தோடு இவர்கள் எல்லோருக்கும் அறுவடை காலத்தில் ஊரவரிடமிருந்து புதிர்நெல் கிடைக்கின்றது. வன்னிமை, குருக்கள், பூ எடுப்போர், கோயிலார், சங்கூதி (ஐயன்) எல்லோருக்கும் கோயிலில் வைத்து ஒவ்வொரு மரக்கால் நெல்லுக் கொடுத்த பின்பே போக வேளாண்மையை வீடுகளுக்குக்கொண்டுபோவது வழக்கம்.

இவ்வூரிலுள்ள மக்கள் தாம் விளைவிக்கும் விளைவினை முதலில் கோவிலுக்கு அளிப்பது வழக்கம். இதனைப் புதிர் காவுதல் என அழைப்பர். கோவிலுக்குப் புதிர் காவிக் கொடுத்த பின்னரே விளைந்த பொருட்களை தாம் உண்ணுவர். புதிர்க்கோட்டை (நெல் அல்லது அரிசி) பழம், தயிர்ப்பானை என்பவற்றைக் காவிக்கொண்டு கோவில்களுக்குச் செல்வது வழக்கம். புதிர்காவும் காலங்களில் கோவில் பட்டறை புதுநெல்லால் நிரம்பி வழியும். அத்தோடு சித்தாண்டிச் சித்திரவேலாயுத சுவாமி கோயில், வருமானம் குறையாத கோவிலாகவும் காணப்படுகின்றது.

இக் கோயிலின் உற்பத்திக்காலம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கூறுவர். இங்கு மூலமூர்த்தியாக வேலாயுதம் விளங்குகின்றது. இது ஆதியில் காணப்பட வேலாயுதமெனக் கூறுவர். பிற்காலத்திலே செய்யப்பட்ட வேலாயுதங்கள் இரண்டு இதன் பக்கத்திலே காணப்படுகின்றது. இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றது. இக் கோவிலின் தென் கிழக்கிலே தீர்த்தக்கேணி அமைந்துள்ளது. இக் குளத்துக்கடியில் இயற்கைத் திருநீறுபொழியும் வளம் காணப்படுகின்றது.

இக் கோயிலிலே தினமும் மூன்று வேளை பூசை நடைபெற்று வருகின்றது. சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோவிலை, தற்காலத்தில் சித்தாண்டி கந்தசுவாமி கோவில் எனவும் அழைக்கின்றனர். இக் கோயிலின் வெளிப்புறத்தே அம்பலத்தடி பிள்ளையார் கோயிலும், வள்ளி நாச்சியார் கோயிலும், தெய்வானை அம்மன் கோயிலும், குமாரத்தன் கோயிலும் காணப்படுகின்றன. குமாரத்தன் கோயிலில் பெரிய கோயில் தீர்த்தத்தின் பின் ஆறு நாட்களுக்குச் சடங்கு நடைபெறும். இவ்வேளையில் தெய்வம் ஆடல், கட்டுச் சொல்லுதல் ஆகியன நிகழும். நோற்புச்சோறு, கறி என்பன சமைக்கப்பட்டு இலையால் மூடியவாறு தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. தெய்வம் ஆடித் திரிந்து குறை நிறை சொல்லும் வரலாறு முக்கியமாகக் கட்டுச் சொல்லிலே கவனிக்கப்படும். ஊரிலே நடக்கும் நன்மை தீமைகளுக்கு அறிகுறியாகச் கொள்ளப்படும் கட்டுச் சொல்லும் வழக்கமும், அதனைக் கேட்கும் வழக்கமும் மிகப் பயபக்தியாக நடைபெறும்.

இக்கோவில் பூசகர் பரம்பரை, ஆரம்பகாலத்தில் வீரசைவக் குருமார் பரம்பரையாகவே காணப்பட்டுள்ளது. ஆனால் 1975 ஆம் ஆண்டிலிருந்து, பிராமணரே இக் கோயிலில் பூசை செய்து வருகின்றனர். கோயில் குடியார் அல்லது கோயிலார் என்று அழைக்கப்படும் மக்கள் கோயில் தொண்டுகளைத் தவறாது செய்து, அதற்கென ஒதுக்கப்பட்ட மானியங்களைப் பெறுகின்றார்கள். இவ்வாலயத்திலே கார்த்திகை ஆண்டுப்படி என்பதான ஒரு மரபு காணப்படுகின்றது. கார்த்திகை மாதத் திருவிழாவுக்கு முன்னர் வன்னியனார் முதல் சகலருக்கும் இது வழங்கப்படும்.

மழையில்லாத காலத்திலே கொம்பு முறித்தல் இங்கு நடைபெறும். கொம்புக்குரிய சேரி தந்தைவழிச் சார்ப்பாகக் காணப்படும். கொம்பு வம்மியடியில், செவ்வாய்க்குத்தி தரித்து வந்த பின்னர் கொம்பு விழா ஆரம்பமாகும். இதற்கெனச் சிறப்பாகப் பூசைகள் நடைபெறும். கொம்பு விழாக்காலம் சிறந்த கலைகள் எழுச்சிபெறும் காலமாக விளங்கும். பண்டைய மன்னர்களாலும், ஆலயத்தின்மீது ஆரா அன்பு கொண்ட புரவலர்களாலும் இக்கோயிலுக்கென ஆதனமாக நெற்காணிகள் வழங்கப்பட்டுள்ளது. குருக்கள் பட்டி என்ற வயல் குருக்களுக்காகவே செய்யப்பெற்று, அதன் வரும்படியும் கோயில் குருக்கள் பேரிலேயே வரவு வைக்கப்பட்டபடியால் இந்தக் காணிக்கு இப்பெயர் ஏற்பட்டது. கோவில் விழா நாட்களிலே மேளக்காசு என்னும் வரிப்பணத்தை அத்தியா குடியார் என அழைக்கபபடுவோர் மட்டும் கட்டுவதில்லை. இவர்களின் முன்னோர் உப்போடை என்ற ஒரு காணியை இதற்காக மானியம் செய்தமையே காரணமாகும். கோயில் வளவுகளிலே கோயில் திருப்பணி செய்வோர் குடியிருக்க அனுமதிக்கபட்டுள்ளனர்.

சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயிலில் நித்திய, நைமித்திய பூசைகள் மிகச் சிறப்பாக நடைபெறும். இக் கோவில் வருடாந்த உற்சவம், ஆவணி பிரதமையிலே கொடியேறி பௌர்ணமித் தினத்தன்று நடக்கும் தீர்த்தோற்சவத்தோடு நிறைவுபெறும். இங்கு பதினைந்து திருவிழாக்கள் நடைபெறும். திருவிழாக்கள் பதினைந்தும் குடி வாரிசாக நடைபெறும். அக்குடிகளின் தொகை பலவாகக் காணப்பட்டாலும், அவற்றுள் மூன்று குடிகளே முக்கியம் என்பதைப் பட்டயம் ஒன்றிலுள்ள குறிப்புக்கள் சுட்டுவனவாகக் காணப்படுகின்றன. வன்னிமைக்குடி, புதூர்க்குடி, அத்தியாகுடி என இம் மூன்று குடிகளும் அழைக்கப்படுகின்றன. வன்னிமைக்குடியைச் சேர்ந்த தலைமை வண்ணக்கரை வன்னியனார் என்றும் அழைப்பர்.

*வளரும்...*




(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 55)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

அப்பொழுது ஆதித்தகரிகாலன் ்மூர்க்கம் கொண்டு 'மலையமான் தொண்டுக் கிழவர் வயது எண்பதுக்கு மேலாகிறது அவர் வருவது குறித்து தங்களுக்கு என்ன பயம் சம்புவரையரே! என் பாட்டனாரை படையுடன் புறப்பட்டு வரும்படி நான் தான் செய்தி அனுப்பினேன் நான் உங்களிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டு இருக்கிறேன் அல்லவா எனக்கு எதுவும் நேராதபடி அவர் வருகிறார்' என்றார். அதற்கு சம்புவரையர் 'இளவரசே வைர நெஞ்சமும், வீர தீரமும் கொண்டவர் நீங்கள் என்று உலகறியும் பன்னிரண்டாம் பருவத்தில் தாங்கள் சேவூர் போர்க்களத்தில் புகுந்து படைகளைச் சின்னாபின்னப் படுத்தியவர் பதினெட்டாம் பருவத்தில் மீண்டும் போரில் வீரபாண்டியனை தொடர்ந்து துரத்தி கண்டு பிடித்து அவன் சிரசை கொண்டு வந்தவர் தங்களுக்கு என்ன பயம்' என்றார். அப்பொழுது ஆதித்தகரிகாலன் 'தெரியுமா ஐயா செத்துப் போன வீர பாண்டியனுடைய தலையை வெட்டிக் கொண்டு வந்தேன் என்று நீங்கள் கேலி செய்தது எனக்குத் தெரியும்' என்றார். 'பளுவூர் மோகினி நந்தினியே அவ்வாறு வதந்தி கிளப்பி விட்டுள்ளார்' என்று கூறி பயங்கரமாக சிர்த்தார் சம்புவைரயர் அதற்கு மேல் அங்கு நிற்க முடியவில்லை புறப்பட்டார். 'பாத்திபேந்திரா இங்கு நடந்த சதிக் கூட்டத்தில் நீயும் சேர்ந்து விட்டாய் என்று எனக்குத் தெரியாதா கந்தமாறன் கூட அன்று வேட்டைக்குப் போன போது என் பின்னால் வேலை குறி பார்த்தது தெரியாது என்றா நினைக்கிறீர்கள்? உண்மை நண்பன் வந்தியத்தேவன் இல்லையென்றால் நீங்கள் என்னைக் கொன்றிருப்பீர்கள் என் சகோதரனை நீ கப்பலில் ஏற்றி வந்தாய் அவனை கடலில் தள்ளிக் கொன்று விட்டாய் என்கிறார்கள்' என்றார் ஆதித்தகரிகாலன். 'வந்தியத்தேவா அதற்கு நீ என்ன பதில் சொல்கிறாய்? அப்பொழுது 'நான் பதில் சொல்கிறேன்' என்றபடி கந்தமாறன் அங்கு வந்தான். 'பொன்னியின் செல்வர் கடலில் ்மூழ்கி சாகவில்லை அவர் நாகபட்டனத்தில் சூடாமணி விகாரத்தில் மறைந்திருந்து விட்டு புயல் அடித்து கடல் பொங்கியதால் வெளிப்பட்டார் இப்பொழுது இலட்சக்கணக்கான மக்கள் புடை சூழ தஞ்சை போகிறாராம்' என்றான் வந்தியத்தேவன்.

இதைக் கேட்ட ஆதித்தகரிகாலனிற்கு பெரும் கலக்கமும் கோபமும் பொங்கி வந்தது வந்தியத்தேவனை நோக்கி 'அருள்மொழி நாகபட்டனத்தில் இருப்பான் என் கருத்தை அறியும் வரை தஞ்சை போக மாட்டான் என்று சொன்னாய் இப்பொழுது நீயும் என் விரோதி ஆகிவிட்டாய் குந்தவை கூட இதில் சேர்ந்து விட்டாள்' என்றறர் அப்பொழுது வந்தியத்வேன் 'இளையபிராட்டி இதை உறுதியாக கூறினார் பின்னர் என்ன நடந்ததோ எனக்குத் தெரியவில்லை வேண்டும் என்றால் நான் போய் அறிந்து வருகிறேன்' என்றான். ஆதித்தகரிகாலன் 'நல்லது நீயும் போய்விடு எல்லோரும் சூழ்ச்சி செய்கிறார்கள் என்பது எனக்குப் புலனாகிறது அருள்மொழி தஞ்சை செல்கிறான் கொடும்பனார் பெரிய ளோளர் படையெடுத்து அங்கு போய்விட்டார் தன் தம்பி மகளை இளவரசருக்கு மணமுடித்து சிங்காசனத்தில் ஏற்றி வைக்க வேண்டும் என்பது அவர் சூழ்ச்சி' இதைக் கேட்ட வந்தியத்தேவன் திகைப்புடன் இளவரசே மன்னியுங்கள் பொன்னியின் செல்வரும் இளையபிராட்டியும் அத்தகைய எண்ணம் சிறிதும் இல்லாதவர்கள் நான் உண்மையை அறிந்து வருகிறேன்' என்றான். இதைக் கேட்ட கரிகாலன் 'சோழ குலத்தவர்கள் நீதி தவறாதவர்கள் குற்றம் நிச்சயமாகின்ற வரையில் தண்டிக்க மாட்டார்கள் இனி என் முகத்தில் முழிக்காதே தஞ்சைக்கு அனுப்புவேனா சிறைக்கு அனுப்புவேனா என்று நான் முடிவு செய்ய வேண்டும்' என்றார். அப்பொழுது 'தங்கள் சித்தம் என் பாய்க்கியம் என்று சொல்லிவிட்டு வெளியேறினான் வந்தியத்தேவன். இளவரசரின் கட்டளையின் பேரில் சம்புவரையரும், பாத்திபேந்திரனும் திருக்கோவலூர் கிழவரை எதிர் கொண்டு அழைத்து வரச் சென்று விட்டடார்கள். இளவரசரும் கந்தமாறனும் உரையடிக் கொண்டிருந்தார்கள் அவ்வேளை இளவரசரை விட்டு வெளியேறி வந்த வந்தியத்தேவன் மனக்குழப்பத்துடன் நடந்து வந்து கொணடிருந்தான். அப்பொழுது மணிமேகலை தன் தோழியுடன் உரையாடிக் கொண்டிருந்தாள். 'சந்திரமதி அந்த மதில் மேல் பேய் போன்ற உருவம் கண்டேன்' என்றாள். அதற்கு அவள் தோழி சந்திரமதி 'வடிவழகன் வந்தியத்தேவன் முகம் தான் உங்கள் கனவிலும் நினைவிலும் வரும் இன்று ஏன் பேய் வந்தது' என்றாள். சரி வல்லத்து இளவரசரை எங்கே கண்டு கொண்டாய் செய்தி சொன்னாயா? என்றாள் மணிமேகலை. அதற்கு சந்திரமதி 'இளவரசர் கரிகாலருக்கு பைத்தியம் பிடித்தது போல் எல்லோர் மேலும் எரிந்து விழுகிறார் இளவரசர் என் முக்தில் முழிக்காதே என்று வஞ்சித்து வந்தியத்தேவனை அனுப்பி விட்டார் என்று இடும்பன்காரி சொன்னான்' என்றாள். துக்கம் தாளாத மணிமேகலை நான் இங்கே இருக்கிறேன் நீ அவரைப் பார்த்தால் இங்கு காத்திருக்கிறேன் என்று சொல் என்றாள். இதை மறைவில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவன் தன்னைப் பார்க்க இவ்வளவு ஆவல் என்ன? எதற்காக என்னை அழைத்து வர தோழியை அனுப்புகிறாள் மணிமேகலை நான் சந்தித்தால் கந்தமாறனின் பகை தூண்டப்படும். இளவரசர் ஆதித்தகரிகாலன் வெறி கொண்டுள்ளார் பழுவூர் ராணி என்ன சூழ்ச்சி செய்கிறாரோ? இவளை எதற்கு பயன் படுத்துகிறாளோ மணிமேகலைக்கு என்ன உதவி தேவைப்படுகிறதோ? என்று எண்ணியபடி மணிமேலையை அனுகினான். அப்போது மணிமேகலை அல்லிக் குளத்தின் கரையில் உட்கார்ந்து அல்லி மலர்களை கண்டு ரசித்துக் கொண்டிருந்தாள் இருட்டிலும் தெரியும் சிறிய வெளிச்சத்தில் மலர்கள் மிக அழகாக இருந்தன. காலடி சத்தம் கேட்டு திடீர் என்று எழுந்தாள் கால் தடக்கி குளத்தில் விழப் போன அவ்வேளை வந்தியத்தேவன் வாரி அணைத்து தூக்கி விட்டான் மணிமேகலையும் தன்னை அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டாள் 'மன்னிக்க வேண்டும் இளவரசி நான் திடீர் என்று இங்கு வந்ததால் தாங்கள் திடுக்கிடும்படி நேர்ந்தது அன்றும் என் பகைவர்களிடம் இருந்து தப்புவதற்கு திடீர் என்று உங்கள் அறைக்குள் வந்தேன் என்னைக் காப்பாற்றினீர்கள் நீங்கள் செய்த அந்த உதவியை என்றும் நான் மறக்க மாட்டேன் தங்களிடம் சொல்லி விட்டுப் போக எனக்கு சமயம் கிடைக்கவில்லை நான் பெரும் ஆபத்தான சூழலில் இருந்தேன் இன்று தான் எனக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது அதனால் ஆயிரம் தடவை நன்றி சொல்கிறேன்' என்றான். 'ஐயா இது என்ன அப்பட்டமான பொய் சொல்கிறீர்கள் உண்மையில் நன்றி உள்ளம் உள்ளவராக இருந்தால் சந்தர்ப்பம் உருவாக்கிக் கொண்டு வந்து நன்றி சொல்லியிருக்க வேண்டும் ஆனால் தாங்கள் எங்கள் திக்கையே திரும்பிக் கூடப் பார்த்ததில்லை' என்றாள். 'ஆமாம் இளவரசி தங்கள் சகோதரன் கந்தமாறனை முன்னிட்டே அவ்வாறு செய்தேன்' என்றான் வந்தியத்தேவன். 'நீங்கள் என் சகோதரனுக்கு பகைவன் ஆகிவிட்டீர்கள் அத்துடன் பாத்திபேந்திரனும் தங்கள் பகைவனே அதனால் உடனே இந்த அரண்மனையை விட்டு வெளியேறிவிடுங்கள் வேட்டை மண்டபத்தில் சில புதிய மனிதர்கள் ஒழிந்திருப்பதாக எண்ணுகிறேன் அவர்களுக்கும் பழுவூர் ராணிக்கும் தொடர்பு இருக்கிறது என்று தோன்றகிறது அவரும் ஒரு வாளை எந்த நேரமும் கையில் வைத்திருக்கிறார். இந்த அபாயங்களில் இருந்து நீங்கள் தப்பி விடுங்கள் இதற்கு பழுவூர் ராணி தங்களுக்கு உதவுவதாக சொன்னார் அவர் கணவர் பெரியபழுவேட்டடரையர் கொள்ளிடத்தில் படகு தாண்டு போனதால் அவரின் நிலை அறிந்து வர தங்களை வெளியில் அனுப்பி காப்பாற்றுவதாக சொன்னார்' என்றாள் மணிமேகலை. இதைக் கேட்ட வந்தியத்தேவன் இன்று இரவு ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போகிறது என் உள்ளுணர்வு கூட இதைச் சொல்கிறது! என்று சிந்தித்தபடி மணிமேகலையிடம் தன்னை வேட்டை மண்டபத்திற்கு அழைத்து போகும்படி கேட்டான் அதற்கு அவளும் தானும் தங்களுடன் அழைத்துச் செல்ல சம்மதிக்க வேண்டும் என்றாள் இருவரும் வேட்டை மண்டபத்திற்குச் சென்றனர்.




வேட்டை மண்டபத்தின் கதவை திறந்தாள் மணிமேகலை. இருள் படர்ந்து காணப்பட்டதால் வந்தியத்தேவனின் கரத்தைப் பற்றிக் கொண்டு அவனை அழைத்துச் சென்றாள். அங்கு மணிமேகலை சொன்னது போல் மனிதர்கள் நடமாடும் காலடி ஓசை கேட்டது திடீர் என்று ஒரு சத்தம் கேட்டது அப்பொழுது மந்திரவாதி ரவிதாசனும் மற்றும் ்மூன்று பேரும் கத்தியுடன் வந்தார்கள் வந்தியத்தேவனையும், மணிமேகலையையும் கட்டிப் போட்டார்கள். பின்னர் ரவிதாசன் 'தம்பி பல தடவை நீ எங்கள் காரியத்தில் குறுக்கிட்டாய் ஒவ்வொரு தடவையும் உன்னை நாங்கள் உயிரோடு விட்டு வந்தோம் ஆனால் நீ எங்களைப் பின் தொடர்ந்து வருவதை நிறுத்தவில்லை தேவியின் கட்டளையாதலால் உன்னைக் கொல்லாமல் விடுகிறேன் ஆனால் இந்த மண்டபத்திற்கு அடுத்து அறையில் என்ன நிகழ்ந்தாலும் நீ பதட்டப்படாமல் இரு எதுவும் செய்யாதே அப்படியிருந்தால் உன் உயிருக்கு ஆபத்து நேராது' என்றான் மந்திரவாதி. அதற்கு வந்தியத்தேவன் 'யார் உங்கள் தேவி' என்று கேட்டான். 'எங்கள் தேவி பாண்டிமாதேவி தான் பெரிய பழுவேட்டரையர் வீர பத்தினி நந்தினி தேவி' என்றான் மந்திரவாதி. இந்த வேளை மணிமேலை தன் கட்டுக்களை அவிழ்த்து தப்பியோட எண்ணிய போது சதிகாரர் வேல்களுடன் இவர்களைச் சூழ்ந்து கொண்டனர். இவர்கள் தடல் புடலில் பக்கத்து அறையில் இருந்த நந்தினிக்கு கேட்கவே அவள் விரைந்து வந்தாள் வந்தியத்தேவனையும், மணிமேகலையையும் வேட்டை மண்டபத்தில் கண்டு திகைத்து நின்றாள். அப்பொழுது வந்தியத்தேவன் 'தேவி தங்கள் கட்டளை என்று தாங்கள் தோழி கூறியதால் நான் இங்கு வந்தேன் இந்த கொலைகாரரிடம் அகப்பட்டுக் கொண்டேன்' என்றான். அப்பொழுது மணிமேகலை 'அக்கா இவர்கள் யார் ஏன் இங்கு இருக்கிறார்கள் தங்களை அழைத்து போக வந்தவர்கள் என்றார்கள்' என்று கேட்டாள் அதற்கு நந்தினி 'மணிமேகலை ந ீங்கள் இருவரும் என் அறைக்கு வாருங்கள் எல்லாம் விபரமாகச் சொல்கிறேன்' என்று கூறி அழைத்துச் சென்றாள். நந்தினி வந்தியத்தேவனிடம் 'ஐயா கந்தமாறன் இப்பொழுது தான் இங்கிருந்து போகிறான் அவன் ஆதித்தகரிகாலரை அழைத்து வருவதாக சொல்லிவிட்டு போயிருக்கிறான் தாங்கள் இங்கு இருந்தால் உயிருக்கு ஆபத்து நேரிடலாம் அதனால் உடனே இங்கிருந்து போய்விடுங்கள்' என்றாள். அதற்கு வந்தியத்தேவன் 'நான் கொள்ளிடத்து வெள்ளத்தில் என் வாளை விட்டுவிட்டேன் அதனால் தங்களிடம் இருக்கும் மீன் சின்னம் பொறித்த வாளை தந்துவிட்டால் நான் போய்விடுவேன்' என்றான். அதற்கு நந்தினி 'வேட்டை மண்டபத்தில் எத்தனையோ வாள்கள் இருக்கிறதே எடுத்துப் போகலாமே நான் என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வைத்திருக்கும் இந்த வாளைத் தரமுடியாது' என்றாள். வந்தியத்தேவன் 'உண்மையைச் சொல்லுங்கள் வீர பாண்டியனுடைய மரணத்திற்கு பழிவாங்கவே இருக்கலாம் அல்லவா' என்று கேட்டான் அப்பொழுது நந்தினி வந்தியத்தேவனைப் பார்த்தாள். 'நானும் இனி உண்மையை மறைக்க விரும்பவில்லை தங்காய் நீயும் தெரிந்து கொள் சோழ ராஜ்ஜியத்தின் உட் கலகத்தை தீர்த்து வைக்க நான் இங்கு வரவில்லை மதுராந்தக தேவருக்கும் ஆதித்தகரிகாலனுக்கும் இராஜ்ஜியத்தை பறித்துக் கொடுப்பதற்காக நான் இங்கு வரவில்லை கடம்பூர் மாளிகையில் விருந்துண்டு களிப்பதற்காக நான் வரவில்லை தங்காய் உனக்கு திருமணம் முடித்து வைக்கவும் நான் வரவில்லை வீர பாண்டியனின் தலையைக் கொய்த பாதகனை பழிவாங்கவே இங்கு வந்தேன். இதோ பாண்டிய குலத்து வாள் இதன் மேல் ஆணையிட்டு சபதம் செய்தேன் அந்த சபதத்தை முடிக்கவே நான் இங்கு வந்தேன்' என்று ஆவேசமாக கூறினாள். வந்தியத்தேவன் 'ஆமாம் இந்த சபதத்தை முடிப்பதற்கு நான் தடையாக இருப்பேன் என்று எண்ணி போகச் சொல்கிறீர்கள் ஆதித்தகரிகாலர் தங்களுடைய தமையனார் என்று தங்களுக்கு தெரிந்ததே! இது கட்டுக் கதையல்ல கற்பனையும் அல்ல அதனால் வீர பாண்டியனுடைய குலத்து கொலை வாளை என்னிடம் கொடுத்து விடுங்கள். தாங்கள் கொலைப் பழிக்கு ஆளாக வேண்டாம் வாய் பேசும் சக்தி அற்ற ஒரு பெண் தெய்வத்தை ஈழநாட்டில் நான் என் கண்களால் பார்த்தேன் என்னையும், அருள்மொழிவர்மரையும், ஆழ்வார்க்கடியானையும் சதிகாரர் ஆபத்தில் இருந்து காப்பாற்றினார் அவர் உருவத் தோற்றம் தங்கள் உருவத்தோடும் ஒத்ததே நிசசயமாக சொல்கிறேன் இதை விட தங்களுக்கும் அது தெரிந்து இருக்க வேண்டும் ஏனென்றால் தாங்கள் அன்னையின் ஆவி வடிவில் நடந்து சக்கரவர்தியைத் துன்புறுத்தியுள்ளீர்கள். ஆதித்தகரிகாலர் தங்கள் தமையன் என்பது உண்மை தேவி! இளவரசர் சுபாபம் தங்களுக்கு தெரிந்ததே அவற்றைத் தடுக்க என்னால் முடியாது அவர் தங்களிடம் வந்தே தீருவார் ஆகையினால் தங்களிடம் வேண்டிக் கொள்கிறேன்' என்றான்.

அதற்கு நந்தினி 'ஐயா தாங்கள் யாரும் சாதிக்காத காரியத்தை சாதித்து விட்டீர்கள் நான் என் வாளை தங்களிடம் தருகிறேன் ஆனால் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் என்று கண்ணீர் பெருகியபடி கூறினாள். என் அன்னையை பற்றிச் சொன்னவை யாவும் உண்மை என்று நானும் நம்புகிறேன் அவரை நானும் பார்த்திருக்கிறேன் என் குழந்தை பருவத்தில் நான் துாங்கும் போது என் அருகில் இருந்து என்னைப் பார்த்துக் கொண்டிருப்பார். நான் விழித்தால் அவர் மறைந்து விடுவார் என்னை போன்றே அவர் உருவம் இருந்தது இது கனவா நினைவா என்று சந்தேகப்பட்டேன் ஆனால் என்னைக் கண்டு சக்கரவர்த்தி குழப்பம் அடைந்து கொண்டதால் நான் நிச்சயப்படுத்திக் கொண்டேன் நான் என் வாளை உம்மிடம் தருகிறேன் நீர் என்னை என் அன்னையிடம் அழைத்துப் போ' என்றாள். உடனே மணிமேகலை 'ஐயா நானும் தங்களிடம் வேண்டிக் கொள்கிறேன் அக்காவின் விருப்பத்தை நிறைவேற்றுங்கள்' என்றாள். வந்தியத்தேவன் தயக்கத்துடன் 'முடிந்தால் செய்கிறேன்' என்றான் அப்பொழுது நந்தினி, 'கந்தமாறனும் கரிகாலரும் வர முன் இங்கிருந்து கிளம்ப வேண்டும் முன் வாசல் வழியாக போக முடியாது இவர்கள் வந்தாலும் வருவார்கள். வேட்டை மண்டபத்தின் வழியாகப் போனால் மந்திரவாதி ரவிதாசனும் அவனுடைய ஆட்களும் என்னைக் கொன்றாலும் கொல்வார்கள் வேறு வழியில் போகலாம்' என்று சிந்தனை செய்தார்கள். அவ்வேளை அந்த அறைக்குள் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்க, 'போய் விடுங்கள் போய் விடுங்கள்' என்றாள் நந்தினி. வந்தியத்தேவனோ அசையவில்லை களஞ்சிய அறையை நோக்கி விரைந்து சென்றான். மணிமேகலையோ அந்த அறையின் திரையில் பின் சென்றாள் ஆதித்தகரிகாலனும் கந்தமாறனும் உள்ளே வந்தனர். அவ்வேளை நந்தினி கையில் வாளுடன் நின்றாள். 'தேவி இது என்ன எங்களை வரவேற்க வாள் ஏந்திய கைகளோடு நிற்கிறீர்கள்' என்றான் ஆதித்தகரிகாலன் 'ஆமாம் ஐயா வீரம் மிக்க இளம் புலியை தீர்க்கும் சிறந்த வீர சிங்கங்களை வரவேற்க தக்க முறையல்ல இது. மற்றும் குப்பையில் கிடந்த என்னை உலகமறிய அழைத்து வந்து அரண்மனை வாழ்வும் அரசபோகமும் அளித்த மகாபுருஷரை கொல்வதை காப்பாற்றுவதற்கு இந்த வாளின் உதவியைக் கேட்கிறேன்' என்றாள் நந்தினி.

தொடரும்...)

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

---


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோ கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
My 123 Mini Library
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# அன்பின் தொனி - 651

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**விக்கிரகங்களெல்லாம் மனிதனின் கைவேலைதான்**

விக்கிரகங்கள் மனிதனுடைய சுய சிந்தனையும் அவனுடைய கற்பனா சக்தியின் முடிவு என்பதையும், அவன் கைவேலைகள் என்பதையும் வேதம் விபரிக்கிறது.

விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர், அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது, அவைகள் ஒன்றும் காணாமலும், ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்? இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள், தொழிலாளிகள் நரஜீவன்கள் தானே, அவர்கள் எல்லாரும் கூடிவந்து நிற்கட்டும், அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெட்கப்படுவார்கள். கொல்லன் இரும்பைக் குறட்டால் இடுக்கி, உலையிலே காயவைத்து, சுத்திகளால் அதை உருவாக்கி, தன் புயபலத்தினால் அதைப் பண்படுத்துகிறான், பட்டினியாயிருந்து பெலனற்றுப்போகிறான், தண்ணீர் குடியாமல் களைத்துப்போகிறான். தச்சன் நூல்பிடித்து, மட்டப்பலகையால் மரத்துக்குத் குறிபோட்டு, உளிகளினால் உருப்படுத்தி, கவராசத்தினால் அதை வகுத்து, மனுஷ சாயலாக மனுஷரூபத்தின்படி உருவமாக்குகிறான், அதைக் கோவிலிலே நாட்டி வைக்கிறான். அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான், ஒரு மருதமரத்தையாவது ஒரு கர்வாலிமரத்தையாவது, தெரிந்துகொண்டு, காட்டுமரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான், அல்லது அசோகமரத்தை நடுகிறான், மழை அதை வளரச்செய்யும். மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர்காய்கிறான், நெருப்பைமூட்டி அப்பமும் சுடுகிறான், அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப் பணிந்து கொள்ளுகிறான், ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான், ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து, பொரியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங் காய்ந்து: ஆஆ, அனலானேன், நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி, அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிர கதெய்வமாகச் செய்து, அதற்குமுன் விழுந்து, அதை வணங்கி: நீ என் தெய்வம், என்னை இரட்சிக்கவேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான். அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது. அதில் பாதியை அடுப்பில் எரித்தேன், அதின் தழலி ன்மேல் அப்பத்தையும் சுட்டு, இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன், அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை, அம்மாத்திரம் அறிவும் சொரணையும் இல்லை. அவன் சாம்பலை மேய்க்கிறான், வஞ்சிக்கப்பட்டமனம் அவனை மோசப் படுத்தினது, அவன் தன் ஆத்துமாவைத் தப்புவிக்காமலும்: என் வலது கையிலே அபத்தம் அல்லவோ இருக்கி றதென்று சொல்லாமலும் இருக்கிறதென்று சொல்லாமலும் இருக்கிறான். - **ஏசாயா 44: 9-20**

திருடன் அகப்படுகிறபோது, எப்படி வெட்கப்படுகிறானோ, அப்படியே இஸ்ரவேல் வம்சத்தார் வெட்கப்படுவார்கள், கட்டையைப் பார்த்து, நீ என் தகப்பன் என்றும், கல்லைப்பார்த்து, நீ என்னைப்பெற்றாய் என்றும் சொல்லுகிற அவர்களும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், அவர்கள் ஆசாரியர்களும், அவர்கள் தீர்க்கதரிசிகளும் வெட்கப்படு வார்கள். அவர்கள் தங்கள் முகத்தையல்ல, தங்கள் முதுகை எனக்குக் காட்டினார்கள், தங்கள் ஆபத்துக்காலத்திலோ எழுந்து எங்களை இரட்சியும் என்கிறார்கள். நீ உனக்கு உண்டுபண்ணின தேவர்கள் எங்கே? உன் ஆபத்துக்காலத் தில் உன்னை இரட்சிக்கக்கூடுமானால் அவைகள் எழும்பட்டும், யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும், உன் தேவர்களின் இலக்கமும் சரி. என்னோடே நீங்கள் வழக்காடுவானேன்? நீங்கள் அனைவரும் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். - **எரேமியா 2: 26-29**

கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிற வசனத்தைக் கேளுங்கள்: புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள், வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி, நீங்கள் அவைகளாலே கலங்காதிருங்கள். ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது, காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள், அது தச்சன் கையாடுகிற வாச்சியால் பணிப்படும். வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை அலங்கரித்து, அது அசையாத படிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்குகிறார்கள். அவைகள் பனையைப்போல நெட்டையாய் நிற்கிறது, அவைகள் பேசமாட்டாதவைகள், அவைகள் நடக்கமாட்டாததினால் சுமக்கப்படவேண்டும், அவைகளுக்குப் பயப்பட வேண்டாம், அவைகள் தீமைசெய்யக்கூடாது, நன்மைசெய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தாவே, உமக்கு ஒப்பானவன் இல்லை, நீரே பெரியவர், உமது நாமமே வல்லமையில் பெரியது. - **எரேமியா 10: 1-6**

**விக்கிரக ஆராதனை தண்டனைக்குரியது**

உன் தேவனாகிய கர்த்தரின் கண்களுக்கு முன்பாக எந்தப் புருஷனாவது ஸ்திரீயாவது உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற வாசல்கள் ஒன்றில் அக்கிரமஞ்செய்து, அவருடைய உடன்படிக்கையை மீறி, நான் விலக்கியிருக் கிற வேறே தேவர்களையாது சந்திரசூரியர் முதலான வானசேனைகளையாவது சேவித்து, அவைகளை நமஸ்கரிக்கிற தாகக் காணப்பட்டால், அது உன் செவிகேட்க உனக்கு அறிவிக்கப்படும்போது, நீ அதை நன்றாய் விசாரிக்கக்கடவாய், அது மெய் என்றும், அப்படிப்பட்ட அருவருப்பு இஸ்ரவேலில் நடந்தது நிச்சயம் என்றும் கண்டாயானால், அந்த அக்கி ரமத்தைச் செய்த புருஷனையாவது ஸ்திரீயையாவது உன் வாசல்களுக்கு வெளியே கொண்டுபோய், அப்படிப்பட்டவர் கள் சாகும்படி கல்லெறியக்கடவாய்.- **உபாகமம் 17: 2-5**

தொடரும்...


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# கடந்தவையும் கடப்பவையும் (31)

- உமா மோகன் -

எத்தனையோ மக்களுக்கு மறுவாழ்வு கொடுத்த - அவள்
மெத்தப் பெரும் சங்கடத்தைச் சந்தித்தாள் - அன்று
நேரந்தவறி தாமதமாய் வந்து போக
பாவம் அவளைத் திட்டித் தீர்த்தார் - பலர்

கொந்தளித்தார் சீறியும் சினந்தார் - இவள்
தொந்தரவு தருகிறாள் என்பதவர் குற்றச்சாட்டு
என்ன செய்வாள் அங்கு அவள் - அவர்
சொன்ன சொல்லைக் கேட்காவிட்டால் முடியுமா?

தன்னையும் காத்து தன்னை நம்பிய
எம்மவரையும் காக்க வேறு வழியின்றி - ஓடினாள்.
ஆனையிறவு வரை அவர்களையும் ஏற்றி - பின்
தானே திரும்பிச் சென்று கிளிநொச்சிச்

சொந்தங்களை இறக்கிவிட்டு சோர்விலாள் வந்தாள்
எந்த நேரம் ஆனாலும் சொந்த இடம்
செல்பவரைச் சேர்ப்பதற்காய் விரைவாக ஓடிவந்த
நல்லவளும் பணையக் கைதியானாள் பின்னாளில் - அன்றுவரை

அழகிய அன்னையாக அனைவரையும் அரவணைத்த - அவ்
எளியாள் கண்ணிவெடிக்கும் இலக்கானாள் - அன்று
முறிகண்டி விநாயகரும் அறியவில்லை நல்லாள் - அவள்
குறிவைக்கப் பட்டடுவிட்டாள் என்பதனை - பாவம்

அன்றோடு அவள்பயணம் அங்கு இறுதியாச்சு - மீண்டும்
என்றோ என்பதுவே பெரும் பேச்சுமாச்சு - மிக
நெடுங்காலம் காத்திருக்கும் கதையும் ஆச்சு - சிறுவர்
கடுகளவும் அறியாத பொருளுமாச்சு 'யாழ்தேவி' - அவள்

ஓடிய பாதையோ அடையாளம் தெரியாத - முள்
மூடிய பாதையாய் ஆனது - அவள்
தரித்த இடங்கள் சில அகதிமுகாங்களாயின - சில
தெரு விலங்குகள் வாழும் இடங்களாய் மாறின

ஆண்டுகள் இருபத்துநான்கு உருண்டோட - பின்
மீண்டும் வந்தாள் யாழ்தேவி புதுப்பொலிவோடு
நீண்டகாலம் தாங்கள் பட்ட சிரம்மெல்லாம்
பூண்டோடு ஒழிந்ததாய் பூரிப்பு மக்களுக்கு - இனி

அலைச்சல் இல்லாப் பயணம் என்றார் - சிலர்
கரைச்சல் இல்லை பணமும் கனக்க இல்லை
பயமில்லாப் பயணம் எனப் பலரும்தான்
புகழாரம் சூட்டித்தான் வரவேற்றார் - அவளும்

பழைய பெருமைகளைச் சுமந்தவளாய் வந்து - இன்று
பிழை செய்தாள் என்ற பெரும் பழியோடு???
பாவம் அவள் என் செய்வாள்???
வேகமாக வருவதற்குப் பணிக்கப்பட்டாள்

கடவைகளின் நிலைமையது தெரியாது அவளுக்கு
அகப்பட்டோர் உயிர்களை எடுக்கின்றாள் என்கிறார் - அன்றோ
புதுப்படைப்புகட்கு ஊக்கம் கொடுத்தவள் - இன்று
அழிப்புகட்கு காரணம் ஆகிவிட்டாள் - அன்று


சிறு வியாபாரிகளை ஊக்கப்படுத்தியவள் - இன்றோ
சிறு பொருள் ஒன்றினைக் கொண்ட
பெரும் வியாபாரிகளையும் ஊக்கப் படுத்துறாளாம்
பயமின்றி முதல்வகுப்பில் பெண்கள் தனித்துப்போக

தயங்குவதாய் நண்பி அவள் சொல்லுகிறாள்
வியப்பாக இருந்தது அவள் கதைதான்
நல்லவள் யாழ்தேவி அங்கு பலர்
தொல்லைகள் கொடுப்பதால் அவள் நிலை இப்படி - ஆனாலும்

இன்றும் உலகத் தரத்தில் அவளின்
நல்ல வழித்தடத்திற்கு பெரு மதிப்பாம்...

(தொடரும்)

---




## 07 வாழ்நிலம்

மாரடைப்பு ஒன்று வந்தால் விமானத்தில் பயணிக்க முடியுமா என்ற கேள்வி இருந்தது. இரண்டு மாதங்களில் பயணப்படுவது மிகுந்த பாதுகாப்பானது என்பது மருத்துவரின் ஆலோசனை. அவ்வளவு நாட்கள் பொறுக்கேலாது என்று என் மனம் சொல்
லியது. நண்பர் தேவராஜா என்னுடன் துணைக்கு வருவதாகச் சொன்னார். சென்னைக்கான எனது பய ணம் முடிவானது.



இரண்டு பேரும் 1992 தை 10 இல் சென்னையைச் சென்றடைந்தோம். எனது துணைவியாரும் பிள்ளைகளும் வந்து அணைத்துக் கொண் டார்கள். நண்பர் தேவர் "உங்கடை மனுஷனை பத்திரமாகக் கூட்டி வந்து ஒப்படைத்திருக்கிறேன்" என்று துணைவியாரிடம் சொன்னதோடு "இந்தாள் ஒரு சொல்லுக் கேளாத மனுஷன், ஆளுக்கு கால் கட்டுப் போட வேணும்" என்றும் சொல்லி வைத்தார்.

இரண்டு நாட்கள் முற்று முழுதாக ஓய்வாக வீட்டில் இருந்தேன். மகள் கீதம் சில காலம் காணாதபடியால் அப்பாவுக்கு முன்னால் வெட்கப்பட்டுக்கொண்டு நின்றா.

மகன் கீர்த்தனன் அதே குறும்புத்தனங்களுடன் அக்காவைச் சீண்டு வதும் அக்கம் பக்கத்தில் உள்ள அவன் வயதை ஒத்த சிறுவர்களுடன் விளையாடுவதுமாக மகிழ்ச்சியாக இருந்தான்.

துணைவியாருக்கு என்னைப் பற்றியும் நோய்வாய்ப்பட்ட இதயமே உன்னைப் பற்றியும் அதிக கவலையோடு அதிக கவனம் எடுத்து பணிவிடைகள் செய்து கொண்டுமிருக்க காலச் சூரியன் கடுகி விரைந்தான்.

சூர்யா மருத்துவ நிலையத்தில் டாக்டர் ஜெயராஜ் அவர்களிடம் தொடர்ச்சியாக இதய பரிசோதனைகளை வைத்துக் கொண்டேன்.

இடையிடையே நெஞ்சு நோ (Angina Pain) வருத்தும். மறுநாள் சென்று பரிசோதனைகள் செய்து மருந்தெடுத்துக் கொள்ளுவேன்.

இதயமே, சென்னையில் இருந்த காலத்து நினைவுகள் ஏராளம். சினிமாவில் பாட அல்லது நடிக்க சந்தர்ப்பம் கிடைக்குமா என்று அலைந்ததும் உண்டு.

முயற்சி, அயர்ச்சி, சலிப்பு, களிப்பு, சோர்வு, உற்சாகம் என்றெல்லாம் வந்து போன உணர்வுகளிடையே நீ பெரிய பிரச்சினைகள் தராமல் இயங்கிக் கொண்டிருந்தாய்.

சிலவேளை நெஞ்சு நோவு கூடிய வேளைகளில் அதற்கான மருந்துகளை பயன்படுத்துவேன். பின்னர் அது சரியாகி விடும்.

## 08 நல்லாசிரியனாய்

இதயமே இது உன்னைப் பற்றிய கதை என்பதால் அதற்குப் புறம்பான கதைகளை இங்கு எழுதவில்லை.

1994 கார்த்திகை இறுதியில் கனடாவுக்கு வந்து சேர்ந்த பின் உனக்கு மேலும் பிரச்சினைகள் வந்த கதைகளை சொல்லலாம் என்றிருக்கிறேன்.

---

1994 கார்த்திகை. கனடிய மண்ணில் கால் பதித்து ஒரு புதிய வாழ்வை நாம் தொடங்கினோம்.

இதயமே, எல்லா அலைவுகளுக்கும் ஒரு முடிவு வந்து விட்டதாக நாங்கள் மகிழ்ந்தோம். நான் படித்த பட்டப் படிப்புக்கும் உத்தியோக அனுபவத்துக்கும் ஏற்ற ஒரு நல்ல வேலை கிடைக்கும் என்று நினைத்திருந்தேன். ஆனால் அவ்வாறொரு வேலையை பெறுவது சுலபமாக இருக்கவில்லை.

இதயமே, நான் எந்த வேலையை செய்யவும் தயாராக இருந்தேன். ஆனாலும் உனது சுகயீனம் காரணமாக உடல் உழைப்பு மிகுந்த கடுமையான வேலைகளை நான் செய்ய முடியாது.

சில தற்காலிக வேலைகளை செய்து கொண்டிருந்த வேளையில் தாயகத்தில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற இலங்கையன் செல்வரத்தினம் அவர்களின் தொடர்பும் அவர் மூலம் முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் தொடர்பும் கிடைத்தது.

ஏற்றோபிகோக் கல்விச்சபையில் பாரம்பரிய மொழிக் கல்வித் திட்டங் களின் (Heritage Languages) கீழ் நடக்கும் தமிழ் கற்பித்தலில் தமிழ் ஆசிரியராக சேருவதற்காக விண்ணப்பித்தும் அது கிடைக்கவில்லை. அதனால் யோர்க் கல்விச்சபையில் தமிழாசிரியராக கற்பிப்பதற்காக ஒரு விண்ணப்பத்தினையும் நான் அனுப்பியிருந்தேன்.


அதிபர் பொ. கனகசபாபதி அவர்களே யோர்க் கல்விச் சபையின் இந்த பாரம்பரிய மொழிக் கல்வித்திட்டத்தின் ஆலோசகராக அப்போது கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

ரொறன்ரோவில் நடை பெறும் பொது மேடைகளில் பட்டிமன்றம், கவியரங்கம், வில்லிசை, மெல்லிசை, கூத்து போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலும் விருப்போடு நான் பங்கெடுத்து வந்த காலம் அது.



இவற்றை நேரடியாகவே யோர்க் கல்விச் சபையின் இணைப்பாளராகக் கடமையாற்றி வந்த அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் கண்டு வந்ததினால் தமிழ் ஆசிரியத் தெரிவில் விருப்போடு என்னையும் ஒருவராக அவர் தேர்ந்தெடுத்தார்.

தமிழ், சிங்களம் என்று இரு மொழிகள் பேசும் மக்களைக் கொண்ட இலங்கைத் தேசத்தில் மொழியின் பேரால், மதத்தின் பேரால், இனத்தின் பேரால் இனக்கலவரங்களையும் உயிர் இழப்புக்களையும் கண்டு வந்த ஒருவன் என்ற வகையில் கனடாவின் கல்விச் சபைகளில் எமது தமிழ் மொழி உட்பட 50க்கும் மேற்பட்ட சிறுபான்மை இனங்களின் பாரம்பரிய மொழிகள் கற்பிக்கப்படுவதை அறிந்து பேருவகை கொண்டேன். புலம்பெயர்ந்து வாழும் நாட்டில் எமது குழந்தைகளுக்கு எமது தாய்மொழியை கற்பிப்பதற்கு எனக்கு கிடைத்த பெரும் வாய்ப்பாக இதனை நான் கருதினேன்.



டொன்மில்ஸ் & செப்பேர்ட் சந்திப்பில் இருந்த Forest Manor Public School அரச பாடசாலையில் சனிக்கிழமைகளில் காலை இரண்டரை மணி நேரம் தமிழ் கற்பிப்பதற்கான நியமனம் கிடைத்தது. ஒரு அரசாங்க உத்தியோகம் கிடைத்த மகிழ்ச்சி எனக்கு.

தமிழாசிரியத் தொழிலுக்கு தான் மிக விரும்பித் தேர்ந்தெடுத்த ஒருவராக பொது மேடைகளில் அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் சொல்லியும் என்னை பெருமைப் படுத்தி உள்ளார். அதிபர் என்று அனைவ ராலும் அன்போடு அழைக்கப்பட்ட கனக சபாபதி அவர்கள் கனடாவில் வாழ்ந்த காலத்தில் கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஓர் இயங்குவிசையாக விளங்கியவர், எமது குடும்பத்துடன் நெருக்கமான உறவு பாராட்டியவர், எமது கவின் கலாலயா நிகழ்ச்சிகள் பலவற்றிலும் விருந்தினராகக் கலந்து கவுரவம் தந்தவர்.





இலங்கையன் செல்வரத்தினம் அவர்களை - அறிவியலை முதன்மைப்படுத்திய - அனைத்து மூடத்தனங்களுக்கும் எதிராகக் குரல் கொடுத்த பகுத்தறிவுச் சிந்தனையும் செயற்பாடுகளும் நிறைந்த கல்விமான் ஆகவும், தமி-ழர் சமூ கத்தில் நிலவிவரும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றப் பாடுபட்ட ஒருவராகவும் அறிந்திருக்கிறோம்.

பின்னாளில் திரு செல்வரத்தினம் அவர்களும் திரு கனகசபாபதி அவர்களும் இதய பிரச்சினைகள் காரணமாகவே எம்மை விட்டுப் பிரிந்தார்கள்.



இந்த இருவரையும் நினைக்கையில் பண் டிதர் ம. சே. அலெக்ஸ்சாந்தர் அவர்களின் நினைவுகளும் சேர்ந்தே வரும். தாயகத்தில் சமூகப் பணிகளில் முனைப்பாக ஈடுபட்டவர். எனது மூத்த சகோதரரின் குடும்ப நண்பர். நான் பனை அபிவிருத்திச் சபை யில் கடமையாற்றிய காலங்களில் அதன் இயக்குனர் சபை உறுப்பினரா விளங்கியவர். கனடாவிற்கு வந்த நாள் முதல் நட்போடும் உறவோடும் நெருக்கமாகப் பழகியவர். கனடாத் தமிழ் ஈழச் சங்கத்தின் தமிழ்த் துறைத் தலைமைத்துவத்தினை ஏற்று ஆசிரியத் தொண்டு புரிகையில் எமது மகளின் தமிழ் ஆசிரியராகவும் இருந்து ஊக்கம் அளித்தவர்.

இதயப் பிரச்சினை காரணமாக மிக நீண்ட காலமாக பேஸ்மேக்கர் (Pacemaker) உதவியுடன் வாழ்ந்து மறைந்தவர்.

எனக்கு முதல் மாரடைப்பு வந்தபோது என்னை வருத்தம் பார்த்த வடக-ீழ் மாகாண சபையின் செயலாளர் சி. பற்குணம் அவர்களும் தனது 52வது வயதில் மாரடைப்பில் காலமான துயர நினைவுகளும் இப்போது வந்தன.

திரு. பற்குணம் எங்கள் ஊரவர். என்னைப் போன்றோருக்கு ஓர் முன்னுதாரணமாக திகழ்ந்தவர். நேர்மையும், துணிச்சலும் மிகுந்த ஓர் அரச அதிகாரி. எப்பொழுதும் மக்களையே முதன்மைப்படுத்துபவர். அவ ரைப் போன்றோரின் இழப்பு மிகவும் கனதி யானது.

இதயமே, உன் கதையை சொல்ல வந்த நான் பிறர் கதைகளையும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதுவும் சோகக் கதைகளாய்...



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377


# இவ்வார ராசிபலன்

## 13-05-2022 வெள்ளி தொடக்கம் 19-05-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். புது முயற்சி பலன் அளிக்கும். குடும்ப சந்தோஷம் கூடும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். காரிய தாமதம் ஏற்படும். கடன் பிரச்சனை குறையும். நினைவாற்றல் பெருகும். பணம் சேரும். பணிவு அவசியம். அலைபேசிச் செய்தி ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. வெகுமதிகள் சேரும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. கனவு பலிதமாகும். குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கலைத்தொழிலில் ஆர்வம் கூடும். மனச்சுமை குறையும். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விச்செலவு அதிகரிக்கும். குடும்பம் மனநிறைவு ஏற்படும். புதிய நண்பர்களை தவிர்க்கவும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சொத்துக்கள் சேரும். நல்லோர் நட்பு கிட்டும். இலக்கிய ஆர்வம் கூடும். பழையக்கடன் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும். உறவினரால் பணவிரயம் ஏற்படும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். மனவேதனை குறையும். எதிர்மறையான எண்ணங்கள் விலகும். வசதிகள் பெருகும். பொருளாதார உயர்வு ஏற்படும். தெய்வீக பற்று கூடும். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை உருவாகும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். ஸ்திர சொத்து சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நிருதிலிங்கம், அதிர்ஷ்ட எண்: *4,3,1,2*

அதிர்ஷ்ட நிறம்: குங்குமகலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**ரிஷபம்:** மனநிறைவு உண்டாகும் வாரம். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். வாகனத்தால் செலவு ஏற்படும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல் நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றி தரும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பிரார்த்தனைகள் நிறைவேறும். கொண்டாட்டங்கள் கூடும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. உத்தியோக உயர்வு கிட்டும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். ஞாபக மறதி ஏற்படும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். சுபச்செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் குழப்பம் நீங்கும். பூமியால் லாபம் உண்டு. மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதார வகையில் சகாயம் கிடைக்கும். வியாபாரம் குறையும். திடீர் பயணம் ஏற்படும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். நினைத்தது நிறைவேறும். உடல்பொலிவு கூடும். உற்சாகம் அதிகரிக்கும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். விருந்தினர் வருகை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகக் கடவுள், அதிர்ஷ்ட எண்: *2,4,9,1*

அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** மாற்றங்களை சந்திக்கும் வாரம். பயண முயற்சி பலன் தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். கடன் பாக்கிகள் வசூலாகும். திருமண தீபம் சுடர்விடும். பொருளாதாரம் மேம்படும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். தேச பயணம் உண்டு. கட்டிட தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். வாகன யோகம் உண்டு. அணிமணிகள் சேரும். அதிகாரம் உயரும். எதிலும் வெற்றி கிட்டும். மாலைநேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வாழ்க்கைத் தரம் உயரும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். போதிய தனவரவு இருக்கும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கௌரவத்தில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சாதனை படைக்கும் காலம். தெளிவான முடிவுகள் உதயமாகும். பணப்பற்றாக்குறை நீங்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஞாபக மறதி ஏற்படும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். தெய்வீகப் பற்று கூடும். வரவேற்பு கூடும். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலைத்திறன் அதிகரிக்கும். சுபக்காரிய செய்தி வரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன் பிறந்தோரால் உதவி கிடைக்கும். முக்கிய எண்ணம் நிறைவேறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: *6,9,2,3*

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கடகம்:** காரியத்தில் வெற்றிக்காணும் வாரம். வெகுமதி தேடி வரும். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத்திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். மங்கள செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். தந்தை தாய் உதவி உண்டு. வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. உறவினர் வருகை தொல்லை தரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச்செலவு அதிகரிக்கும். உடல் உபாதை அதிகமாகும். தீர்த்த யாத்திரை உண்டு. பங்குச்சந்தை வியாபாரம் லாபம் தரும். மருத்துவச் செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். காதலால் மகிழ்ச்சி உண்டு. கனவு தொல்லை உண்டு. திருமகள் கிருபை உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. திக்கற்ற நிலை மாறும். வீண்வம்பு ஓடிமறையும். வாழ்க்கை வசதி பெருகும். போதிய வரவு பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். புதிய தொழில் அமையும். உத்தியோக மாற்றமுண்டு. ஆடம்பர சுகங்கள் கூடும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. நல்வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இஷ்டதெய்வம், அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,S




**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு தரும் வாரம். வீடு தேடி வெற்றி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குடும்ப மேன்மை தரும். குதூகலப் பயணம் உண்டு. முயற்சிகள் நிறைவேறும். முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலைமாறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்காண வழி பிறக்கும். செயல்களில் துணிவு கூடும். நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். வீண் செலவு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. தனவரவு பெருகும். புதிய முயற்சி பலன் தரும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். இனிய எண்ணம் உதயமாகும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். செயல் திறமை வெளிப்படும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். மற்றவர்கள் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். புதிய பொருள் சேரும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். புத்தி சாதுர்யம் கூடும். பழைய நட்பினால் பலன் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: *1,4,3,2*

அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,U




**கன்னி:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். அலைச்சல் அதிகரிக்கும் உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும். ஆபரணச்சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் லாபம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. முயற்சிகள் பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடையினால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதியத்தொழில் அமையும். வீண் விரயம் அதிகமாகும். எதிர்ப்புக்கள் குறையும். இனிய தகவல் வந்து சேரும். எளிமையை விரும்புவீர்கள். பிள்ளைகள் கல்வி மேம்படும். கட்டிடத்தொழில் லாபம் தரும். எள் தானம் ஏற்றம் தரும். வாய்ப்புக்கள் தேடி வரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைக்கூடும். ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள்விருத்தி அதிகரிக்கும். அன்பினால் எதையும் வெல்வீர்கள். விருந்தினர் வருகை உண்டு. ஆசைகள் நிறைவேறும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். வாய்ப்பேச்சில் கவனம் தேவை. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். குடும்ப சேமிப்பு உயரும். குடும்பச் சண்டை அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,P




**துலாம்:** பக்குவமான பணவரவு சேரும் வாரம். விரோதங்கள் விலகும். வியாபாரத்தால் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும். மனோ பயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். குழப்பங்கள் அகன்று போகும். செலவுகள் குறையும். இனிதான காரியங்களை நினைத்து செயல்படுவீர்கள். செல்வாக்கு உயரும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. மனைவியன் பிரார்த்தனையால் மாற்றம் உண்டாகும். கைப்பொருள் களவுப் போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச் சொத்து சேரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். சுபச்செய்தி கூடி வரும். விரயங்கள் அதிகரிக்கும். எதிர்மறை எண்ணம் உருவாகும். மாங்கல்ய நமஸ்காரம் மனோதைரியம் கொடுக்கும். பாக்கிகள் வசூலாகும். கடன்கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மன அமைதி உண்டாகும். மனதில் குழப்பங்கள் தீரும். சமூக சீர்நிலை உண்டாகும். மனிதாபிமானம் உண்டாகும். மனதில் உள்ள பயம் நீங்கிவிடும். தடைகள் விலகும். விவாத முயற்சி வெற்றி தரும். கடமையில் தடங்கல் ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். பாராட்டுக்கள் தேடி வரும். காதலில் பிரிவு ஏற்படும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். தன லாபம் பெருகும். மன வேதனை குறையும். வசதிகள் கூடும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். காரியம் வெற்றி தரும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: *5,2,3,1*

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,I




**விருச்சிகம்:** மகிழ்ச்சியும் வளர்ச்சியும் உருவாகும் வாரம். பொன்னான நாளாக அமையும். சிந்தனைகள் மேலோங்கும். சீரான வாழ்வமையும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். அன்றாட நாட்கள் மனமகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். பங்குச்சந்தை தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். ஊக்கம் அதிகரிக்கும். உற்சாகம் கூடும். மன தைரியம் கூடும். தேவையில்லா பயங்கள் நீங்கும். இறை விழிப்புணர்வு கூடும். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். சமூக செயலில் ஈடுபடுவீர். புதுத்தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்துக் கொள்வீர்கள். உடல்நிலையில் கவனம் தேவை. பொருளாதாரம் உயரும். குதூகலம் தாண்டமாகும். மங்கல செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தனவரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புது முயற்சிகளை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் செயல்பட வேண்டும். வியாபாரம் விருத்தியாகும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். வயிற்று உபாதை வந்து நீங்கும். தொல்லைத் தந்தவர் விலகி விடுவர். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் மீண்டும். கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: *4,3,1,9*

அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,J




**தனுசு:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும் வாரம். காரிய வெற்றி கிட்டும் நாளாக அமையும். பொன்னான நேரங்கள் அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். பதவிகள் கிட்டும். நண்பர்களால் நன்மை உண்டு. வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். பதவி வாய்ப்பு தேடி வரும். ஆனந்தம் பெருகும். வாழ்த்துக்கள் வந்து சேரும். கல்வி ஆர்வம் கூடும். வருமான வாய்ப்பு கூடி வரும். பழையக் கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். காதல் எண்ணம் ஏற்படும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். வளமான வாழ்வு அமையும். பொறாமைகள் விலகும். கடன் பிரச்சனை உருவாகும். உலோகத்தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். வழக்குகள் சாதகமாகும். தாய் நலனில் கவனம் தேவை. வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். தேகப்பலம் கூடும். பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கடன்சுமை குறையும். பணப்புழக்கம் சரளமாகும். கணவன், மனைவி உறவு களிப்புறவு உண்டாகும். இல்லத்தில் மன மகிழ்ச்சி கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். முகப்பொலிவு கூடும். மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *1,9,5,3*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M

***(தொடர்ச்சி 35ம் பக்கம்)***

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



அமரர் உயர்திரு சோதிலிங்கம் பரமலிங்கம் அவர்களின்

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 20-05-1950
உதிர்வு: 17-04-2022



அமரர். உயர்திரு. சோதிலிங்கம் பரமலிங்கம்

அன்பின் திருவுருவமாக, பாசத்தின் உறைவிடமாக உங்கள் குடும்பத்தின் தீபமாக விளங்கி எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத் துயரில் விட்டுச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமாகிய அமரர் உயர்திரு சோதிலிங்கம் பரமலிங்கம் அவர்கள் இறைவன் திருவடி எய்திய சோகமான செய்தியைக் கேள்வியுற்று, எங்கள் இல்லம் தேடி வந்து. நேரில் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், மற்றும் WhatsApp, Viber, Text Message ஆகிய ஊடகங்களின் மூலம் ஆறுதல் நல்லுள்ளங்களுக்கும், மற்றும் உணவு, ஆகாராங்கள், தேநீர் போன்றவற்றை இல்லத்திற்கு கொண்டு வந்து தந்த அன்புள்ளங்களுக்கும், மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அஞ்சலி உரையாற்றியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், திருமுறை மற்றும் தேவாரங்களை ஓதியவர்களுக்கும், அனைத்துக் கிரியைகளையும் நடத்திய அந்தணப் பெரியோர்களுக்கும், அமரரது திருவுடலை இலங்கையிலிருந்து கனடாவிற்கு விரைவாக கொண்டுவர ஏற்பாடுகளைச் செய்தவர்களுக்கும், Chapel Ridge Funeral Home ஊழியர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி!

அமரர் உயர்திரு சோதிலிங்கம் பரமலிங்கம் அவர்களின் ஞாபகார்த்த கிரியைகள் மற்றும் பூசைகள் *17-05-2022* அன்று அவரது இல்லத்தில் இடம்பெற்று பின்னர் எதிர்வரும் *05-06-2022* அன்று ஞாயிற்றுக்கிழமை 733 Birchmount Rd, Scarborough, ON M1K 1R5 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. அன்றைய பிராத்தனைகள் மற்றும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

**இங்ஙனம் மனைவி, மக்கள், மற்றும் குடும்பத்தினர்**

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759




இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# சர்வதேச ஆன்மிக சஞ்சிகை "தெய்வீகம்" வெளிவந்துவிட்டது




### சர்வதேச ஆன்மிக சஞ்சிகை இதழ் 3 (தை - பங்குனி 2022)ற்கான "தெய்வீகம்" வெளிவந்துள்ளது

இவ்விதழின் பொறுப்பாசிரியரான "பண்ணிசைச்செல்வர்" திரு.நா.ஞானச்செல்வன் (செல்வம்) அவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் மேன்மைகொள் சைவநீதியையும் - அறவழியிலான ஆன்மிகச் சிந்தனைகளையும் மேன்மக்கள் உணர்ந்து, அவ்வழி வாழ்வியல் முறைகளைக் கடைப்பிடித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் - எனும் உயரிய நோக்குடன், இவ்விதழை மிகுந்த பிரயாசையுடனும், அர்ப்பணிப்புடனும் வெளியீடு செய்து வருவது பாராட்ட வேண்டிய நற்கைங்கரியமாகும்.

யாழ். நல்லூர் "தெய்வீகம்" சர்வதேச ஆன்மீக சஞ்சிகையின் ஆசிரிய பீடத்தின் வழிகாட்டலில், பரோபகார சிந்தனை நிறைந்த கனடிய உறவுகளின் பேராதரவோடு
திரு. செல்வம் அவர்கள், சஞ்சிகையை வெளியிட்டு வருவது தமிழுக்கும் - சைவத்திற்கும் வளம் சேர்ப்பதாக உள்ளது.

வளர்க அவரது ஆன்மிகப் பணி.

**- வீணைமைந்தன்**

## இவ்வார ராசிபலன்

(32ம் பக்கத் தொடர்ச்சி)

**மகரம்:** பிரபல்யம் கிடைக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். பிள்ளைத்தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புக்கள் விலகும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். உணவு பிரியம் அதிகரிக்கும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஏற்படும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். வெளிநாட்டு நபருடன் பேச்சு நடக்கும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் பலன் உண்டு. உள்ளம் மகிழும். நிர்வாகத் திறமை அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். எதிர்பார்ப்புகள் கூடும். எதிர்ப்புக்கள் விலகும். முன்கோபத்தை தவிர்க்கவும். இடமாற்றம் நன்மை தரும். உடல்நலம் சீராகும். பணியில் உயர்வு உண்டு. அறிவாற்றல் பளிச்சிடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். எதிர்ப்புகள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். மாணவர் திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை கூடும். ஒரு சிலருக்குக் கௌரவ பதவி தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். செய்கின்ற தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். விலை உயர்ந்தப் பொருட்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்குப் பதவி உயர்வு கிட்டும். தோஷங்கள் ஒதுங்கும். பொருளாதாரம் உயரும். தொலைதூர பயணம் லாபம் தரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். திருமணமாகாத பெண்களுக்கு திருமண பாக்கியம் கை கூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடுங்கள். உடல்நலம் சிறக்கும். முகப்பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். சம்பளம் எதிர்பார்த்த படி வரும். வெற்றிப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.





வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,D

**கும்பம்:** விரக்திகள் மறையும் வாரம். சிறப்புக்கள் சேரும். இல்லத்தில் மகிழ்ச்சியும் மன அமைதியும் கூடும். கடன் கச்சைகள் தீரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். மூத்தோர்கள் மனக்குறை அகலும். குதூகலம் கூடும். குழப்பங்கள் நீங்கும். கடன் வாங்க நேரிடும். தொட்ட காரியம் ஜெயமாகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் பெருகும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். தொல்லைகள் விலகும். காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். சேமிப்பு உயரும். வம்புதும்புக்கள் ஒழியும். வீட்டுத்தொல்லைகள் விலகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழில் அபிவிருத்தி அடையும். வாக்கவாதத்தை தவிர்ப்பது நல்லது. திடீர் பயணம் உற்சாகம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். செயல்களில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். வேலைப்பளுக் கூடும். பிரார்த்தனை நிறைவேறும். பித்ருக்கள் சாபம் நீங்கும். ஆரோக்கியம் சீராகும். தனம் சேரும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.




வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 4,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,H

**மீனம்:** அனுகூலமான வாரம். சோதனைகள் நீங்கும். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். பெண்களால் பெருமை சேரும். ஆண்களின் அதிகாரம் உயரும். அவமானங்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். வெகுமானம் கிடைக்கக் கூடிய வாரம். பேச்சில் நிதானம் தேவை. வெளியூர் பயணம் வெற்றி தரும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். கனவுகள் பலிதமாகும். தாய் வழி தகராறுகள் குறையும். கடன்சுமை குறையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு கௌரவம் உயரும். திடீர் மாற்றங்கள் நிகழும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கைப் பிடிப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசு வழியில் ஆதாயம் கிட்டும். பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழில் அபிவிருத்தி அமையும். பயணங்களால் பணம் கரையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சொந்த பந்தங்களால் உதவி உண்டு. பணவரவு சுமாராக இருக்கும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. புத்தி சாதுர்யம் கூடும். காதலர் ஒற்றுமை கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.




வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிர்ஷ்ட எண்: 3,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,P

# ஸ்காபுரோ அருள்மிகு ஆதிபராசக்தி அன்னையின் திருவருள் கூடி நிற்குது இங்கே!

ஒன்ராறியோ மாநிலம் ஸ்காபுரோ நகரில் எழுந்தருளி எல்லா ஜீவராசிகளுக்கும் அன்னையாக அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஆதிபராசக்தி திருத்தலத்திற்குக் கடந்த செவ்வாய்க்கிழமை (10.05.2022) காலை அம்பாள் தரிசனம் காண எனக்கொரு அழைப்புக் கிடைத்தது. எந்தவொரு முன்கூட்டிய எண்ணமோ, விருப்போ இன்றி அருமை நண்பர் உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு.லோகேந்திரலிங்கம் என்னைக் கூட்டிச்சென்றார்.

"வாருங்கள். ஆதிபராசக்தி கோயிலுக்குப் போவோம். இன்று செவ்வாய். அம்பாளுக்கு விசேட நாள்".

நானும் இதுவரை இந்த ஆலயத்துக்குச் செல்லாத படியால் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவருடன் புறப்பட்டேன்.

அம்பாள் என்றால் சக்தி வடிவம் தானே! மனதில் மகாகவி பாரதியின் வரிகள் உற்சாகம் தந்தன.

"ஓம்சக்தி சக்தி சக்தியென்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு;
சக்தி சக்தியென்று சொல்லி - அவள்
சந்நிதியிலே தொழுது நில்லு.
ஓம்சக்தி மிசை பாடல் பல பாடு - ஓம்
சக்தி சக்தி என்று தாளம் போடு
சக்தி தருஞ் செய்கை நிலந்தனிலே - சிவ
சக்தி வெறி கொண்டு களித்தாடு!"

என் மனம் ஆனந்தக் கூத்தாடியது!



மே ஆறாம் நாள் (06.05.2022) வெள்ளி அன்று தான் ஆலய புனாரவர்த்தன ஜீர்ணோத்தாரண ஸ்வர்ண பந்தன அஷட பந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றதாக அறிந்தேன்.

ஆக, அம்பாள் முகத்தில் அளப்பரிய ஆனந்தம். அருள் நிறை தேஜஸ். பிரகாசமாகயிருந்தாள் பராசக்தி.

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி அல்லவா! ஆலய பிரதம சிவாச்சாரியாருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார் நண்பர் லோகன்.

ஐயா என்னைக் கண்டதும் "இவர் எனக்கு முன்பே தெரிந்தவர்" என்றார் புன்முறுவலுடன்.

"உங்களுக்குத் தெரியுமோ! வடஅமெரிக்காவிலேயே எல்லா விக்கிரங்கும் பூரணமாக கருங்கற்களால் வடிக்கப்பட்ட தெய்வாம்சம் பொருந்திய விக்கிரங்கள் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன!"

"அன்னை பராசக்தியின் கர்பக்கிருக அடித்தளத்தில் "சுவர்ணபந்" என்று சொல்லக் கூடிய நவபா'ாணங்கள் மேல் அன்னை எழுந்தருளியிருக்கிறாள்.

இதில் விசேடம் என்னவென்றால், அன்னையின் பாதாரவிந்தங்களிலுரந்து மேலெழும் அருள் சக்தி ஐம்பெரும் பூதங்களின் செயற்பாடுகளினால் விரயமாகாமல், அடியார்களுக்கே போய் அருள் பாலிக்கும் சக்தியாக விளங்குகிறது.

அவ்வளவு பெரும் சக்தி வாய்ந்தவள். அன்னை பராசக்தி இங்கு அருள்மிகு ஆதிபராசக்தியாகக் கோயில் கொண்டிருப்பது நாம் செய்த புண்ணியமேயாகும்.

கனடியத்தாயையும் அவளது குடிமக்களாகிய நம்மையும் அன்னை ஆதிபராசக்தி காத்து வருகிறாள் என்பது சத்திய வாக்காகும்.

**- வீணைமைந்தன்**








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்




உதயம் 1362 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 13, 2022

## Toronto Mayor John Tory and Councilor Jennifer Mckelvie visit Local Tamils owned Businesses

## ஸ்காபுறோவில் உள்ள சில தமிழர் வர்த்தக நிறுவனங்களுக்கு விஜயம் செய்த ரொறன்ரொ நகர மேயர் மற்றும் நகர சபை அங்கத்தவர் ஆகியோர்










ரொறன்ரோ மாநகர மேயர் ஜோன் ரோரி மற்றும் ஸ்காபுறொ ருஜ்பார்க் வட்டாரத்தின் மாநகர அங்கத்தவர் திருமதி ஜெனிபர் ஆகியோர் ஸ்காபுறோவில் அமைந்துள்ள இரா சுப்பர் மார்க்கட். ரூஜ் பேக்கரி, ஏர்பன் சில்கஸ் அக்ஸயாஸ் புடவை மாளிகை மற்றும் ஆகியவற்றுக்கு நட்பான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். அவர்களை வரவேற்கும் வகையில் "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் தனது பாரியார் சகிதம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

தொடர்ந்து வீடு விற்பதைத்துறை காப்புறுதித் தறை வர்த்தகப் பிரமுகர் ஜெயா நடராஜா மற்றும் யுகம் வானொலி அதிபர் கணபதி ரவீந்திரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

தொடர்ந்து இந்தக் குழுவினர் மேற்படி நான்கு தமிழர் வர்த்தக நிறுவனங்களுக்கும் விஜயம் செய்தனர்.

## குட்டிப் பாடகர் அஜீஸைப் பாராட்டி கௌரவித்த விழா





நடிகர் சூரியா- ஜோதிகா தயாரிப்பான **'Oh My Dog'** திரைப்படத்தில் வரும் ***"It's My Kinda Day"*** பாடலைப் பாடிய கனடா குட்டிப் பாடகர் அஜீஸைப் பாராட்டும் வகையில் விழா ஒன்று கடந்த வெள்ளிக்கிழமையன்று 6ம் திகதி கனடா ஸ்காபுறோ நகரில் சிறப்பாக நடைபெற்றது.

1686 **Ellesmere Road, Scarborough, Ontario (Ellesmere & McCowan)** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **JC's Banquet & Convention Centre** மண்டபத்தில் நடைபெற்ற இந்த பாராட்டு விழாவில் பல பிரமுகர்கள் உரையாற்றினார்கள். குட்டிப் பாடகர் அஜீஸ் அவர்கள் ஏற்கெனவே சில திரைப்படப் பாடல்களை பாடியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பல பிரமுகர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் ஆகியோர் உரையாற்றிய இப்பாராட்டு விழாவில் அவருக்குரிய பாராட்டுச் சான்றிதழை ரொறன்ரோ கல்விச் சபையின் உறுப்பினர்களான தம்பதிகள் பார்த்த கந்தவேள், அனு ஶ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் வழங்குவதையும் பாடகர் அஜீஸ் தனது பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிகள் ஆகியோர் சகிதம் மகிழ்ச்சியுடன் நிற்பதையும் காணலாம். *(படங்கள்:- சத்தியன்)*

## தமது மணவாழ்க்கையின் 50 ஆண்டுகள் நிறைவை அபிசேகங்கள் பூசைகள் சகிதம் கொண்டாடிய விநாசித்தம்பி துரைராஜா தம்பதி



கனடாவில் மக்கள் தொண்டராகவும் தமிழ் மொழி சார்ந்த பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருபவருமான திரு விநாசித்தம்பி துரைராஜா-திருமதி ராஜலட்சுமி தம்பதியினர் தமது மணவாழ்க்கையின் 50 ஆண்டுகள் நிறைவை அபிசேகங்கள் பூசைகள் சகிதம் கொண்டாடினர்.

திரு விநாசித்தம்பி துரைராஜா-திருமதி ராஜலட்சுமி தம்பதியினரின் மக்கள் மருமக்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவில் அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பூசைகள் மற்றும் அபிசேகங்களை சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயக் குமாரக் குருக்கள் மற்றும் சிவஸ்ரீ சோமாஸ்க் கந்தக் குருக்கள் ஆகியோர் நடத்தினர்.

## கனடா ஶ்ரீ வரசித்தி இந்துக் கல்லுரி நிர்வாகத்தினர் வழங்கிய இவ்வருடத்திற்குரிய சிறப்பு மிகு 'சிவத்தமிழ் விழா'

கனடா ஶ்ரீ வரசித்தி இந்துக் கல்லூரி" ஸ்காபுறோவில் இயங்கிவருகின்றுத. கடந்த பல வருடங்களாக தமிழ் மொழியுடன் இணைந்து சைவ சமயத்தையும் ஒழுக்க நெறிகளையும் மாணவ மாணவிகளுக்கு கற்பித்து வரும் இக்கல்லூரி கடந்த 15 வருடங்களாக சிறப்பாக நடத்தி வரும் "சிவத் தமிழ விழா" கடந்த 7ம் திகதி சனிக்கிழமை. கனடா கந்தசாமி ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

விழாவிற்கான ஏற்பாடுகளை சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களுடன் இணைந்து அவரது துணைவியார் மற்றும் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகள் ஆகியோர் செய்திருந்தனர். விழாவின் பிரதம விருந்தினர்களாக கலாநிதி நா. சுப்பிரமணியன் ஐயா அவர்களும் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ சோமஸ்க் கந்தக் குருக்கள் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர். *(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*







